www.tamilarangam.net

களத்தில்

**கவிதை மூலை**

"அடி" விழுந்தபோது
ஆர்ப்பரிக்கும் தமிழா!
இடிவிழுந்த போதும்
இடிந்திடாது நீயும்
அடிபணியாப் புலியுண்டென்று
ஆறுதல் கொள் தமிழா.

- சுடு கவி

திருவள்ளுவர் ஆண்டு 2027 சுறவம் 10 (24.01.1996) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தி நாளி அன்பளிப்பு 60p

# உலங்கு வானூர்தியுடன் 39 படையினர் பலி

சிறீலங்கா விமானப்படைக்குச் சொந்தமான இராணுவப் போக்குவரத்து உலங்கு வானூர்தி 22-01-96 திங்களன்று மதியம், விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புப் படையணியால் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது.

இதிற் பயணம் செய்த, முப்பத்தியொன்பது படையினரும் கொல்லப்பட்டுள்ளனர். பலாலித் தளத்தில் இருந்து புறப்பட்டுச் சென்ற மேற்படி உலங்கு வானூர்தி, வெற்றிலைக் கேணியை அண்மித்தபோது, அங்கு தயாராக நின்ற, விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புப் படையணியின் தாக்குதலுக்கு இலக்கானது. இரசியாவிடமிருந்.து

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்



சிறீலங்கா இழந்த இரசியத் தயாரிப்பான உலங்கு வானூர்தியினத் தயாரிப்பையே படத்திற் காண்கிறீர்கள்.

## களத்திலிருந்து களத்திலுக்கு

# தலைவர் வாழ்த்து



'களத்தில்' செய்தித் தாளின் நூறாவது இதழ்நிறைவை முன்னிட்டு, தமிழின் தலைவன் வழங்கிய வாழ்த்துச் செய்தி

**தலைமைச் செயலகம்**

**தமிழீழம்**

10-01-1996

அன்புடையீர்!

தமிழீழ விடுதலைப் போராட்டக் களத்தின் உண்மைக் குரலாக ஒலித்துவரும் 'களத்தில்" பத்திரிகை இம்முறை நூறாவது இதழாக வெளிவருவதையிட்டு நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

என் இனியதம்பி கேணல் கிட்டுவால் ஆரம்பிக்கப்பட்டு, ஆறு ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக வெளிவரும் இச் செய்தி ஏடு, தமிழீழ மக்களின் உரிமைப் போராட்டம் பற்றிய உண்மைச் செய்திகளை உலகம் வாழ் ஈழத்தமிழருக்கு எடுத்துரைத்து வருகின்றது. தரமான அரசியல் ஆய்வுக்கட்டுரைகள் மட்டுமன்றி, தமிழீழ மண்ணின் போராட்ட வாழ்வைப் பிரதிபலிக்கும் கலை, இலக்கிய படைப்புக்களையும் தாங்கி வருகின்றது. நேர்மை, உண்மை என்ற தார்மீக அறத்தைப் பேணி எமது தேசியப் போராட்டத்தின் புனித இலட்சியத்தை உலகெங்கும் பறைசாற்றி வரும் இந்தச் செய்தித்தாள், பரந்த வாசகர் வட்டத்தை எட்டிப் பிடித்திருக்கின்றது. தமிழீழக் களத்தின் யதார்த்த நிலையை உலக அரங்கிற்கு எடுத்துச் செல்லும் 'களத்தில்" பத்திரிகைக்குப் புலம் பெயர்ந்து வாழும் எமது மக்கள் தொடர்ந்தும் தமது நல்லாதரவை வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

'களத்தில்" பத்திரிகை தனது உயர்ந்த பணியைத் தொடர்ந்து ஆற்றுவதற்கு எனது நல்லாசியைக் கூறுவதுடன், பத்திரிகையின் வளர்ச்சிக்காகவும் உயர்ச்சிக்காகவும் அயராது உழைத்துவரும் ஆசிரியர் குழுவிற்கும், ஏனையோருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

**வே. பிரபாகரன்**

**தலைவர்**

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

# மன்னாரில் சிறீலங்காவின் குண்டுவீச்சுக்கு அப்பாவிப் பொதுமக்கள் பலி

## 5பேர் பலி 20 பேர் படுகாயம்

மன்னார் மாவட்டம் முழங்காவில் எனும் பகுதியிலுள்ள இரணைமாதா நகர்க் குடியிருப்பு மீது, சிறிலங்கா வான்படையின் புக்காரா விமானம் நடாத்திய கோரமான 'றொக்கட்' தாக்குதலில் 3 சிறுவர்கள் உட்பட 5 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 20 பேர் படுகாயமடைந்துள்ளனர். இதிற் பலியான அனைவரும் இடம்பெயர்ந்து இரணைமாதா நகரில் வசித்து வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

21-01-1996 அன்று மதியம் 1.37 மணியளவில் முழங்காவில் வான்பரப்பில் திடீரெனத் தோன்றிய புக்காரா விமானம், மக்கள் அடர்த்தி நிறைந்த இப்பகுதியை நோக்கி ஆறு 'றொக்கட்'டுகளை வீசியது. இதன்போது 2 சிறுவர்களும், 2 இளம் வயதினரும் அவ்விடத்திலேயே பலியாகினர். மற்றைய சிறுவன் கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட பின் அங்கு

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

# "சூரியக் கிரகணம்" நடவடிக்கைக்கு புலிகள் பலத்த எதிர்த்தாக்குதல்

மட்டக்களப்பு மாவட்டத்தின் காட்டுப் பிரதேசங்களில், தமிழ் மக்களுக்கெதிரான இனஅழிப்புப் போரின் இன்னோர் கட்டமாக, 'சூரியக்கிரகணம்' எனும் பெயரில் ஓர் இராணுவ நடவடிக்கையைச் சிறிலங்காப் படையினர் தொடங்கியுள்ளனர். மிகையொலித்தாரை விமானங்கள் (சுப்பசொனிக்), புக்காரா, மற்றும் சியாமார்செட்டி குண்டு வீச்சு விமானங்களுடன் புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட விமானங்களின் மூர்க்கத்தனமான குண்டுத் தாக்குதல்களுடனும், அகோர எறிகணை வீச்சுக்களுடனும் மக்கள் குடியிருப்புக்கள் மீது தாக்குதலைத் தொடுத்தவண்ணம் இந்நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது.

இக் கண்மூடித்தனமான தாக்குதல்களினாற் பெருமளவு மக்கள், சிறிலங்காப் படைகளிடம் உயிருடன் பிடிபட்டால் நடக்கப் போகும் விளைவுகளை மனதிற் கொண்டு, எறிகணை வீச்சுக்களிலிருந்து தம்முயிரைப் பாதுகாக்கப் பாதுகாப்பான இடம்நோக்கி இடம்பெயர்ந்துள்ளனர். குறிப்பாக ஏறாவூர், மற்றும் அதனை அண்டிய பகுதியிலிருந்தும் பெருமளவு மக்கள் தமது வாழ்விடங்களை விட்டு இடம்பெயர்ந்து வருகின்றனர்.

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

# மணலாற்றில் காவலரண் தகர்ப்பு

## 7 படையினர் பலி ஒரு போராளி வீரச்சாவு

மணலாற்றில் பராக்கிரமபுரம் எனும் சிறிலங்காவின் இராணுவ முகாம் காவலரண்கள் விடுதலைப் புலிகளால் 22 -01- 1996 அன்று அதிகாலை 1.00 மணியளவில் தாக்கப்பட்டது. இத் தாக்குதல் தொடங்கியதும் இம் முகாமிலுள்ள படையினருக்கு உதவவென, தலைமை முகாமிலிருந்து மோட்டார் வண்டிகளிற் புறப்பட்டு வந்த படையினர் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இவ் வெற்றிகரமான தாக்குதலில் 3 பொலிசார் உட்பட 7 படையினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்துள்ளனர். தாக்குதலையடுத்து, உடனடியாகக் காவலரண்களைக் கைப்பற்றிய விடுதலைப் புலிகள், ஒரு மணித்தியாலத்திற்கு மேலாக அங்கு தரித்து நின்றுவிட்டுப் பாதுகாப்பாகத் தளம் திரும்பினர். இத் துணிகரத் தாக்குதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார். இவருக்கு எமது வீரவணக்கங்கள்.

இதேவேளை, சுன்னாகத்திலும், கந்தரோடையிலும் ஆக்கிரமித்து நிற்கும் இராணுவத்தினர் மீதும் விடுதலைப் புலிகள் திடீர்த் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கொழும்பில் தங்கியுள்ள தமிழர்களை வலிகாமத்திற்கு அனுப்ப ஆலோசனை

## –தமிழ்க் குழுவிடம் சந்திரிகா தெரிவிப்பு

சிறிலங்கா இராணுவத்தின் இன அழிப்புக்கு அஞ்சி வலிகாமம் பகுதியிலிருந்து ஒட்டுமொத்தமாக இடம்பெயர்ந்து வந்த மக்கள் மீண்டும் அங்கு சென்று குடியமர மறுத்து வருவதைத் தொடர்ந்து, கொழும்பிலுள்ள தமிழ்மக்களைப் பலவந்தமாக வலிகாமம் பகுதிக்குக் கொண்டு சென்று அங்கு குடியமர்த்துவது குறித்து, சிறிலங்கா அரசு பரிசீலித்து வருகிறது. மேலும் வவுனியா நகரை அண்டியுள்ள பகுதியிலுள்ள நிலையங்களில், சிறிலங்காப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதமிழ் மக்களையும் அரசாங்கம் வலிகாமம் பகுதிக்குக் கொண்டு செல்ல முயற்சிப்பதாகவும் தெரியவருகிறது.

வலிகாமம் பகுதியை மக்களற்ற பிரதேசமாக ஆக்கிரமித்துள்ள சிறீலங்கா அரசு, அங்கு தனது நிர்வாகத்தை எவ்வாறு ஆரம்பிப்பது என்று தெரியாத நிலையிற் திண்டாடிக் கொண்டிருப்பது தெரிந்ததே.

நிவாரணம், புனர்நிர்மாணம், மீளக் குடியேற்றம், அபிவிருத்தி எனச் சிறிலங்கா அரசாங்கம் பலவாறாக அறிவித்தும் மக்கள் அங்கு செல்லாததையடுத்து, மாற்று நடவடிக்கைகள் குறித்துச் சிந்தித்து வருகிறது.

இந்நிலையில் கொழும்பில் தங்கியுள்ள தமிழர்களை வலிகாமத்திற் குடியேற்றுவது குறித்து, தாம் ஆராய்ந்து வருவதாகச் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்துள்ளார்.

அண்மையில், தன்னைச் சந்தித்த ஈ.பி.ஆர்.எல்.எவ் குழுவினரிடம் இது பற்றிப் பிரஸ்தாபித்த அவர், கொழும்பில் இருக்கும் பல்லாயிரக்கணக்கான தமிழர்களைத் திருகோணமலையிலிருந்து கப்பல் மூலம் அல்லது பயணிகள் விமானங்கள் மூலம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்க வசதி செய்து கொடுப்பது பற்றி, ஆலோசிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இக்குழுவினரும் மக்களற்ற வலிகாமம் பகுதிக்குச் செல்ல மறுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# திருமலையில் திடீர் தாக்குதல்

திருகோணமலை மாவட்டத்திலுள்ள வெல்கம விகாரையிற் தமிழ் மக்களின் குடியிருப்புக்களைச் சுற்றி வளைத்துத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக ரோந்து சென்று கொண்டிருந்த சிறிலங்காப் படையினர் மீது, திடீரென அங்கு தோன்றிய விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் 3 இராணுவத்தினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட ஒருவர் பலத்த காயம் அடைந்தார். 12 –01–1996 அதிகாலை 6.15 மணியளவிலேயே இத்தாக்குதல் நடைபெற்றது. வெல்கம விகாரை இராணுவ முகாமில் இருந்து கின்னியாச் சந்திக்கு ரோந்து வந்த இராணுவத்தினரே புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானார்கள். முகாமில் இருந்து 500 மீற்றர் தொலைவில் வைத்தே இத்தாக்குதல் நடாத்தப்பட்டது. இத்தாக்குதலில் இராணுவத்தினரின் சில ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது. விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித இழப்பும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# வன்னியில் புதிய கிராமங்கள்

யாழ்ப்பாணம், வலிகாமப் பகுதியில் இருந்து வன்னிக்கு இடம்பெயர்ந்த மக்களைக் குடியமர்த்துவதற்கான சகல வசதிகளையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் பல தொண்டர் நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன. இதனடிப்படையில் 15–01–1996 அன்று கிளிநொச்சியில் இரண்டு குடியிருப்புத் திட்டங்கள் திறந்து வைக்கப்பட்டன. காலை எட்டு மணியளவில் 'மில்லர் குடியிருப்புத் திட்டம்' திறந்து வைக்கப்பட்டது. இக் குடியேற்றத் திட்ட ஆரம்ப விழாவை, தமிழீழ அரசியற்றுறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அவர்கள், தேசியக் கொடியை ஏற்றித் திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து, 'கெயர்' நிறுவன வெளிநாட்டுப் பிரதிநிதி பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்துவைத்தார். இந்நிகழ்வில் மற்றைய பல தொண்டர் நிறுவனங்களும் பங்கு பற்றின. இந்த நிகழ்வின்போது, 100 வீடுகள் மக்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டதோடு, உதவிப்பொருட்களும் வழங்கப்பட்டன. வீடுகளின் முன்னால் மக்கள் பொங்கல் பொங்கி வீடுகளைப் பெற்றுக் கொண்டனர்.

இரண்டாவது குடியிருப்புத் திட்டமான 'காந்தருபன் குடியிருப்புத் திட்டம்' காலை 10.30 மணிக்குக் கோணாவிலில் திறந்து வைக்கப்பட்டது. அகதிகளுக்கான ஐக்கிய நாட்டுப் பிரதிநிதி விளக்கேற்ற, கிளி–நொச்சி அரச அதிபர் இக்குடியிருப்பைத் திறந்து வைத்தார். தொடர்ந்து, அக்குடியிருப்பில் கட்டி முடிக்கப்பட்ட 156 வீடுகள் மக்களுக்குக் கையளிக்கப்பட்டன. மேலும், 44 வீடுகள் அங்கே கட்டி முடிக்கப்படவுள்ளன. மேலும் இக்குடியிருப்பில் இரண்டு குழாய்க் கிணறுகள், முன்பள்ளி, பொதுஅலுவலகம் ஆகியனவும் திறக்கப்பட்டன.

இடம்பெயர்ந்து அல்லலுறும் மக்களின் வாழ்க்கையினை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்குத் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் தம்மால் இயன்ற இதற்குத்தேவையான முழு வளங்களையும், சக்திகளையும் பயன்படுத்தி வருகின்றன. இப்புனிதப் பணியினை இடம்பெயர்ந்த சகல மக்களுக்கும் செய்வதே இவர்களின் குறிக்கோள். ஆயினும் இதற்குப் பெருமளவு நிதி தேவைப்படுகின்றது. இந்நிதித் தேவையினை நிறைவுசெய்ய, புலம் பெயர்ந்து வாழும் எம்மினத்தையே இவ்விரு அமைப்புக்களும் பெருமளவு எதிர்பார்ப்பதுடன், திட்டமிட்ட வேலைகளையும் துரித கதியில் செய்து வருகின்றார்கள்.

# கொடுப்பனவுகளை நிறுத்துமாறு சிறீலங்கா அரசு உத்தரவு

சிறிலங்கா இராணுவத்தின் மிலேச்சத்தனமான தாக்குதல்களால் உயிரை இழந்த அல்லது பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கும், காயமடைந்த பொதுமக்களுக்கும் எவ்வித இழப்புத் தொகையையும் வழங்கக் கூடாதெனச் சிறிலங்காவின் புனர்வாழ்வு அமைச்சு உத்தரவு பிறப்பித்துள்ளது எனக் கிளிநொச்சி அரச அதிபர் தெரிவித்துள்ளார். சிறிலங்கா விமானப்படையினாலும் செல்தாக்குதலினாலும் கிளிநொச்சி மாவட்டத்தில் 125 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 60 பொதுமக்கள் ஊனமுற்றுள்ளனர். இவர்களுக்கான இழப்பீட்டுத் தொகையாக 6,750,000 ரூபாய் வழங்க வேண்டியிருந்தது. இந்த நிலையிலேயே அரசு இவ்வாறான பணிப்புரையை விடுத்துள்ளது.

இதுபோன்று யாழ். மாவட்டத்திலும் தமது படையினரால் மேற்கொள்ளப்பட்ட கொடுமைகளால் பல பொது மக்கள் குடும்பத்தவர்களை இழந்துள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர். இவர்களுக்குரிய இழப்புத் தொகையும் இதுவரை கொடுக்கப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# விடுவிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கும் திடுக்கிடும் தகவல்கள்

## சூசையப்பர் தேவாலயம் சித்திரவதைக் கூடமாகியுள்ளது

அண்மையில், தென்மராட்சியிலிருந்து புத்தூருக்குத் தமது உடைமை–களை எடுக்கச் சென்ற மக்கள், இராணுவத்தால் தாக்கப்பட்ட சம்பவம் யாவரும் அறிந்ததே. இதிற் சுமார் 50 பேர் இராணுவத்தின் ஆக்கிரமிப்புப் பகுதிக்குள் சிக்கியிருந்தனர். இராணுவத்தினர் இவர்களைக் கைதுசெய்து அச்சுவேலிச் சூசையப்பர் தேவாலயத்தில் வைத்திருக்கின்றனர்.

இவர்களில் 5 பேர் இராணுவத்தால் மிகுந்த துன்பத்திற்குள்ளாக்கப்பட்டு, பலத்த விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

'நாம் வீட்டுக்குச் சென்று எமது துவிச்சக்கர வண்டிகளைப் பூட்டி விட்டு, எமது பொருட்களை எடுத்துக் கொண்டிருக்கும் போது திடீரென அங்கிருந்தவர்கள் பலமாகச் சத்தமிட்டபடி ஓடினர். இதைப்பார்த்த நாமும் ஓடமுற்படுகையில், அங்கு வந்த இராணுவத்தினர் எம்மீது கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதில், பொன்னுத்துரை என்பவர் அவ்விடத்திலேயே படுகாயமடைந்து வீழ்ந்து விட்டார். பின்னர் அகப்பட்ட சகலரையும் கண்களைக் கட்டி வீடுகளுக்கூடாகவும், ஒழுங்கைகளுக் கூடாகவும் வளைத்து வளைத்துத் தேவாலயத்திற்குக் கொண்டு சென்றனர். வலிகாமத்தில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிக்குள் இருந்த (பெரும்பாலும் வயோதிபர்கள்) 300க்கும் மேற்பட்டவர்கள் தேவாலயத்திற் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். தேவாலயத்தைச் சுற்றி முட்கம்பி வேலிகள் போடப்பட்டுள்ளன. படையினர் குறிப்பிடும் பகுதிக்குள்ளேயே நடமாடலாம். இங்கு வைத்து எம்மைக் கடுமையான விசாரணைக்கு உள்ளாக்கினர். இங்கு உள்ளவர்கள் எல்லோரும் இந்நரகத்திலிருந்து தம்மை விடுவிக்கும்படி தினம் தினம் இராணுவத்தினரிடம் மன்றாடியபடி உள்ளனர். தமது குடும்பத்தவர் களைப் பிரிந்த நிலையில் உள்ள இவர்கள், மிகவும் கவலையுடன் காணப்படுகின்றனர். உயிர்தப்ப வேண்டுமென்பதற்காக இராணுவத்தினர் தந்த உணவுகளை உண்கிறார்கள். எனினும் இவ்வுணவுகள் வாயில் வைத்து உண்ணக்கூடிய நிலையில் இல்லை.'

இவ்வாறு தமது பயங்கர அனுபவங்களை விபரித்தனர். மேலும் அவர்கள் தெரிவிக்கையில், 'இவ்வாறான சூழ்நிலையால் 30–10–95 முதல் இதுவரை இங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் 37 பேர் மரணமாகியுள்ளனர். இவர்களின் உடல்களை அச்சுற்றாடலிலேயே, தடுத்து வைக்கப்பட்டவர்களைக் கொண்டு கிடங்குகள் வெட்டிப் புதைத்துள்ளனர். போதிய உலர் உணவு, மருத்துவ வசதிகள் இல்லாமையினால் மேலும் பலரது நிலை கவலைக்குரியதாகவே உள்ளது. தினமும் உழவு இயந்திரத்தில் வரும் படையினர் அப்பகுதிகளில் உள்ள வாழைக்குலை, பலாப்பழம் போன்றவற்றை வெட்டிக்கொண்டு செல்கின்றனர். இதன்போது கோழிகளையும், ஆடுகளையும் கூட பிடித்துச் செல்கின்றனர்' எனக் கூறினர்.

விடுவிக்கப்பட்ட கருணானந்ததேவி என்பவர் கூறியதாவது, 'கைது செய்த படையினரிடம் வீட்டுக்குப் போக அனுமதி கேட்டேன். அவர்கள் 'வந்த வழியாலேயே திரும்பி அனுப்புகிறோம்' என்றனர். எனது உயிருக்கு உத்தரவாதம் இல்லாத இந்நிலையால் என்னைச் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்குமாறு கேட்டேன். அதற்கு, 'அப்படியெல்லாம் அனுப்ப முடியாது. அவர்களிடம் கையளித்தால் கைது செய்யப்பட்ட

தொடர்ச்சி 19 ஆம் பக்கம்

# சோதனைகள் சுற்றிவளைப்புக்கள்

'இலங்கையில் வாழ்கின்ற மக்கள் அனைவரினதும் கௌரவம் பேணிப் பாதுகாக்கப்படும்' எனச் சிறிலங்கா அரசின் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இடைவிடாது கூறிவருகின்ற போதிலும், தென்பகுதியில் வாழும் தமிழ் மக்களின் இனக் கௌரவம் காற்றிற் பறப்பதாகவும் அங்குள்ள தமிழர்கள் பெருத்த அவமானங்களையே சந்திப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழனாகப் பிறந்த எவரும் எந்த வீதியிலும் சுதந்திரமாக நடமாட முடியாது எனவும் அடையாள அட்டை, பாஸ் பரிசோதனை, சுற்றிவளைப்பு, தேடுதல் என்பனவற்றிலிருந்து தப்ப முடியாது எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. தேவையான ஆவணங்களைக் கைவசம் வைத்திருப்போர் கூடத் தமிழர் என்றதும் பலநாட்கள் தடுத்து வைக்கப்படுகின்றனர். கொழும்பிற்குப் பல்வேறு அலுவல்களிற்காகச் செல்பவர்கள், மற்றும் மலையகத் தமிழர்கள் உட்பட எவராயினும் தமிழர்கள் தெருவில் அகப்பட்டால், அவர்கள் துருவித் துருவி விசாரணை செய்யப்படுவதுடன், பொலிஸ் நிலையத்தில் அடைத்து வைக்கப்படும் நிலையும் ஏற்படுகிறது.

கொழும்பிலே நிரந்தரமாக வசிப்பவர்களும் யாழ்ப்பாணம் என்றால், என்னவென்றே அறியாதவர்களும் கூட இந்நிலைக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

இதேவேளை, சிறிலங்கா அரசாங்கத்தினால் அண்மையில் அமைக்கப்பட்ட சிவில் பாதுகாப்புக் குழுவினர், பெரும் அடாவடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் தமிழர்கள் மீது 'புலி' எனக் குற்றம் சுமத்திப் படையினரிடம் சிக்க வைப்பதிற் கண்ணும் கருத்துமாய் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# நிதிக் கடன் மீளளிப்பு

தமிழீழ மீட்பு நிதிக்கடனில் 1995–ஆம் ஆண்டுக்கான மீளளிப்பிற்காக மூவாயிரம் பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என, தமிழீழ நிதித்துறை அறிவித்துள்ளது. இவர்களின் கடன் எண்பட்டியல் 15–12–95 முதல் ஈழநாதம் செய்திதாளில் வெளியிடப்பட்டது. மீளளிப்பு நடைமுறைகள் விபரமும், மீளளிக்கப்படும் இடம், நாள் பற்றியும் பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப்படும் எனவும் அவ்வறிவித்தலில் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் வன்னி மாவட்டத்திற்கு இடம்பெயர்ந்தோர், அந்த மாவட்டத்திலேயே அவர்களுக்கான மீளளிப்பைப் பெற்றுக்கொள்ள வசதிகள் செய்து தரப்படும் என்றும் நிதித்துறை அறிவித்துள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# அடுத்தது என்ன?

தமிழீழ மக்களை, அவர்களது தாயகத்திலேயே அகதிவாழ்வை மேற்கொள்ளும் வண்ணம் இனஅழிப்பு நடவடிக்கைகளை, தனக்குக் காலனித்துவவாதிகளின் தவறுகளால் கிடைத்த சட்டபூர்வ அரசாங்கம் என்ற மகுடத்துள் நடாத்திவரும் சிறிலங்கா அரசாங்கம், தமிழீழ மக்களின் அரசியற் தலைமைத்துவமான தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட சிந்தனைமிகு முன் நடவடிக்கைகளினாற் தனது நோக்கு மாற்றியமைக்கப்படுவதைக் கண்டு திகைப்புற்றுள்ளது. வன்னிப் பிரதேசத்தை மையமாகக் கொண்டு தேசிய பாதுகாப்புடன் கூடிய அரசு நோக்கிய அரசை, தமிழீழ மக்கள் தொடர்ந்தும் நடாத்துவதக்கான சூழ்நிலையை விடுதலைப் புலிகள் உருவாக்குவார்கள் எனக் கனவிலும்கூட நினைத்துப் பார்க்காத சிங்கள- பௌத்த பேரினவாதிகள், இனி எப்படி அதையும் இராணுவ ஆக்கிரமிப்பு மூலம் சிதறடிக்கலாம் எனச் சதித்திட்டம் தீட்டிவருவது புதுமையானதொன்றல்ல.

இதேவேளை, தமது கட்டுப்பாட்டுள் வந்துவிட்டதாகச் சிறிலங்கா உலகெல்லாம் பிரச்சாரம் செய்து வந்த தென் தமிழீழத்தில், எண்பது வீதமான பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் உண்டென்ற உண்மையை உலகு உணர்ந்துவிட்டது. அதிலும் தென்தமிழீழ மீட்புப் பணியின் வேகம் கண்டு, தென்தமிழீழத்தில் முழுப் பிரதேசமுமே விடுதலைப் புலிகளினால் விடுவிக்கப்படும் காலம் அதிக தூரத்தில் இல்லை எனச் சர்வதேச ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இதனால், யாழ் குடாநாடு மீதான சிறிலங்காவின் இன்றைய இராணுவ ஆக்கிரமிப்பையும் நீண்ட காலம் நீடிக்க, விடுதலைப் புலிகள் அனுமதிக்க மாட்டார்கள் என்ற அரசியல் யதார்த்தத்தைச் சர்வதேச உலகம் ஆழமாக உணர்ந்துவருகிறது.

தமிழீழ மக்களையும் தமிழீழத் தாயகத்தையும் சிதறடிக்கச் சந்திரிகா போட்ட இராணுவ, அரசியற் திட்டத்தை முறியடித்து, அதே திட்டத்தைப் பயன்படுத்தியே தமிழீழ மக்கள் எத்தகைய எதிர்ப்புக்களையும் எதிர்கொண்டு தமது தாயக எல்லைக்குள் சமூக, பொருளாதார, கலாச்சார நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் பேணி, கூடிவாழும் மனதுடைய மக்களாக, நாட்டினமாக வாழக்கூடிய நிலையைத் தமிழீழ மக்களின் இன்றைய அரசியற் தலைமைத்துவமான தமிழீழ விடுதலைப் புலிகள் உலகுக்குத் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

இதனால், விடுதலைப் புலிகளே தமிழீழ மக்களின் ஏக பிரதிநிதிகளாகத் திகழ்கின்றனர் என்ற உண்மை சர்வதேச அரசியல் அவதானிகளால் இனங்காணப்பட்டுமுள்ளது. இதனாலேயே, தமிழீழத் தேசம் சர்வதேச அங்கீகாரத்தைப் பெறுவது ஒன்றே மீதியாக உள்ளது எனச் சர்வதேச தந்திரோபாய மதிப்பீடுகள் கூறுகின்றன.

இந்நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல், இராணுவ உறுதிப்பாட்டை எதிர்கொள்ள முடியாது எனக் கண்ட சிறிலங்கா அரசு, தமிழீழ மக்களைத் தொடர்ந்தும் இன அழிப்புக்கு உள்ளாக்குவதையே தனது அடுத்த கட்ட நடவடிக்கையாகத் தொடரப்போகிறது. சிறிலங்கா அரசு, காலனித்துவ வாதிகளிடமிருந்து தனக்கு அதிகாரத்தை மாற்றிய நாள் முதல், தமிழ் மக்களை விரட்டியடித்து இடம்பெயர வைத்து வருகிறது. தமிழீழப் பிரதேசங்களான அம்பாறையின் முழுப்பகுதி, மட்டக்களப்பு- திருகோணமலை ஆகியவற்றின் கணிசமான பகுதி, முல்லைத்தீவு- வவுனியாப் பிரதேசங்களின் எல்லைப்புறங்கள் என்பன சிங்கள மயமாக்கப்பட்டு மக்கள் விரட்டியடிக்கப்பட்டதினாலேயே தமிழர் பிரச்சனை காலூன்றியது.

அடுத்து, கொழும்பு நகரை மையமாகக் கொண்ட தமிழர்களின் வர்த்தக, கைத்தொழில், வாழ்வகங்கள் என்பன எரிக்கப்பட்டு, நாசமாக்கப்பட்டு அவர்கள் தமிழர் தாயகப் பிரதேசமான வடக்கு- கிழக்குக்குப் பலமுறை விரட்டப்பட்டனர். 1993ம் ஆண்டுப் புள்ளிவிபரப்படி, சிறிலங்காவின் இராணுவ ஒடுக்கு முறைகளால் தீவுப்பகுதி, தென்தமிழீழப் பகுதிகளை உள்ளடக்கிய ஐநூறாயிரத்துக்கும் அதிகமான மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்தனர்.

இந்த அனுபவங்களின் அடிப்படையிலேயே யாழ் குடாநாட்டு மக்கள், தமக்கான பாதுகாப்புப் பிரதேசத்தைத் தாமே உருவாக்கி வன்னிக்கு இடம் பெயர்ந்துள்ளனர். இவர்களைத் தமது ஆக்கிரமிப்புப் பகுதிக்குத் திரும்பிவரும்படி அழைக்கும் சந்திரிகா அரசு, 8-1-1996ல் தமது உடைமைகளை எடுக்கவென வீடுகளுக்குச் சென்றவர்களைக் கைதாக்கி, இனப்படுகொலைக்கும் இனத்துன்புறுத்தலுக்கும் உள்ளாக்கியுள்ளது. 37 தமிழர்கள் சிறிலங்காப் படையினரால் நாஜி முகாம்போல் மாற்றப்பட்டுள்ள அச்சுவேலி சூசையப்பர் கோவிலில் வைத்து கொலைசெய்து புதைக்கப்பட்டுள்ள இச்செய்தி, சர்வதேசத்தவரையும் திடுக்கிட வைத்துள்ளது. இந்நிலையில் சர்வதேசத்தவர்கள், தமிழீழத் தேசம் விடுதலை பெறுவதற்கான அனைத்து உதவிகளையும், தமிழீழத் தேசத்தின் தேசியப் பாதுகாப்புக்குப் பொறுப்பான தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அளித்திட முன்வர வேண்டுமென்பதே தமிழீழ மக்களின் நியாயமான வேண்டுகோளாகும். இதன் மூலமே சிறீலங்காவின் அடுத்த இனவழிப்பிலிருந்து தமிழ் மக்களைப் பாதுகாக்க முடியும்.

## போரிற் பொருது
## தாயகம் மீட்பவர்
## பாரிற் சிறந்த
## தெய்வம் நிகர்ப்பர்

பெறுதலும் போற்றலும் பெண்ணாள் பொறுப்பு
பெரியோனாக்குதல் தந்தையின் பொறுப்பு
போர்க்கலம் பெருக்கல் பொறிவலர் பொறுப்பென
பொன் முடி புகன்றார் புறநானூற்றில்
அன்னவர் அறைந்த தழியா மொழியென
இந்நாள் உணர்ந்தனர் ஈழப்போர்வழி
மேலும் சிலநாள் இப்போதுணர்ந்துளோம்
போரிற் பொருது தாயகம் மீட்பவர்
பாரிற் சிறந்த தெய்வம் நிகர்ப்பர்
பொருளை வழங்கல் புலம்பெயர்ந்தோர் கடன்
மருளா திருத்தல் மாந்தர் தங்கடன்
சிங்களச் சிற்றினன் சாற்றிடு பொய்களை
மெய்யென எழுதிடும் ஆங்கில வேடுகள்
பொய்மையைச் சாடல் எழுத்தின் கடனென
பொங்கலை நினைக்க முடியா அளவில்
பொங்கிய துயரில் வெம்பியே வாழும்
புலம் பெயர் தமிழரின் பெயரால் வேண்டினன்.

-கவிஞர் சிறீக்கந்தராசா

# தமிழ்மக்கள் மீது சந்திரிகா படையின் பேடித்தனமான தொடர் தாக்குதல்கள்

சந்திரிகா அரசின், முப்படையினரும் தமிழ் மக்கள் மீதான பேடித்தனமான இனவெறித் தாக்குதல்களைத் தொடர்ந்து நடாத்தி வருகின்றனர். சனாதிபதி சந்திரிகா ஒரு முனையில், "சமாதானத்திற்கான போர்" என்று பேசிக்கொண்டு மறுமுனையில் அவரது படையினர் மூலம் வெறித்தனமான இன அழிப்புப் போரில் ஈடுபட்டு வருகின்றார்.
விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் ஊடுருவ முடியாமல் எறிகணை மற்றும் விமானத் தாக்குதல்களாலும் தமிழ் மக்களைப் படுகொலை செய்து வருகின்றனர்.

## வடமராட்சி நோக்கித் தினசரி எறிகணை வீச்சு

பலாலியில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்காப் படையினர், வடமராட்சியின் பல பகுதிகள் மீதும் தொடர் எறிகணைத் தாக்குதல்களை இரவு பகல் என்றுபாராது மக்கள் குடியிருப்புக்களை நோக்கி மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறான தாக்குதல்களில் 17-01-1996 அன்று காலை 8 மணியளவில் வல்வெட்டித்துறை நவீன சந்தைப் பகுதியில் நடத்தப்பட்ட வெறித்தனத்திற்கு மூன்றுபொதுமக்கள் அவ்விடத்திலேயே பரிதாபகரமான முறையிற் பலியாகியுள்ளனர். மேலும் இருவர் வைத்தியசாலையில் மரணமடைந்துள்ளனர். நவீன சந்தையில் அமைந்துள்ள, 'சைக்கிள்' கடை, எரிபொருள் வர்த்தக நிலையம், ரொட்டிக்கடை என்பன பலத்த சேதமடைந்துள்ளன. வேலாயுதம் யசோதா வயது 18, யோகராசா பாமினி வயது 16, ஐயாத்துரை பாலச்சந்திரன் வயது 50, மாணிக்கம் மூர்த்தி வயது 68, பூதத்தம்பி கிருஸ்ணமூர்த்தி வயது 42 ஆகியோரே அரச பயங்கரவாதத்திற்குப் பலியானவர்கள் ஆவர். தலத்தில் இறந்த இருவரது உடல்கள் அடையாளம் காண முடியாதவாறு சிதைந்துவிட்டன.
இதில் இறந்த பூதத்தம்பி கிருஸ்ணமூர்த்தி புத்தூரைச் சேர்ந்தவரென்றும் இராணுவ ஆக்கிரமிப்புக் காரணமாக வடமராட்சிக்கு இடம்பெயர்ந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதேவேளை, வடமராட்சிக் கடற்கரையில் அதிகாலை மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலிற் பல பொதுமக்கள் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர். 200க்கும் மேற்பட்ட வியாபாரிகள் கூடியிருந்தவேளை, ஏவப்பட்ட எறிகணை சில யார் தூரத்துக்கப்பாற் கடலில் வீழ்ந்து வெடித்ததில் நல்வாய்ப்பாக உயிரிழப்புக்கள் ஏதும் ஏற்படவில்லை. பலாலியிலிருந்து எறிகணைகள் ஏவப்படுவதற்குச் சற்று முன்னதாகக் கடற்படையினர், கரையோரப் பகுதிகள் நோக்கிப் பீரங்கித் தாக்குதலை நடாத்தியுள்ளனர். வல்வெட்டித்துறை, பொலிகண்டி, திக்கம் கடற்கரைப் பக்கமாக நடாத்தப்பட்ட இத்தாக்குதல்களாற் பல மீனவர்கள் தமது மீன்பிடி உபகரணங்களையும் பிடித்த பெருந்தொகை மீன்களையும் கடலிலே கைவிட்டு, கடலிற் குதித்து நீந்திக் கரைசேர்ந்துள்ளனர்.

## வருந்துகிறோம்

தொழிநுட்பக் கோளாறு காரணமாக நூறாவது சிறப்பிதழைச் சிறந்த முறையில் வண்ணக் கலவை யாகத் தரமுடியாது போயிற்று.
"களத்தில்" நவீன கணனி மூலமான வரைபமைப்புக்களுக்குட்படுத்தப்பட்டு நவீனமயப்படுத்தப்படுகிறது என்பதனையும், அதனாலேயே தவறுகள் தவிர்க்கமுடியாது போய்விடுகிறது என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம். எனினும், தொடரும் காலங்களிற் கூடுமானவரை தரம் நோக்கி முயற்சிப்போம். வாசக அன்பர்கள் இதனைப் பொறுத்தருளக் கோருகின்றோம்.

## வீரமரணச் செய்தியில் திருத்தம்

மூத்த தளபதி கிட்டு அண்ணாவுடன் கப்பலிற் சென்றபோது வீரமரணத்தைத் தழுவிக்கொண்டவர்களில், கப்டன் நாயகன் என்பவரும் வீரமரணமடைந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. நாயகன் உயிருடன் இருப்பதாகவும், கப்டன் பிரபா என்பவரே வீர மரணமடைந்திருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இராணுவ நடவடிக்கையைப் பொறுத்தவரை அரசு தோல்வியையே சந்தித்துள்ளது

## குமார் பொன்னம்பலம் பி.பி.சிக்கு பேட்டி

"சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையைப் பொறுத்தவரையில், இராணுவத்தினர் தோல்வியைத்தான் சந்தித்துள்ளதாகக் கூறுகின்றேன்"

என அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர், குமார் பொன்னம்பலம் பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அப்பேட்டியின் விபரம் பின்வருமாறு–

கேள்வி – யாழ்ப்பாணம் அரச படைகளாற் கைப்பற்றப்பட்ட நிலையில் இனி என்ன நடக்கும்?

பதில் – ஒன்றும் நடக்காது. இப்படியே படைகள் இருப்பர். மக்களும் ஒத்துழைக்கப் போவதில்லை. அரசு புலிகளை முறியடிக்கப் புறப்பட்டு, அதன்பின் இடையில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் நாடகத்தை நடித்தது. உண்மையிற் புலிகளை நொருக்க முடியாமற் போனதால் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவோம் எனப் புறப்பட்டனர். இது புலிகளுக்கே வெற்றி. ஏனெனில், புலிகள் மக்களைப் பாதுகாக்க மக்களை வெளியேறப் பணித்த போது, மக்களும் செவிமடித்தனர். இன்று படையினர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிக்கொண்டு, பொதுமக்களைத் திரும்பிவருமாறு மன்றாடுகின்றனர். புலிகளுக்கு மன்னிப்பு அளிப்பதாகவும் பேச்சுக்கு வருமாறும் கேட்கின்றனர்.

கேள்வி–போர் நிறுத்தம் செய்யுமாறு தமிழ் கட்சிகள் விடுத்த கோரிக்கையைச் சனாதிபதி நிராகரித்துள்ளாரே ?

பதில்–இது மட்டுமல்ல, தீர்வுத்திட்டம் பற்றியும் கேட்டனர். அது பற்றியும் சனாதிபதி தெளிவாக எதையும் கூறவில்லை. அதிகாரப் பரவலாக்கலில் வடக்கு– கிழக்கு இணைந்த ஒரே பகுதி என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதா என்பதே இன்றைய பிரச்சனை. இல்லாவிடின் கிழக்கு வேறு வடக்கு வேறாக வருகின்றதா? ஒன்றுமே தெரியாத நிலை உள்ளது. இதனால் இந்தச் சந்திப்பு மிகக் கேவலமான ஒன்றாகவே முடிந்துள்ளது. எதற்காக எம் ஆட்கள் இப்படியான சந்திப்பிற்கு யாழ்ப்பாணம் வீழ்ந்த நிலையிற் போனார்கள் என்பது தெரியவில்லை.

கேள்வி–கிழக்கிலும் இராணுவம் தாக்குதல் நடத்துமா?

பதில்–அது பற்றித் தெரியாது. ஆனால் வடமராட்சி, தென்மராட்சியில் தாக்குதல் நடந்துள்ளது. யாழ்ப்பாணத்தைப் பிடித்தபின், அதனுள் புலிகள் சிக்கியுள்ளனர்–அவர்கள் சரணடைய வேண்டும் எனக் கேட்டனர். அதுபற்றி இப்போது எதுவும் தெரியாது. கப்சிப்பாக உள்ளனர். இது அரசிற்கும் இராணுவத்திற்கும் ஏற்பட்ட விழுக்காடே.

கேள்வி–பொது மக்களை யாழ்ப்பாணத்திலிருந்து புலிகள் பலவந்தமாக வெளியேற்றினர் எனக் கூறப்படுகின்றது. இது உண்மையா?

பதில்–இல்லை என நான் தெளிவாகக் கூறுகிறேன். தமிழர்களை இராணுவம் அழிக்கும் என்பதால், அவர்களை வெளியேறுமாறு புலிகள் கோரினர். இதைப் பொதுமக்களும் ஏற்று வெளியேறினர். தமிழர், அரசபடைகளில் நம்பிக்கை வைத்திருந்தால் அவர்கள் வெளியேறியிருக்க மாட்டார்கள்.

# தமிழீழ எல்லை தாண்டியபின் சிறிலங்காவுக்குள் ஓர் கைதியாகவே நடாத்தப்படுவீர்!

## –சிறிலங்கா சென்று திரும்பிய அரச ஊழியர்

"தமிழீழ எல்லை தாண்டிச் சிறிலங்காவுக்குள் நுழையும்போது, நான் ஒரு கைதிபோல நடாத்தப்படுவதாகவே உணர்கிறேன். தடுத்து வைப்பு, விசாரணைகள், நாட்கணக்கில் முகாம்களில் காத்திருத்தல் என்பன என்னை அவ்வாறு உணர வைத்தன"

இவ்வாறு அண்மையிற் சிறிலங்காத் தலைநகர் கொழும்பு சென்று திரும்பிய கூட்டுறவுத்துறைக் காரியாலய உத்தியோகத்தரான பெண்மணி ஒருவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், "நான் வவுனியாவூடாகக் கொழும்பிலுள்ள தனது தலைமை அலுவலகத்திற்குச் சென்றபோதே இவ்வாறான அனுபவம் ஏற்பட்டது. வடபகுதியைச் சேர்ந்த எல்லோரும் தாண்டிக்குளத்தில் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படுவதாகவும் 23 வயதிற்கு உட்பட்டோர், கொழும்பு செல்வோர், வவுனியா செல்வோர் என மூன்றாகப் பிரிக்கப்பட்டபின், 23 வயதிற்கு உட்பட்டோர் விசாரணைக்காக ஒரு நாள் தடுத்து வைக்கப்படுவர். ஏனையோர் சைவப் பிரகாச வித்தியாசாலை அல்லது வேப்பங்குளம் மாற்று முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு வைத்து அவர்களைப் பல நாட்கள் விசாரணை செய்த பின்பே வெளியே செல்வதற்கு அனுமதி வழங்கப்படும் வவுனியாவில் அல்லது கொழும்பில் உள்ள ஒருவர் சரியான காரணம் காட்டி உறுதிப்படுத்தினாலேயே அவர் தொடர்ந்து மேலதிக பயணத்தைத் தொடரலாம். இதே வேளை மேற்படி முகாமிற் தங்கவைக்கப்பட்டவர்களில், குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் ஒரு நாளில் 2 மணிநேரம் மட்டுமே வெளியே சென்றுவர அனுமதிக்கப்படுவதாகவும், உணவு மற்றும் அவசியக் கடன்களைக் கழிப்பதற்கு நீண்ட நேரம் வரிசையிற் காத்திருக்க வேண்டிய அவலநிலைக்கு ஆளாவதாகவும், இறுதியாகப் புகையிரத நிலையத்திற்கு அருகிலுள்ள முகாம் ஒன்றிற்குக் கொண்டு செல்லப்படுவதாகவும், அது முன்பு கோழிப்பண்ணையாக இருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். சிறிலங்கா அரசின் இக்கெடுபிடிகள் தாங்கமுடியாமற் பலர் தமது பயணத்தைக் கைவிட்டு இடையிலே தமது சொந்த இடமான வடக்கிற்குத் திரும்பி விடுகிறார்கள்" என்றும் கூறியுள்ளார்.

# தமிழக அறிவுச் சிகரங்களின் பங்களிப்பு எமது இலட்சியத்திற்குப் புரிந்த பேருதவி

தமிழீழத் தமிழர்களுக்கு ஆதரவு அளித்துத் தமிழ் நாட்டில் இடம்பெற்ற கதவடைப்புப் போராட்டத்திற்கு நன்றி தெரிவித்தும், தொடர்ந்தும் இத்தகைய ஆதரவைத் தமிழக மக்கள் தமிழ் நாட்டிலே தரவேண்டும் எனக் கோரியும் தமிழ் நாடு பல்கலைக் கழக ஆசிரியர், மாணவர்களுக்கு யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது. அக்கடிதத்தின் சில பகுதிகள் பின்வருமாறு–

நமது போராட்டத்தின் இந்த நெருக்கடி மிக்க நேரத்திலே தமிழ் நாட்டின் ஆளும்கட்சி உட்பட அனைத்து அரசியற் கட்சிகளும் சிறீலங்கா அரசு நடாத்தும் தமிழர் கொலையையும், தொடரான தமிழின அழிப்பையும் கடுமையாக எதிர்க்கக் கிளம்பி உள்ளனர். வலிகாமத்தில் இடம் பெற்ற குண்டு வீச்சுக்கவினாலும், செல் வீச்சுக்களினாலும் தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டமையைக் கண்டித்து உடனடியான போர் நிறுத்தம் வேண்டும் என்ற கோரிக்கையும் சரியாகவே முன்வைக்கப்பட்டுள்ளது. இப்பொழுது யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்துள்ள யாழ் பல்கலைக்கழகத்தின் மாணவர்களாகிய நாம், சிறீலங்கா அரசிற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து தமிழருடனான ஒருமைப்பாட்டை வெளிக்காட்டிய உங்கள் அனைவருக்கும், துயரத்தில் ஆழ்ந்து இருக்கும் தமிழ் மக்கள் சார்பில் எமது நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றோம். தமிழ் நட்டில் உள்ள நமது உடன் பிறப்புக்கள் இவ்வாறு உரத்த குரலில் ஒருமித்து எதிர்ப்புக் காட்டியமை, துயரில் மூழ்கிய எமது மக்களுக்குப் பெரிதும் ஆறுதல் தந்துள்ளது. குறிப்பாகத் தமிழ் நட்டுப் பல்கலைக் கழக மாணவர்கள் இந்த எதிர்ப்பில் பெருந்தொகையில் ஊக்கத்துடன் பங்குபற்றிய செயல் எமது இதயத்தைக் குளிர்விக்கின்றது.

தமிழ் நாட்டின் சமுகத்தின் அறிவுச்சிகரங்களாகிய உங்களின் பங்களிப்புகள் எமது இலட்சியத்திற்கு அளித்த பேருதவியாக அமைகின்றது.

உலகத்து விடுதலைப் போராட்டங்கள் பலவற்றின் வரலாற்றிற் பல்கலைக்கழக மாணவர்களின் புரட்சிகரமான முற்போக்குத் தலைமையானது உந்து சக்தியாகவும், ஊக்கியாகவும் விளங்கி உள்ளது. தமிழ் நாட்டின் அரசும் எதிர்க் கட்சிகளும் அயல் நாடான சிறீலங்காவில் தமிழர்கள் கொன்று குவிக்கப்படுவதை நிறுத்தத் தலையிடுமாறு டில்லி அரசை மீண்டும் மீண்டும் வேண்டியபோதும் அந்த அரசு சந்தேகத்திற்கிடமான மௌனம் சாதித்ததோடு, யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் சிறீலங்கா இராணுவத்தின் செயற்பாடுகளுக்கு மறைமுகமாக ஆதரவு தந்தமை நமக்குப் பெரும் கவலையை ஏற்படுத்தி உள்ளமை உங்கள் கவனத்திற்கு உரியது. தமிழ் நாட்டிற்கும் தமிழர்களுக்கும் இடையே மொழியாலும், பண்பாட்டாலும், வரலாற்றாலும் ஏற்பட்ட நெருக்கமான பிணைப்பு உண்டு என்பதை முழு உலகமும் அறியும். தன் உயிர் துறத்தல் உட்படப் பல வழிகளில் அந்த நெருங்கிய பிணைப்பை நெருக்கடி நேரத்தில் நீங்கள் வன்மையாக உணர்த்தியுள்ளீர்கள்.

ஈழத் தமிழர்களின் வேட்கைகளையும், விடுதலையையும் வென்று எடுப்பதிற் தமிழ் நாடும், அந்த நாட்டு மக்களும் உதவ வேண்டும் என நாம் விரும்புகின்றோம். சிறீலங்கா நமது தொடர்புச் சாதனங்களையும் போக்குவரத்தையும் அநீதியான விதத்தில் உடைத்துள்ளது. நம் குரலை இழந்து விட்ட இந்த நிலையில் உங்கள் குரல் எமக்கு முக்கியமாகின்றது. இந்தியாவில் மட்டுமன்றி உலகெங்கும் உள்ள பல்வேறு நிறுவனங்களின் அரங்குகளிலும் நமது குறிக்கோள்களை உரத்த குரலில் எழுப்புமாறு உங்களை நாம் வேண்டுகின்றோம். நம் இளைஞர்கள் உறுதியுடனும், அர்ப்பணிப்புடனும், உன்னத தியாக உணர்வுடனும் தமது இலட்சியத்திற்காகப் போராடும் அதேவேளை தமிழீழ விடுவிப்பு முயற்சிகளுக்குக் கை கொடுத்து ஒருமைப்பாட்டு உணர்வுடன் உதவ வேண்டும் என்று தமிழ் நாட்டுப் பல்கலைக்கழக மாணவ நண்பர்களை நாம் பணிவுடன் வேண்டிக் கொள்கின்றோம். இதுவரை நீங்கள் நமது குறிக்கோள் நிறைவேறுவது குறித்து ஆற்றிய உதவிக்கு நன்றி கூறுவதுடன் இனிவரும் காலங்களிலும் நமது இலட்சியம் வெற்றி ஈட்டுவதற்கு உதவி செய்வீர்கள் என்ற தன்நம்பிக்கையுடன் நிறைவு செய்கின்றோம்.

நமது போராட்டங்களில் நெருக்கடியான கட்டங்களில் ஊக்கமாக ஒத்துழைத்து நாட்டிற் சரியான ஒரு தாயகத்தையும், உரிமைப் பெரு வாழ்வையும் அமைக்கக் கேட்டு நிறைவு செய்கின்றோம்.

# மருந்துத் தட்டுப்பாடு

## -எம்.எஸ்.எவ் வைத்தியர் தெரிவிப்பு

"நோயாளருக்கு உதவுவதற்கு மருந்துத் தட்டுப்பாடே தடையாக உள்ளது. புத்தாண்டில் தமிழ் மக்களுக்கு ஒரு சந்தோசமான வாழ்வு கிடைக்க வேண்டுமென விரும்புகின்றேன்." இவ்வாறு பருத்தித்துறை மத்திய வைத்தியசாலையில் பிரான்ஸ் வைத்தியர்களின் குழுவிற்குப் பொறுப்பாக இருந்து கடமையாற்றிய மருத்துவர் மேரி தெரிவித்தார். பாரிசிலுள்ள இவ் வைத்தியக் குழுவின் தலைமையகத்தால் மீள அழைக்கப்பட்டுள்ள இவர், இவ்வாரம் நாடு திரும்புவதற்கு உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 'தென்கிழக்கு மாகாணம்" அமைக்க முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை

முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்டதாக, 'தென்கிழக்கு மாகாணம்' என்ற புதியதொரு பகுதி அமைக்கப்பட வேண்டும் எனச் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், சந்திரிகா அரசுக்கு ஆலோசனை தெரிவித்துள்ளது.

இந்த யோசனையை அக்கட்சியின் தலைவரும் அமைச்சருமான எம். எச்.எம். அஷ்ரப், சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்குத் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் கணிசமான பகுதி, இத்தென்கிழக்கு மாகாணத்தில் அடங்குவதாகவும் இதற்கு வசதியாகவே தென்கிழக்குப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அத்தகவல் தெரிவிக்கிறது.

# எமது நிலத்தில் நிற்கும் இராணுவத்தை அகற்றி எம்மைக் குடியமர முதலில் அனுமதியுங்கள்

## –10ஆண்டுகளிற்குமுன் இடம்பெயர்ந்தவர்

"10 ஆண்டுகளிற்கு முன், வடக்குக் கரையோரங்களில் சிறீலங்காப் படையினராற் பலவந்தமாக வெளியேற்றப்பட்டோம். நாம் அப்பகுதியில் மீண்டும் நிம்மதியாய் வாழ்வது எப்போது? வடக்கிலிருந்து வெளியேறிய மக்களைத் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி வருமாறு சிறீலங்கா அரசு அழைப்பு விடுத்திருக்கின்றது. நல்ல விடயம்தான். அதேவேளை இன்று முக்கியமாகக் கவனத்தில் எடுத்துச் சிந்திக்க வேண்டிய விடயம் ஒன்று உண்டு. வடக்கின் கரையோரப் பிரதேசங்களான கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், நாயாறு ஆகிய பகுதிகளில் இருந்து 1984ஆம் ஆண்டு சிறீலங்காப் படையினரால் வெளியேற்றப்பட்ட பெருந்தொகையான தமிழ்க் குடும்பங்கள், இதுவரை சுமார் 10 ஆண்டுகளிற்கு மேலாகத் தமது சொந்த இடங்களிற்குத் திரும்ப முடியாதவர்களாக இருக்கின்றார்கள். இவர்கள் மீளத்திரும்புவது எப்போது?"

இவ்வாறு தமிழர் ஒருவர், கொழும்புச் செய்தித்தாள் ஒன்றிற்கு எழுதிய கடிதத்திற் கேள்வி எழுப்பியுள்ளார். முல்லைத்தீவைச் சேர்ந்த க. சுந்தரலிங்கம் என்பவரே இவ்வாறு கேள்வி எழுப்பியவர் ஆவார்.

"தமது சொந்தக் காணியிலே வீடுகள், வயல்கள், தோட்டங்கள் இவற்றின் நிலை என்னவென்று அறிய முடியாதவர்களாக இவர்கள் இருக்கின்றார்கள். தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தின் பல இடங்களிலும் அகதி முகாம்களிலும் தஞ்சமடைந்துள்ளனர். 10 ஆண்டுகளிற்கு முன் வெளியேறிய மக்களைப் பற்றி எதுவித அக்கறையும் காட்டாத அரசு, ஏன் அண்மையில் இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த மக்களை மீளவந்தமருங்கள் என்று அக்கறையாக அழைப்பு விடுக்கிறது. இது குறித்து விழிப்புடனும் அவதானமாகவும் இருக்கவேண்டும்" என அக்கடிதத்திற் குறிப்பிடப்பட்டுள்ளது.

www.tamilarangam.net



# பொகோமஸ்துதி




## பாலகுமாரன்

இதென்ன இந்த நேரத்தில், சிங்களத்தில் தலைப்பு எனச் சிலர் சினக்கக்கூடும். சிங்களத்தில் மிகவும் நன்றியென..... யாருக்கு–எதற்கு–நன்றி சொல்லப்படுகின்றது எனச் சிங்களம் தெரிந்தவர் சிந்திக்கக்கூடும். வேறு யாருக்குமல்ல நாங்கள் நன்றி தெரிவிப்பது, தமிழ்மக்கள் தமது வரலாற்றிலேயே சந்தித்த மிக மோசமான எதிரிகளான சந்திரிகா–ரத்வத்த கூட்டத்திற்கே எமது நன்றி உரித்தாகின்றது. இவர்கள் இதுவரை செய்த, இனிமேல் செய்யப்போகின்ற எல்லாவற்றிற்குமாக எமது நன்றிகள். ஏனென்றால், எதை எதையெல்லாம் நாம் இழக்கமுடியாதவை என்று கருதினோமோ, எதை எதையெல்லாம் இழந்தால் எம்மால் ஒருகணமும் இவ்வுலகில் வாழமுடியாது என்று நினைத்தோமோ, அவையெல்லாவற்றையும் இழந்த பின்னும் நாம் இன்று வாழ்கின்றோம்– இவ்விழப்புக்களையெல்லாம் தாங்கும் மனப்பக்குவம் எமக்குள் இருப்பதை உணர்கிறோம்– எமது சொந்த வேர் எது, எமது சொந்த முகம் எது என நாங்கள் இன்று தேடத் தொடங்கிவிட்டோம். சொந்த மண்ணிலே கால் படாமற் திரிந்த நாம் இன்று, எமது மண்ணில் ஆழக் காலை வேரூன்றுகின்றோம். எல்லாவற்றிற்கும் மேலாக எமக்குள் மறைந்திருக்கும் அற்புதமான ஆற்றலை இனம் கண்டுவிட்டோம்.

செயற்கையாக நாம் உருவாக்கிய பாகுபாடுகள், வேறுபாடுகள் எல்லாவற்றையும் மறக்கப் பழகிவிட்டோம். முகம் தெரியாதபோதும், இடம்புரியாத போதும் வன்னி மண்ணை எமது சொந்த மண்ணாகக் கருதத் தொடங்கிவிட்டோம். சுருங்கக் கூறின், எம்மால் முன்பு கனவிலும் கண்டிருக்க முடியாத பாரிய மாற்றமொன்றுக்கு எம்மை நாமே உட்படுத்தத் தொடங்கி விட்டோம். விடுதலைக்கான விலையை எம்மையறியாமலே நாம் கொடுக்கத் தொடங்கிவிட்டோம். எனவேதான் சொல்கின்றோம், "எதிரிக்கு மிகவும் நன்றி." இதென்ன, "விசித்திரமான முரண்பாடு" எனப் பலரும் எண்ணக்கூடும். உண்மையிலேயே இது பாரிய முரண்பாடுதான். இறுதியில் எதிரிக்கு மீளாத அழிவையும் எமக்கு இணையற்ற வெற்றியையும் தரப்போகின்ற முரண்பாடு. ஏனென்றால், மிகவும் மோசமான நாசகார எதிரிகூட எப்போதும் அழிவுகளை மட்டும் செய்வதில்லை. தீமைகள் மட்டும்தான் அவனது செயல்களில் மிஞ்சுவது என்றுமில்லை. எதைக் கருவோடு அழிக்கவேண்டும் என்பதற்காக இத்தனை அழிவுகளையும் செய்கின்றானோ அத்தனையும் அதே உருவோடும், திருவோடும் வளர்த்துவிடவே உதவிவிடுகின்றன. இத்தகைய முரண்பாட்டால் அடக்கப் படுவோர் ஆளுவோராக மாறவும், அடக்கியோர் அழிவோராக மாறுவதுமான விந்தை நிகழ்வுகளைக் கொண்டதே உலக வரலாறு. இது ஒரு கற்பனைவாதக் கண்டுபிடிப்புக் கோட்பாடு அல்ல. அல்லது இயலாமையால் விளைந்த தார்மீகக் கோட்பாடுமல்ல. இதுவே வரலாற்றை இயக்குவிக்கும் இயங்குசக்தி. வரலாறே சமூக மாற்றத்தை பிரசவிக்கும் இயங்கு சக்தி. மனித உறவுகளில் ஏற்படும் முரண்பாடுகளும் அவற்றை அகற்ற மனிதர்கள் நடத்தும் போராட்டமுமாக இறுதியாய் வரலாறு சமூக மாற்றத்தை நிகழ்த்துகின்றது. இவ்வாறு முரண்பாடுகளைப் பக்குவமாகக் கையாண்டு, பாரியதொரு புரட்சியைச் சீனாவிலே நிகழ்த்திக் காட்டிய மாபெரும் மனிதன் மாவோவுக்குப் பிறகு, "முரண்பாடுகளைக் கையாண்டு முன்னேறும் வித்தையில் கைவந்த தலைவன் பிரபாகரன்" என வரலாறு இப்போது பதிவு செய்கின்றது. "இரண்டாவது மாவோ", "இன்னொரு மாவோ" என விரும்பியோ, விரும்பாமலோ சிறிலங்காவின் மூத்த அரசியல் விமர்சகர் மேர்வின் சொன்னதை இங்கே நாம் நினைவு படுத்துகின்றோம்.

நாசகார எதிரிகூட எப்போதும் அழிவுகளை மட்டும் செய்வதில்லை. தீமைகள் மட்டும்தான் அவனது செயல்களில் மிஞ்சுவது என்றுமில்லை. எதைக் கருவோடு அழிக்கவேண்டும் என்பதற்காக இத்தனை அழிவுகளையும் செய்கின்றானோ அத்தனையும் அதே உருவோடும், திருவோடும் வளர்த்துவிடவே உதவிவிடுகின்றன.



எதை எதையெல்லாம் நாம் இழக்கமுடியாதவை என்று கருதினோமோ, எதை எதையெல்லாம் இழந்தால் எம்மால் ஒருகணமும் இவ்வுலகில் வாழமுடியாது என்று நினைத்தோமோ, அவையெல்லாவற்றையும் இழந்த பின்னும் நாம் இன்று வாழ்கின்றோம். இவ்விழப்புக்களையெல்லாம் தாங்கும் மனப்பக்குவம் எமக்குள் இருப்பதை உணர்கிறோம்,

வெற்றியின் உச்சியிலிருக்கும் போதே நெப்போலியன் 1800களில் 1 இலட்சம் படையணியினரோடு மொஸ்கோ நோக்கி முன்னேறினான். 50 ஆண்டுகளுக்கு முன் பல இலட்சம் படையினரை ஸ்டாலின் கிராட்டைக் கைப்பற்ற, வலிமையின் உச்சத்திலிருந்த போதே கிட்லர் அனுப்பினான். சோவியத்தின் பாரிய உதவியோடு பெரும்படையெடுப்பொன்றை அண்மைக் காலத்தில் எத்தியோப்பியா, எரித்திரியாவின் அஸ்மாரா மேல் மேற்கொண்டது. இப்போது தனது முழுப்பலத்தையும் திரட்டிச் சிங்கள அரசு, யாழ்ப்பாணம் மேல் பெரும் படையெடுப்பை நிகழ்த்துகின்றது. இங்கெல்லாம் ஒரு பொதுவுண்மை புலப்படுகின்றது. உச்சத்திலிருந்த போதே இப்படையெடுப்புக்களை நிகழ்த்தியவர்கள், அடுத்தகணம் அதல பாதாளத்தைக் கண்டதையே வரலாறு பக்கம் பக்கமாகச் சொல்லி நிற்கின்றது. இவர்கள் எல்லாம் இறுதியில் தமக்குத் தாமே எதிரியானதை, இவர்களின் செயல்களே இவர்களின் வீழ்ச்சிக்கு வழி கோலியதை, தொடக்கத்தில் எல்லாமே இவர்கட்குச் சாதகமாக இருப்பதை, வெல்ல முடியாதவர்கள் இவர்கள் – வெல்வது இவர்களை எவ்வாறு என மலைப்புத் தோன்றுவதை, வரலாறு சொல்லி நிற்கின்றது. ஆனால், இவர்கள் எல்லாம் அகலக்கால் பரப்பி வெற்றி மிதப்பில் மிதக்கும்போது கதையே மாறியது. ஏனெனில் இவர்களின் அழிவுச் செயற்பாடுகள் இறுதியில் அடக்கப்படும். மக்களின் உள்ளாற்றலைக் கிளர்ந்தெழச் செய்து பெரும் புயலாக வீசச் செய்யும் போராட்ட அலைகளை உருவாக்கி விடுகின்றது. இரண்டாம் உலகப்போரின் போது இடைவிடாத விமானக்குண்டு வீச்சால் இலண்டன் மாநகர் தரைமட்டமான போதே, தமக்குள் மறைந்து இருந்த தாக்குச் சக்தியை ஆங்கிலேயர் இனம் கண்டனர். தோற்கப் போகின்றார்கள் என்றபோதே எரித்திரியர் புவிப்பந்திலே புதிய நாட்டை உதயமாக்கினர். பட்டினியாலும் ஏழ்மையாலும் வாடியபோதே சீனரும், ரசியரும் புரட்சியின் புதல்வராகினர். தனது போராட்ட நடவடிக்கைகள் முறியடிக்கப்பட்டுக் காட்டுக்குத் துரத்தப்பட்ட பின்னே பிடல் காஸ்ட்ரோ கியூபாப் புரட்சியை நிகழ்த்திக் காட்டினார். அமெரிக்கப் படைகளின் தொகை அதிகரித்தபோதே, வியட்னாமியர் வெற்றிக்கொடி நாட்டினர். எனவே தமிழீழத்தில் இத்தகைய இன்னொரு வரலாற்றுப் பதிவு



அரங்கேறப்போவதால், அதற்குக் காரணமானவர்க்கு நாம் நன்றி சொல்லக் கடமைப் பட்டவர்கள் அல்லவா?

இப்போது யாழ்ப்பாண இராச்சியத்தின் ஒரு பகுதி எதிரிப்படையிடம் வீழ்ந்துவிட்டது. அதன் குறியீடாகச் சிங்களக்கொடி அங்கு பறக்கின்றது. பயங்கரவாதம், பிரிவினைவாதம் முறியடிக்கப்பட்டு விட்டதாகச் சிங்கள அரசு பிரகடனப்படுத்துகின்றது. ஆனாலும், பகை முரண்பாடொன்றை எவ்விதம் இவ்விதத்தாற் தீர்க்க முடியும்? பங்கீட்டு உணவிற்கும், மின்வெளிச்சம் காணவும் தமிழர் தன்னிடம் வருவர், வராவிட்டால் வரவைப்பேன் எனச் சிங்களம் ஒரு கையில் கத்தியை முதுகின் பின்னே வைத்து மறுகையில் பூமாலையை வைத்து வா, வா என வாய்கிழியக் கத்துகின்றது. ஆனால் இன்று, புதிதாகப் பிறந்தோம் என விடுதலைக் காற்றை இரைப்பை நிரம்ப நிரப்பியவர்கள், எல்லாவற்றையும் இழந்தாலும் வாழ்வதற்காக உறுதியை இழக்காதவர்கள். சில மாதப் பயிற்சியின் பின் உறுதிமிக்க போராளியாக உருவெடுப்பது போல, கட்டிய துணியோடு கைதடி தாண்டியவர்கள், ஒருநாள் பயிற்சியோடு உறுதிமிக்க போராளியாகி விட்டனர். எனவே இன்னொரு முறை இறுதி முறையாகச் சிங்களத்தின் முகத்திலே கரியைப் பூசப் போகின்றார்கள். உலகையே பெரும் வியப்புக்குள்ளாக்கப் போகின்றார்கள்.

இதன் பின்னே அவர்கள் விடிவின் ஒளியைத் தரிசிப்பார்கள். மீண்டும் யாழ்ப்பாணம் அவர்கள் போவார்கள் – கூடவே போராளிகளும்.

தமிழர் தன்னிடம் வருவர், வராவிட்டால் வரவைப்பேன் எனச் சிங்களம் ஒரு கையில் கத்தியை முதுகின் பின்னே வைத்து மறுகையில் பூமாலையை வைத்து வா, வா என வாய்கிழியக் கத்துகின்றது. ஆனால் இன்று, புதிதாகப் பிறந்தோம் என விடுதலைக் காற்றை இரைப்பை நிரம்ப நிரப்பியவர்கள், எல்லாவற்றையும் இழந்தாலும் வாழ்வதற்காக உறுதியை இழக்காதவர்கள். சில மாதப் பயிற்சியின் பின் உறுதிமிக்க போராளியாக உருவெடுப்பது போல, கட்டிய துணியோடு கைதடி தாண்டியவர்கள், ஒரு நாள் பயிற்சியோடு உறுதிமிக்க போராளியாகி விட்டனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அரசியல் தீர்வு ஒரு முடிவிலி

இனப்பிரச்சனைக்கான தீர்வுத்திட்ட யோசனைகள் எப்பொழுது பாராளுமன்றத் தெரிவுக்குழு முன் வைக்கப்படும், அது எப்போது அமுலாக்கப்படும் என்ற இருகேள்விகள் பொதுவாகவே பலராலும் கேட்கப்படுவதுண்டு. கேட்பதற்கு நியாயங்களும் இல்லாமல் இல்லை. ஏனெனில் இலங்கையின் அரசியல் வரலாற்றில் தீர்வுத் திட்டங்கள் குறித்துப் பேசப்படுவதும் பின்னர் அது கைவிடப்படுவதும் சாதாரணமானதே. சந்திரிகாவின் ஆட்சியில் என்பதால் பெரிதும் மாறுதல்களை எதிர்பார்க்க வேண்டும் என்பதல்ல. ஏனெனிற் கடந்தகால ஆட்சியாளர்களைவிட, இவர் பௌத்த பேரினவாதச் சிந்தனைக்கு ஒன்றும் சளைத்தவர் அல்ல. ஆனால் அண்மையில் அவசரகாலச் சட்டப் பிரேரணை மீது பாராளுமன்றத்தில் பேசிய பிரதிப் பாதுகாப்பமைச்சர், கேள்விகளில் ஒன்றிக்குத் தெளிவான பதிலை அளித்துள்ளார். விடுதலைப் புலிகள் இயக்கம் முழுமையாகத் தோற்கடிக்கப்பட்ட பின்னரே, அரசியல் அதிகார பரவலாக்கல் திட்டம் மக்கள் முன் அவர்கள் ஒப்புதலுக்காக வைக்கப்படல் வேண்டும் என்பதே அதுவாகும். இதன் பிரகாரம் அரசியற் தீர்வுத் திட்டம் மக்களின் – சிங்களவர்களின் அங்கீகாரத்துக்கு முன்வைக்கப்படும் முன்னர் விடுதலைப் புலிகள் முற்றாக தோற்கடிக்கப்படவேண்டும் என்பதிற் சந்திரிகா அரசு தெளிவாக உள்ளது. இந்த நிலைப்பாடானது, சந்திரிகா அரசின் அரசியற் தீர்வு என்பது முடிவில்லாத ஒன்று என்பதையே வெளிக்காட்டுவதாக உள்ளது.

சந்திரிகா அரசானது ஆட்சிக்கு வந்தபோது, இனப்பிரச்சனைக்கு அரசியற் தீர்வு ஒன்றே வழி என்றது. ஆனால், போரிற்கான நிலை அதனால் உருவாக்கப்பட்டுப் போர் ஆரம்பித்த பின்னர் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை, தமிழ் மக்களின் சிக்கல்களுக்கு அரசியற் தீர்வு எனக் கூறியது. இடையிடையே புலிகள் பலவீனப்படுத்தப்பட்டு, அவர்கள் சமாதானப் பேச்சில் நம்பிக்கை வைக்கும் வரையில் இராணுவ நடவடிக்கை தொடரும் எனவும் தெரிவித்துள்ளார். ஆனால், தற்போது அரசானது தனது சுயரூபத்தையும் தனது உள்ளக் கிடக்கையையும் தெளிவாகவே வெளிக்காட்டியுள்ளது. புலிகள் முற்றாகத் தோற்கடிக்கப்படும் வரை, அரசியற் தீர்வு கருத்துக் கணிப்பீட்டுக்கு வைக்கப்படாது எனத் தெரிவித்துள்ளது. இதன் மூலம் சந்திரிகா அரசானது, இனச்சிக்கலுக்குத் தீர்வுத் திட்டம் ஒன்றை அமுலாக்கும் யோசனை தமக்கு இல்லை என்பதை உறுதிப்படுத்தியுள்ளது எனலாம். உண்மையில் சந்திரிகா அரசானது தீர்வுத்திட்ட யோசனைகளை வெளியிட வேண்டி வந்தமையானது, இனச்சிக்கலுக்கு அரசியற் தீர்வு கண்டுவிட வேண்டும் என்பதினாலோ, சமாதானத்தின் மீதுள்ள பற்றுதலினாலோ அல்ல. மூன்றாவது கட்ட ஈழப்போர் ஆரம்பித்தபோது தனது தரப்பிற்கு உலகின் ஆதரவைத் திரட்டிக் கொள்ளவும், ஆதரவு தருவதானால் அரசின் தீர்வுத் திட்ட யோசனைகளை வெளியிட வேண்டும் என வெளியிலிருந்து எழுந்துள்ள அழுத்தங்களுமே காரணம் ஆகும். அதிலும் யாழ். குடாநாட்டின் மீது பெரும் படையெடுப்பிற்குத் தன்னைத் தயார் செய்த அரசு, தன்னை ஒரு சமாதானத்தின் தூதுவர் எனக் காட்டிக் கொள்வதிற் பெரிதும் அக்கறை காட்டியது. இதனால் அரசியல் தீர்வுத் திட்டம் குறித்துப் பெரிதாகப் பிரச்சாரப்படுத்தியது. ஆனால், சந்திரிகா அரசானது இவ்வரசியற் தீர்வுத் திட்டத்திற்கு இதுவரை சட்டவடிவம் கொடுத்துவிடவில்லை. பிரதான எதிர்கட்சியான ஐ.தே.க உட்படப் பலரும், அரசியல் யாப்புச் சீர்திருத்தப் பாராளுமன்றத் தெரிவுக்குழு முன் தீர்வுத் திட்ட யோசனைகள் முன்வைக்கப்பட்டு, சட்டவடிவத்தினைப் பெற வேண்டுமெனக் கோரியும் அவ்வாறு எதுவும் செய்யவில்லை. ஆனால் அண்மைக்காலம் வரை, அதாவது யாழ். நகர் மீதான பாரிய படையெடுப்பு நடந்து கொண்டு இருக்கையில், பொங்கலுக்கு முன்பதாகத் தீர்வுதிட்டத் யோசனைகள் பாராளுமன்றத் தேர்வுக் குழு முன், முன்வைக்கப்படும் எனக் கூறி வந்த அரசு, தற்பொழுது தை மாத இறுதிக்குள் முன்வைக்கப்படும் எனத் தெரிவித்துள்ளது.

இது குறித்துப் பாராளுமன்றத்திற் குறிப்பிட்ட அமைச்சர் ரத்வத்த, தைப்பொங்கல் தினத்திற்குப் பிறகு பாராளுமன்றத் தெரிவுக்குழு முன் அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தைச் சமர்ப்பிக்க அரசு ஆயத்தமாகி வருகின்றது எனத் தெரிவித்தார். ஆனால் தற்போது, அரசியற் தீர்வுத் திட்டத்தைப் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் அரசு சமர்ப்பித்தால் என்ன? சமர்ப்பிக்காது விட்டால் என்ன? சமர்ப்பித்தால் இந்தப் பிரச்சனைக்கான அரசியற்தீர்வில் ஏற்படப்போகும் முன்னேற்றம் என்ன? என்ற கேள்விகள் எழுகின்றன. ஏனெனில் இனப்பிரச்சனைக்கான அரசியற் தீர்விற்கு இறுதி அதிகாரத்தைத் தற்போதைக்கு மட்டுமல்ல, எப்போதைக்குமே பெறப்போகும் யோசனை அரசுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. புலிகளை முற்றாகத் தோற்கடித்த பின்னரே கருத்துக் கணிப்பு நடைபெறும் என்றால், அது நடைமுறையிற் சாத்தியம் அற்றதொன்றே என்பது எவருக்கும் சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை. ஏனெனில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியில், சிறிலங்கா அரசால் முற்றாக ஒழித்துவிடமுடியும் என்பது ஒரு பகற்கனவாகவே இருக்கக்கூடியது. சிலவேளைகளில், ஓரிரு சமர்களில் இராணுவம் வெல்லலாம். ஆனால் அது, புலிகளைத் தோற்றதாகவோ அன்றி அழித்துவிட்டதாகவோ அர்த்தமாகாது.

ஆனால், அமைச்சர் ரத்வத்தவின் அறிவிப்பும் அரசின் செயற்பாடும் தமிழ் மக்களிற்கு ஆச்சரியம் அளிக்கமாட்டாது. ஏனெனில், சிங்களப் பேரினவாதத்தின் இவ்வாறான ஏமாற்றங்கள் பலவற்றை அவர்கள் கண்டவர்கள். ஆனால் சந்திரிகாவிலும் அவரின் அரசிடமும் நம்பிக்கைகொண்டு, அவரின் தீர்வுத்திட்ட யோசனைகளிற்குப் பாராட்டுத் தெரிவித்தவர்களுக்கு அரசின் தற்போதைய நிலை நிச்சயம் ஆச்சரியம் அளிப்பதாகவே இருக்கும்.

## எத்தனை எத்தனை வித்துக்கள்...

உடல்தானா? ஆணா? பெண்ணா? சீமெந்துக் கற்களும்–மனித உடற் சிதைவும் சேர்ந்த கலவை. தடிகொண்டு தட்டி எடுக்கும்போது தடியோடு பிய்ந்துவரும் தசைப்புக்கை..... அதை அப்புறப்படுத்துவது எப்படி? அது முடியாத காரியம். அப்படித்தான் முடிந்தாலும் நிலத்தோடு ஊறிவிட்ட நிணத்தின் வாடையை அகற்ற முடியாது. எனவே அப்படியே அதன் மீது மண்ணெய் வார்த்துக் கொளுத்தினர். அப்படி மூன்று மனித உடற் குவியல்கள் அன்று எரிக்கப்பட்டன. டேவிற் கண்ட காட்சியின் சுவடுகள் அந்த இடத்தை விட்டு இன்னும் மறையவில்லை.

என் முயற்சியின் முதற்கட்டமே என்னைக் கலங்க வைக்கிறது. இதுபோன்று இன்னும் எத்தனை கொடுமைகளைக் காணவேண்டுமோ..... கேட்க வேண்டுமோ..... என்ற தயக்கம் என்னுள். என்றாலும் செய்து முடிப்பேன் என்ற உறுதியை, என் ஆழ் மனதுக்கு, ஏதோ ஒன்று ஊட்டிக்கொண்டிருக்கின்றது. என் ஆழ்மனதுக்கு உரமூட்டும் அந்தக் குரல், இந்த அக்கிரமத்திற்குப் பலியான அந்த அப்பாவிகளின் ஆன்மாக்களின் குரலாகவும் இருக்கலாம்.

தொடராக இடிந்து கிடந்த மூன்று வீடுகளைக் கடந்ததும், இடிந்ததும் இடியாமல் நிற்கும் அந்த வீட்டுக்குள் பிரவேசிக்கின்றோம். அது ஆசிரியர் ஜெயக்குமாரின் வீடு. நவாலிக் குண்டுவீச்சின் போது அவரும் படுகாயமுற்று உயிர்தப்பியுள்ளதை நாம் ஏற்கனவே கேள்விப்பட்டுள்ளதால், அவரிடமே நேரடியாகச் சென்றோம். எம்மை யார் என்றும், எதற்காக வந்திருக்கின்றோம் என்றும் அறிமுகம் செய்து கொண்டபோது, எம்மைப் பூரண மனதுடன் வரவேற்றார். "கட்டாயம் இது செய்ய வேண்டிய முயற்சி. இந்தக் கொடுமைகள் வரலாற்று ஆவணங்களாகப் பதியப்படவேண்டும்" என்று உற்சாக மூட்டினார்.

அவர் வீட்டுப் படிகளிலே ஏறும் போது, கறுப்புக் கோடுகளாக மேலிருந்து கீழே ஏதோ ஒரு திரவப் பொருள் நீளத்துக்கு வழிந்து, காய்ந்த அடையாளம் காணப்பட்டது. "உங்களுக்கும் அன்றைக்குக் காயமாமே?"

"ஓமோம். குண்டு வீசினதைக் கண்டு போட்டு, குண்டு வீசிற்றான் என்று சத்தம் போட்டுக் கொண்டு நான் வீட்டுக்குப் பின்புறம் ஓடினன். அதுக்குள்ள குண்டு விழுந்து அதில ஒரு துண்டு விலாவுக்குள் போயிற்று" என்று கூறியபடி, இடது பக்க விலாவின் பின்புறத்தில் ஏற்பட்டிருந்த காயத்தைக் காட்டுகிறார்.

"பிறகு நான் ஓடிவந்து அப்பிடியே விறாந்தையில் படுத்திற்றன்–மாஸ்டருக்குக் காயம் என்று யாரோ சொன்னது கேட்டுது. கேட்ட ஆளும் உடனே ஓடிப்போயிற்றார். அந்த நேரத்தில் யாரையும் உதவிக்கு எதிர்பார்க்க ஏலாது. எல்லாரும் தன், தன் உறவினரைக் காப்பாற்ற ஓடிக்கொண்டிருந்த நேரம் அது. பிறகு என்ன நடந்ததென்று எனக்குத் தெரியாது. யாரோ என்னைக் கொண்டுபோய் ஆஸ்பத்திரியில சேர்த்திருக்கினம். ஒப்பறேஷன் செய்துதான் உள்ளே போயிருந்த துண்டை எடுத்திருக்கினம். நான் விறாந்தையில கிடந்த போது வழிந்த ரெத்தம்தான் காய்ந்து, இன்னும் படிகளில் கோடு கோடாய் அடையாளம் தெரியுது."

நாம் கேட்காத அந்தக் கேள்விக்கும் சேர்த்துப் பதில் சொன்னார். அவருடைய பேச்சில் விரக்தி தெரிந்தது.

"அந்தச் சம்பவத்துக்குப் பிறகு இங்க இருக்கவே விசராயிருக்குது. கொஞ்ச நாளைக்கென்றாலும் கிளி–நொச்சிப் பக்கம் போய் இருக்கலாம் என்று நினைக்கிறன். பகற் பொழுது ஒரு மாதிரிப் போனாலும், பொழுது பட்ட பிறகு ஆகவும் அந்தரமாக இருக்குது. பொழுதுபட்டால் இளம் பெடியள் என்னட்டை வந்து சும்மா பம்பல் அடிச்சுக் கொண்டு நிற்பார்கள். அவங்கள்தானே இந்த றோட்டால இடம் பெயர்ந்து போய்க் கொண்டிருந்த சனங்களுக்கு ரீ, டிறிங்ஸ் கரைச்சுக் கொடுத்துக்கொண்டிருந்தவங்கள். அவங்களில எத்தனைபேர் அன்றைக்கு அநியாயமாகச் செத்துப் போயிற்றாங்கள்."

"அவன் காண்டீபன் அப்பதான் வந்து, பாணுக்குச் சம்பல் கொண்டு வந்து தந்திட்டுப் போனவன். அவன்ர உடலே கிடைக்கேல்ல. பாவம் கெட்டிக்காரப்பிள்ளை." காண்டீபனைப் பற்றி ஓய்வுபெற்ற அரச ஊழியரான சிற்றம்பலம் சொன்னது நினைவுக்கு வருகிறது.

காண்டீபன் கதையோடு அடுத்த இதழிற் தொடரும்

# டென்மார்க்கில் தளபதி கேணல் கிட்டு நினைவு நாள்

தளபதி கேணல் கிட்டுவினதும், ஒன்பது வீரவேங்கைகளதும் மூன்றாவது ஆண்டு நினைவுநாள் கடந்த 13–01–96 அன்று டென்மார்க்கிலுள்ள ஸ்கெயான் நகரில் நடைபெற்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் டென்மார்க் கிளையினரால் நடாத்தப்பட்ட இந்நிகழ்வில், பல்வேறு கலை நிகழ்வுகள் உணர்வு பூர்வமாக நிகழ்த்தப்பட்டன.

தளபதி கிட்டு அவர்களின் மூன்றாண்டு நினைவுகளின் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்டதால் சகல நிகழ்ச்சிகளிலும் அவரைப் பற்றிய நினைவுகள் மூன்று மூன்று கோணங்களாகப் பார்க்கப்பட்டன. தளபதி கேணல் கிட்டு எப்படி வீரத்தின் தொடுமுடியாக நின்று, களத்தை வழிநடத்தினார், அவரின் பன்முகப்பட்ட பார்வைகள் எப்படிப் போராட்டத்தை நோக்கி மக்களின் சகல பிரிவினரையும் காந்தமாகக் கவர்ந்து சென்றது, போராளிகளை மட்டுமல்ல, சிறுவர் முதல் பெரியோர்வரை சகல பொது மக்களையும் வசீகரிக்கும் அவரின் ஆளுமைத்திறன் என்பன சொற்பொழிவுகளாக நிகழ்த்தப்பட்டன.

காலை இழந்த பின்பும் களத்து வீரனாக எழுந்து நின்ற மேன்மை, இந்திய வல்லாதிக்கச் சக்திகளினாலேயே வெற்றிகாண முடியாத தன்மான உயர்வு, விடுதலையின் சூரியனாக வெற்றி பெற்ற அவரின் வாழ்வு என்னும் முப்பரிமாணத்தில் 'கவிமாலை' நிகழ்வு இடம் பெற்றது.

கிட்டு அவர்களின் மகத்துவம் இளைஞர்களிடையே எப்படிச் செயற்பட்டது, பெண்கள் மத்தியில் எப்படிப் போராட்ட உணர்வையும் பெண்விடுதலை ஒளியையும் ஏற்றிவைத்தது, போராளிகள் தேசத்தின் மீதும், போராட்டத்தின் மீதும் கொண்ட பாசத்திற்கும் கிட்டு அவர்கள் எவ்வாறு காரணமானார் எனவும் விளக்கமளிக்கப்பட்டது. இந்த மூன்று நிலைகளிலிருந்தும் எழுகின்ற மக்கள் குழுவினர் எதிரியின் சூரியக்கதிர் நடவடிக்கையை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்ற கோணத்தில் 'புயலுக்கு முந்திய வானம்' என்னும் நாடகம் மேடையேற்றப்பட்டது. சிங்களப் பேரினவாதிகளுக்கு மேல் வீசவிருக்கும் பெரும் புயலுக்கு முன், தமிழீழ மக்களின் உணர்வுகள் எப்படிச் சூல்கொண்டு புயலாகிறது என்பதை இந்நாடகம் அழகாக எடுத்துரைத்தது.

"தித்திக்கும் தேனிசைப் பாடல்கள்" என்னும் தலைப்பில் தமிழீழ இசைக் குழுவினர் நடாத்திய கிட்டு நினைவு அசைகளில் டென்மார்க்கின் சகல பாகங்களிலிருந்தும் பாடகர்களும் இசைக்கலைஞர்களும் கலந்து கொண்டார்கள். தமிழீழ விடுப்பு வேள்வியில் புலம் பெயர் மக்கள் அனைவரும் பங்காளிகளாக வேண்டும் என்ற உணர்வினடிப் படையில் மக்களே முன்வந்து நினைவு தினத்திற்கான செலவுத் தொகையைத் தாமே ஏற்றுக்கொண்டனர். தமிழீழத் தேசத்தின் விடிவு தூரத்தில் இல்லை என்ற நம்பிக்கையைத் தருவதாக நிகழ்வுகள் அமைந்திருந்தன

# யாழ்ப்பாணத்தில் குடியேற்ற சிறீலங்கா முயற்சி

வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் குடும்பங்களை, பலாத்காரமாக வலிகாமத்திற் கொண்டு சென்று குடியமர்த்தும் நடவடிக்கையைச் சிறிலங்காப் படையினர் ஆரம்பித்துள்ளனர். இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் பயணிகள் தங்கு வீடுதியில் தங்கவைக்கப்பட்டிருந்த 32 தமிழ்க் குடும்பங்கள், 15–01–1996 அன்று சிறிலங்கா இராணுவத்தாற் பலாத்காரமாகக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இவர்கள் தற்போது வலிகாமத்திற் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனத் தாயகச் செய்திகள் கூறுகின்றன. இதேவேளை கொழும்பிலுள்ள தமிழர்களையும் பலவந்தமாக யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு சென்று குடியேற்றும் திட்டத்தையும் அரசு செய்ய முயற்சிப்பதாகத் தெரிகிறது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள முகாமில் இருந்த ஓர் குடும்பத் தலைவன் கருத்துத் தெரிவிக்கையில், "நாம் ஏதோ குற்றம் செய்தவர்கள் மாதிரியான முறையில் தடுத்து வைக்கப்பட்டு, சிறிலங்கா ஆயுதப்படையினரால் கடுமையான முறையில் குறுக்கு விசாரணைக்கு

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மக்கள் சேவையில் ஒரு வித்தியாசமான மனிதர்

மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதற்கிணங்கத் தமிழ் மக்களுக்காகவே தன் வாழ் நாளை ஒதுக்கி இரவு பகலாகச், சேவையாற்றி வருகிறார் பதிவு செய்யப்பட்ட வைத்திய உத்தியோகத்தர் சங்கரப்பிள்ளை அம்பிகைபாகன். பட்டப்படிப்பை மேற்கொண்டதும் வெளிநாடுகளுக்குப் பறந்தோடிப் பகட்டான வாழ்க்கை யை வாழ்ந்து கைநிறையச் சம்பாதிப்பதையே குறிக்கோளாகக் கொண்டிருக்கும் எத்தனை யோ டாக்டர்களில் இவர் ஒரு வித்தியாசமானவர்.

**"இன்று, போர்மேகம் சூழ்ந்த நெருக்கடியான காலகட்டத்தில் மக்கள் சேவையே மகேசன் சேவையாகக் கொண்டு பல்வேறு இன்னல்களுக்கும் மத்தியிலும் மக்களுக்கு, தங்களால் இயன்ற வரையில் இலைமறைகாயாக இருந்து அளப்பரிய சேவையாற்றி வருபவர்கள் பாராட்டப்பட வேண்டிய வித்தியாசமான மனிதர்களே!"**

முப்பது வருடங்களாக நாட்டின் பல்வேறு இடங்களிலும் தனது சேவையை ஆற்றி வந்த இவர் கடந்த ஏழு வருடங்களாக, பளை அரசினர் வைத்தியசாலையிற் சேவை செய்து வருகின்றார். அண்மையில் இவருக்கு அரசினால் வழங்கப்பட்ட இடமாற்ற உத்தரவை வாபஸ் பெறக் கோரி, பளைப் பகுதி மக்கள் ஒன்று திரண்டு நடத்திய ஆர்ப்பாட்டம் இவரது சேவையையும் மக்கள் இவர் மீது வைத்திருந்த அன்பையும் புடம் போட்டுக்காட்டி நிற்கிறது.

குறிப்பிட்ட தொகைக்கு மேல் நோயாளர் கூடிவிட்டாற் சீறிச் சினந்து அவர்களை வெறுப்புடன் பார்வையிடுவதுடன் திருப்பி அனுப்பிவிடும் வைத்தியர்கள் மத்தியில், நேரம்–காலம் பாராது இரவு பகலாக நோயாளர்களை உடனிருந்து கவனித்து, தேவையான வைத்திய சேவைகளை ஆற்றிவரும் இவர் வித்தியாசமான முறையிலும் வைத்திய சேவையை ஆற்றி வருகிறார்.

"நோயின் கொடுமையால் வேதனையுற்றுத் துடி துடித்து ஓடிவரும் நோயாளியை அரவணைத்து, அன்பு செலுத்தி அவனுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சனையைக் கேட்டறிந்து, சிகிச்சையளிக்கும் போது அவன் மிகவும் மன நிறைவு அடைகிறான். பூரணமாகச் சுகம் அடைந்துவிட்டதை உணர்ந்ததும் அவனது முகத்தில் எழும் மகிழ்ச்சியைப் பார்த்து நானும் மகிழ்கிறேன். அதிலேதான் உண்மையான சந்தோசம் ஏற்படுகிறது" என்கிறார் டாக்டர். மேலும் அவர் குறிப்பிடுகையில், இப்போது மருந்துக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. அரசு வேண்டுமென்றே அவற்றை இங்கு அனுப்புவதிற் பாரபட்சம் காட்டி வருகிறது. இதனை நாம் எல்லோரும் கருத்திற்கொண்டு, நோய் வந்தபின் வேதனைப்படுவதைத் தவிர்த்து, அது வரு முன்னரே தடுப்பதற்கான தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதுதான் புத்திசாலித்தனமானதும் சிறந்ததுமாகும்." என்றார்.

"குறிப்பிட்ட நோய் ஏற்பட்டதன் காரணிகளைக் கண்டறிந்து, அவற்றை மருந்துகொண்டு தடுப்பதற்குப் பதிலாக உரிய உணவுவகைகளைக் கொடுத்து இனிவரும் காலங்களில் ஏற்படாதிருக்க ஆலோசனைகளையும் வழங்கிவருகிறார்.

"வைத்தியசாலையைச் சூழவுள்ள காணிகளில் நோயாளர்களுக்குத் தேவையான உணவு, தானியங்களையும், பழ மரங்களையும் ஊழியர்களின் உதவியுடன் செய்கைபண்ணி சுமார் ஒரு ஏக்கர் காணியில் பெருநெல்லி, சிறுநெல்லி, தோடை, கிலோதேசி, காவாய்தேசி, யமுநாரம், ஜம்பு, விலும்பி, வாழை, மரமுந்திரி, அகத்தி, குறிஞ்சா, தூதுவளை, முசுட்டை, முல்லை, மாதாளை, கொய்யா ஆகியனவற்றையும் செய்கை பண்ணி மருத்துவ உலகில் மண்ணுக்கேற்ற மாற்றங்களைச் செய்து வருகின்றார் இவர்.

யாருக்கு என்ன குறைபாடு உள்ளதோ அதற்கேற்ப தேவையானவற்றை இலவசமாக வழங்கிவருவதோடு மட்டுமன்றி நோயாளியை, குறிப்பிட்டவற்றைச், செய்கை பண்ணி உணவுத் தேவைக்குச் சேர்த்துக் கொள்ளுமாறு பணிப்பதைவிட தானே முன்மாதிரியாக நடந்தும் காட்டுகிறார். இதன் பலாபலன்களைப் புரிந்து கொண்டவர்கள் இவரிடம் வந்து கன்றுகளை இலவசமாகப் பெற்றுச் சென்று வீடுகளில் நாட்டி, பயன் பெறுகிறார்கள்.

இலைமறைகாயாக இருந்து நொந்து போயிருக்கும் எம் சமுதாயத்திற்கு பல்வேறு வழிகளிலும் சேவையாற்றி வரும் இவர் பாராட்டுக்குரியவரே.

# பல ஆயிரம் மக்களை பாதுகாத்த இடப்பெயர்வு

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் சமரைத் தொடங்கினால் எத்தனை தமிழர்கள் கொல்லப்படுவார்கள் என்று, 92ஆம் ஆண்டு ஜெனரல் கொப்பேகடுவ ஒரு மதீப்பிட்டைச் செய்து பிரேமதாசா அரசிடம் கொடுத்திருந்தார். 15–20 ஆயிரம் மக்கள் கொல்லப்படலாம் என்பது கொப்பேகடுவவின் கணிப்பு. இந்த மதிப்பீட்டறிக்கையை ஆய்வுசெய்த பிரேமதாசாவின் இராணுவ ஆலோசகர்கள் "இந்தத் தொகை 30 ஆயிரமாக அதிகரித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை" எனத் தெரிவித்திருந்தார்கள். இவை எல்லாம் கொப்பேகடுவவின் சாவுக்குப் பின்னர் கொழும்பில் வெளியான செய்திகள்.

கொப்பேகடுவவின் படைஎடுப்புத் திட்டத்திற்கு அப்போது, பிரேமதாசா அனுமதி கொடுத்திருந்தார். ஆயினும், அது நடைமுறைப்படுத்தப்பட இருந்த இறுதிக்கணத்தில், அராலிக் கண்ணியில் சிக்கி, சிங்களப்படைத்துறைத் தலைமை அழிந்ததால், குடாநாட்டு மக்கள் பேரழிவு ஒன்றிலிருந்து தப்பினர்.

இதேவேளை, தென்தமிழீழத்தில் 90 ஆம் ஆண்டு சிங்களப்படைகளால் தீவிரப்படுத்தப்பட்ட தமிழ் இன அழிப்பில் பல்லாயிரம் தமிழர்கள் செத்தழித்தனர். அண்மையில் வெளிவந்த கணக்கெடுப்பு ஒன்றில், அங்கே, பத்தாயிரம் இளம் விதவைகள் உள்ளனரென்று கூறப்பட்டுள்ளது. அப்படியாயின் கொல்லப்பட்ட, திருமணம் செய்யாத இளைஞர்கள் மற்றும் பெண்கள் ஆகியோரின் தொகையையும் சேர்த்துப் பார்த்தால், கடந்த ஐந்தாண்டில் மட்டும் தென்தமிழீழத்தில் சுமார் பதினையாய–ிரத்துக்கும் மேற்பட்ட எமது மக்கள் சிங்களப்படைகளினது கைகளிற் சிக்கி அழிந்துள்ளனர் என்று கூறலாம்.

**இருபதாயிரம் மக்களைப் பலிகொள்ள இருந்த ரணப் படையெடுப்பு 100ற்கும் உட்பட்ட மக்க ளையே பலி–கொண்டிருந்தது. இதனால் வலிகாமம் மக்கள் சந்திக்கவிருந்த ஒரு மாபெரும் அவலம் திடீர் இடம்பெயர்வால் தவிர்க்கப்பட்டு, ஒரு வாழ்வியல் சிரமம் என்ற சிறிய பரிமாணத்துடன் முடிந்துள்ளது.**

பிள்ளையை – கணவனை அல்லது தாயை – தந்தையை இழக்காத குடும்பம் என்று ஒரு குடும்பத்தையுமே அங்கே காண முடியாது. அதுவும், பெற்றோர்கள் முன்னிலையில் அல்லது சகோதரங்கள் முன்னிலையில் அவர்களது பிள்ளைகளைக் கொல்வது அல்லது பாலியல் வன்முறைக்கு உட்படுத்துவது தென்தமிழீழத்தில் சாதாரண ஒரு விடயம்.

இந்தளவு மிலேச்சத்தனங்களுக்கும் பிரதான காரணம் சிங்களப்படையின் ஆக்கிரமிப்பிற்குள் வாழவேண்டிய துர்ப்பாக்கியத்திற்குள் தென்தமிழீழ மக்கள் உள்ளதே ஆகும்.

யாழ்ப்பாணச் சமருக்கான ஆணையைப் படையினர்க்கு வழங்கியபோதே, கொல்லப்படப் போகும் யாழ்ப்பாணத்து மக்களது எண்ணிக்கை, சந்திரிகா அம்மையாருக்குத் தெளிவாகத் தெரிந்திருந்தது. கொப்பேகடுவ கணித்த அந்தத் தொகை அளவு மக்களைக் கொன்று, யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற அவர் முடிவெடுத்தார்.

யாழ்ப்பாணம் நோக்கிய படையெடுப்பின் முதல் நடவடிக்கையான முன்னோக்கிப் பாய்தலில் 500ற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர். இந்த மக்கள் கொலையைச் சந்திரிகா அம்மையார் கணக்கில் எடுக்காதுவிட்டமைக்குக் காரணம், அதன்பின்னரும் தொடரப்போகும் பல்லாயிரம் மக்களின் மரணமும், அவரின் மனதில் இருந்ததால் ஆகும். ஆகவேதான், முன்னோக்கிப் பாய்தலில் படுகொலை செய்யப்பட்ட எமது மக்களின்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

# சிவில் நிர்வாகத்தின் புதிய வரைவிலக்கணம்

'யாழ்ப்பாணத்தில் இராணுவத்தின் நிர்வாகத்தைத் தோற்றுவிப்பது எமது நோக்கமல்ல. அங்கே கூடிய விரைவில் சிவில் நிர்வாகத்தைத் தோற்றுவித்துத் தமிழ் மக்களிடம் ஒப்படைப்பதுதான் அரசாங்கத்தின் நோக்கமாகும்'

இவ்வாறு, சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கா கூறியுள்ளார். இதனால் இன்று நாட்டில், சிவில் நிர்வாகம் என்றால் என்ன என்பதே, தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ள கேள்வியாகவுள்ளது! சிறீலங்கா அரசாங்கம் வடக்கு–கிழக்கு பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தும், ஜனநாயக அடிப்படையில் மனித உரிமைகளிற்குக் கொடுக்கும் புதிய வரைவிலக்கணம் போன்று, தற்போது சிவில் நிர்வாகத்திற்கும் புதியதொரு வரைவிலக்கணத்தைக் கொண்டுவர முனைவதே இதற்குக் காரணமாகும். ஏற்கனவே கிழக்கில் சிவில் நிர்வாகம் என்ற போர்வையில் ஒரு இராணுவ நிர்வாகத்தையே சிங்கள ஆட்சியாளர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். சிவில் நிர்வாகக்கட்டமைப்பு இருப்பதைப்போன்றும், செயல்படுவதுபோன்றும் வெளித்தோற்றத்தில் காட்டிக் கொண்டு, இராணுவத்தின் ஆட்சியே நடாத்தப்படுகின்றது. இதனை விளங்கிக் கொள்வதற்குப் பெரிய அளவில் ஆய்வு ஒன்றும் தேவையில்லை. சிவில் நிர்வாக இணைப்பு அதிகாரியாக உயர் இராணுவ அதிகாரி ஒருவர் இருப்பதிலிருந்தே இதைப் புரிய முடியும்.

இதேசமயம், தாம் கைப்பற்றிய யாழ்ப்பாணப் பிரதேசத்திலிருந்து வெளியேறப் போவதில்லை என்பதை அரசு வெளிப்படையாகத் தெரிவித்துள்ளது. பிரதி அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ எந்தக் கட்டத்திலும், யாழ்ப்பாணத்தை விட்டுப் படையினர் வெளியேற்றப் படமாட்டார்கள் என்று தெளிவாகக் கூறியுள்ளார். இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் எவ்வளவு வெகு விரைவாகச் சிவில் நிர்வாகத்தை அமுற்படுத்த முடியுமோ, அவ்வளவு விரைவில் சிவில் நிர்வாகத்தை அமுற்படுத்துவோமென்று சந்திரிகா கூறியுள்ளார்.

இராணுவ ஆட்சியை எவ்வளவு விரைவில் அமுற்படுத்துவோம் என்பதா? மக்களின் பிரதிநிதிகளாய் நிலைநிறுத்தப்படும் ஆட்சியை நிலைநிறுத்துவோம் என்பதா? வலிகாமப் பகுதியைப் பொறுத்து, இங்கு சிவில் நிர்வாகத்தை நிலை நிறுத்துவோமென்பது வெறும் கண் துடைப்பேயாகும். ஏனெனில் சிவில் நிர்வாகத்திற்கான ஒன்றும் அங்கு இல்லை. முதலில் போர் அங்கு ஓயவில்லை. அடுத்து சிவில் நிர்வாகத்திற்கான அடித்தளமான மக்களே அங்கு இல்லை. மற்றும் அப்பிரதேசத்தில் சிவில் நிர்வாகம் செய்யக்கூடிய அதிகாரிகளும் இல்லை. இதற்கு மேலாக இராணுவத்தினரை வலிகாமப் பகுதியிலிருந்து வெளியேறுமாறு செய்வதும் அரசாங்கத்தின் நோக்கமல்ல. முழுமையாக இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள பகுதியில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவது எப்படி? சிறீலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கா, மக்களே இல்லாத இடத்தில் தமிழ் மக்களிடம் சிவில் நிர்வாகத்தை ஒப்படைப்பது எப்படி? அதாவது மேற்பார்வையாளராக இராணுவத்தை நிறுத்திவிட்டுச் சிவில் நிர்வாகம் ஒன்றை அமுற்படுத்தும் விந்தை எவ்வாறானது? இந்த வகையிலான சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதென்பது சந்திரிகா குமாரணதுங்காவிற்கே வெளிச்சம். ஆனால் நமக்குத் தெரிவது சிவில் நிர்வாகம் எனக் கூறிக் கொண்டு, வலிகாமப் பகுதியில் இராணுவத்தின் நிர்வாகத்தைத் தோற்றுவிப்பதற்கான நடவடிக்கையில் அரசாங்கம் தீவிரம் காட்டுகின்றது என்பதேயாகும்.

கைப்பற்றப்பட்ட பகுதிகளில் இராணுவ ஆக்கிரமிப்புக்கான வேலைகள், சிவில் நிர்வாகம் என்ற போர்வையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனலாம். இதன் மூலம் ஆரம்பிக்கப்பட்ட பகுதிகளில் விசேட அடையாள அட்டைகளை வழங்க அரசு முற்பட்டுள்ளது. அதாவது இவர்களின் ஆக்கிரமிப்பிற்குள் மக்கள் அடிமைகளாக வாழ வைப்பதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளே இவை ஆகும். இல்லாது போனால் பழைய அடையாள அட்டையென்ற ஒன்றை, அட்டைப் பதிவுத் திணைக்களத்தினால் உறுதிப்படுத்த முடியாமற் போனது எவ்வாறு? புதிய அடையாள அட்டை வழங்கப்படவேண்டியதன் நோக்கம் ஒரு நாடு எனக் கூறிக்கொண்டு, தனித்துவமான அடையான அட்டை ஒன்றை ஒரு பகுதி மக்களிற்கு வழங்குவது என்பது அவர்களைத் தனிமைப்படுத்திக் காட்டும் நடவடிக்கைகளுக்கு மட்டுமே உதவும். இவ்வாறனதொரு நடவடிக்கை உலகின் எப்பாகத்திலும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

மேலும், யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகத்தை மேற்கொள்ள, தென் இலங்கையில் ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளில் சந்திரிகா அரசு இறங்கியுள்ளது. தமிழ் மக்களை நிருவகிப்பதற்குச் சிங்களவர்களை வேலைக்கு அமர்த்திக்கொள்ள அரசு முனைகின்றது. இது சிவில் நிர்வாகம் என்ற போர்வையில் சிங்களவரின் நிர்வாகம் நிலைநிறுத்தும் நோக்கம் கொண்டதாகும். இந்த வகையில் சிங்கள ஆட்சியாளர்கள், சிங்கள இராணுவத்தினர், சிங்கள ஊழியர்களைக் கொண்டு ஒரு பொய் நிர்வாகத்தை நடத்தச் சந்திரிகா குமாரணதுங்கா முயற்சிக்கிறார். இதைத் தமிழ் மக்களின் நலன் கருதிச் செய்வதாகப் பிரச்சாரப்படுத்தி வருகிறார். இதன் மூலம் குடாநாட்டுப் பகுதியில் இராணுவ ஆட்சி மூலம் சிங்கள ஆட்சியை, தமிழர்களிடையே நிலைநிறுத்த சந்திரிகா முனைந்துள்ளார்.

தமிழ் மக்களின் பல ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களை நாசம் செய்ததோடு, அவர்களின் சமூக வாழ்வு, கலைப் பண்பாடுகளை அழித்துமுள்ள சந்திரிகா, தமிழ் மக்களிற்குத் தான் தயாரிக்கின்ற – தயாரிக்க முனையும் அடிமை வாழ்வைச், சிவில் நிர்வாகம் என்ற ஒரு கவசத்தால் மறைக்கப்பார்க்கின்றார். இது தமிழர்கள் அனைவரையும் ஏமாற்ற முயலும் நடவடிக்கை என்பதில் ஐயமில்லை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குடாநாடு - வன்னிப் போர்முனைகள்

# சாதகங்கள் - நெருக்கடிகள்

குடாநாட்டுப் படையினர்க்கான விநியோக வழிகள், ஏற்கனவே, கடற்புலிகளாலும்–புலிகளின் விமான எதிர்ப்புப் படையினராலும் சேதத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளன என்பது எல்லோர்க்கும் தெரியும். ஆயினும், தனக்குத் தெரிந்த இராணுவ வாய்ப்பாட்டின் மூலம் இராணுவக் கணக்குப் பார்த்துவிட்டு, 40 ஆயிரம் படையினரைக் குடாநாட்டிற்குள் கொண்டு வந்து சிங்கள அரசு குவித்தது.

இந்தப் பெருந்தொகைப் படையினரைப் பயன்படுத்தி, யாழ்ப்பாணச் சமரை வெற்றிகரமாக நடாத்தி ஆயிரக்கணக்கிற் புலிகளைக் கொன்று – அதன் இராணுவப் பலத்தைச் சிதைத்தால் தங்குதடை அற்ற ஒரு விநியோகப் பாதையைப் பின்னர் அமைத்து, 40 ஆயிரம் படையினர்க்கும் தேவையான விநியோகங்களைச் செய்யலாம் என்று சிங்களத் தளபதிகள் நம்பியிருந்தனர். ஆனால், அவர்கள் எதிர்பார்த்தது போல, யாழ்ப்பாணச் சமர், புலிகளுக்குப் பெரிய பாதிப்புக்களைக் கொடுக்கவில்லை.

அதாவது குடாநாட்டுப் படையினர்க்கான விநியோக வழிகளைத் துண்டிக்கும் புலிகளின் ஆற்றலுக்கு, யாழ்ப்பாணச் சமர் எந்தத் தீங்கும் செய்யவில்லை.

குடாநாட்டிற்குள் குவிக்கப்பட்டுள்ள 40 ஆயிரம் படையினரின் நிலை, "ஆப்பிழுத்த குரங்கின் கதை" போல இருக்கப் போகின்றது. அங்கே நிலை கொள்ளவும் முடியாத அதேவேளை, அங்கிருந்து வெளியேறிச் செல்லவும் முடியாத ஒரு இக்கட்டான நிலை சிங்களப் படைக்கு எழுந்து விட்டது. இது ஒரு மிகைப்படுத்தப்பட்ட மதிப்பீடு என்று சிலர் சொல்லக்கூடும். ஆனால், இது தான் குடாநாட்டின் உண்மையான இராணுவ யதார்த்தம் ஆகும்.

இதனால், குடாநாட்டிற்குள் குவிக்கப்பட்டுள்ள 40 ஆயிரம் படையினரின் நிலை, "ஆப்பிழுத்த குரங்கின் கதை" போல இருக்கப்போகின்றது. அங்கே நிலை கொள்ளவும் முடியாத அதேவேளை, அங்கிருந்து வெளியேறிச் செல்லவும் முடியாத ஒரு இக்கட்டான நிலை சிங்களப் படைக்கு எழுந்துவிட்டது. இது ஒரு மிகைப்படுத்தப்பட்ட மதிப்பீடு என்று சிலர் சொல்லக்கூடும். ஆனால், இதுதான் குடாநாட்டின் உண்மையான இராணுவ யதார்த்தம் ஆகும். விநியோக வழிப்பிரச்சனை என்பது, சாதாரண ஒரு விடயம் அல்ல என்பதற்குப் பல உலக உதாரணங்கள் உண்டு.

18–ம் நூற்றாண்டில், சில இலட்சம் படையினருடன் ரஷ்யாமீது படை எடுத்த நெப்போலியன், இறுதியில், உயிர்தப்பிய சில ஆயிரம் படை வீரர்களுடன் பின்வாங்கி ஓடினான்.

இரண்டாம் உலகப் போரின்போது ஜேர்மனியப் படை சில இலட்சம் வீரர்களுடன் ரஷ்யாவிற்குள் நுழைந்தது. பின்னர், அங்கிருந்து தோல்வியை அணைத்துக் கொண்டு ஜேர்மனியின் தலைநகரான பேர்லின் வரை திரும்பி ஓடிவந்தது.

சிங்களப் படைகள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியது போல, மேற்குறித்த இரண்டு ஆக்கிரமிப்புப் படைகளும் ரஷ்ய தேசத்தின் இதயம் வரை வெற்றிகரமாகப் புகுந்திருந்தன. ஆனால் இறுதியில், பேரழிவுகளைச் சந்தித்தபடி தோற்று ஓடின.

இந்த, இரண்டு பலம்மிக்க படைகளும் ரஷ்ய மண்ணில் தோல்வியைச் சந்தித்ததற்குப் பிரதான காரணம், விநியோகச் சீர்குலைவே ஆகும். குறுகிய காலத்திற்குள் தமது பெரும்படைகள் ரஷ்ய தேசத்தை மண்கவ்வச் செய்துவிடும். அதன்பின், விநியோக மார்க்கங்களைச் சுலபமாக ஏற்படுத்திக் கொள்ளலாம் என, இன்று சிங்களத் தளபதிகள் நினைத்ததைப் போல, அன்று நெப்போலியனும், கிட்லரும் நினைத்திருந்தார்கள்.

ஆனால், ஆக்கிரமிப்புப் படைகள் மொஸ்க்கோவிற்குள் புகுந்தபோது, பலத்திற் குறைந்த ரஷ்யப் படைகள் போரிட்டபடி தந்திரமாகப் பின்வாங்கி இருந்தன. இரண்டு ஆக்கிரமிப்புப் படைகளும் மொஸ்க்கோ நகரத்தை அழித்தன. அதேவேளை, மொஸ்க்கோவின் வளங்கள்– அது கட்டடமோ, தொழிற்கூடமோ அல்லது உணவுக் களஞ்சியங்களோ ஆக்கிரமிப்புப் படைகளின் உபயோகத்திற்கு விட்டுவைக்கக்கூடாது என்ற நோக்கில் ரஷ்யப் படைகளால் எரித்தழிக்கப்பட்டன. இதேவேளை, மேற்குறித்த இரண்டு ஆக்கிரமிப்புப் படைகளும் மொஸ்க்கோ நகருக்குள் நுழைந்தபோது அங்கே மக்களும் இருக்கவில்லை.

இந்த நிலையில், ஆக்கிரமிப்புப் படைகள் தம்முடன் எடுத்துச்சென்ற பொருட்கள் தீர்ந்துபோகும் வரை, இடம்மாறி இடம்மாறிச் சமரை ரஷ்யப் படைகள் இழுத்தடித்தன. அதேவேளை, விநியோகப் பாதைகளை ஏற்படுத்தவிடாது தடுப்பதற்காகப் புதிய இடங்களிற் புதிய தாக்குதல்களை ரஷ்யப் படைகள் தொடுத்தன. விநியோகமும் இல்லை, தேவையானவற்றைக் கொள்ளையடிக்க அல்லது பலவந்தப் படுத்தி எடுக்க மக்களுமில்லை.

இதனால் ஆக்கிரமிப்புப் படைகளின் விநியோகப் பிரச்சனை பூதாகர வடிவமெடுத்தது. உணவு–மருந்து – வெடிப்பொருட்கள்–மேலதிக துருப்புகளை அனுப்புதல் என்பவை தடைப்பட்டன. இறுதியில், ஆக்கிரமிப்புப் படைகளுக்கு ரஷ்ய மண்ணிற் புதை குழிகள் நிறுவப்பட்டன. ரஷ்யா போரை வென்றது.

போரை வென்றபின் அழிந்த தனது நகரத்தை அது புதுப்பித்தது. இவ்வாறு மொஸ்க்கோ நகரம் பல தடவைகள் புதுப்பிக்கப்பட்டது. மொஸ்க்கோ நகரின் பல இலட்சம் மக்கள், பல தடவைகள் இடம்பெயர்ந்து வாழ்ந்து ஆக்கிரமிப்புப் படைகளைத் தோற்கடிக்கத் தமது தேசத்திற்கு உதவினர் என்பது வரலாறு.

## குடாநாட்டுப் போர் முனை

இன்றைய நிலையில், சிங்கள அரசின் தரைப்படை குடாநாட்டில், அதிலும் குறிப்பாக வலிகாமத்தில், பலமான நிலையில் இருக்கின்றது என்பது உண்மை. அதன் ஆட்பலம்–ஆயுதபலம் என்பவை அதற்குக் காரணம். ஆயினும் 40 ஆயிரம் ஆட்களைக் கொண்ட இந்தத் தரைப் படை, கொழும்புடன் வைத்திருக்கும் விநியோக வழிகள் பலவீனமான நிலையில் உள்ளன என்பதைக் கொழும்பு ஆய்வாளர்களே ஒப்புக் கொண்டுள்ளனர்.

சிங்கள அரசின் விமானப் படையும்–கடற்படையுமே குடாநாட்டில் நிலைகொண்டுள்ள படையினர்க்கான விநியோகஸ்த்தர்கள் ஆகும். ஆனால், விமானப் படை தனது நகர்திறனை வரவர இழந்து வருகின்றது. கடற்படையின் நகர் திறனும், வடபுலக் கடலில் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்து நிற்கின்றது. முன்னரைப் போல, கரையில் இருந்து பார்க்கும்போது கண்ணுக்கு எட்டிய தூரத்திற் கடற்படையின் விநியோகக் கப்பல்கள் செல்வதில்லை. கடற்புலிகளிடம் இருந்து வரும் அச்சம் காரணமாக, இப்போது, ஆழ்கடலூடாகவே சுற்றிச் சுழன்று காங்கேசன்துறையை அடைகின்றன. அதுவும் ஒரு விநியோகக் கப்பலுக்கு 5 அல்லது 6 பாதுகாப்புக் கலங்கள் செல்ல வேண்டிய நிலையிலேயே கடற்பிரயாணம் உள்ளது. இந்த நிலையில், ஒரு கப்பற் தொகுதி, கடற்புலிகளால், தாக்கி அழிக்கப்படுமானால் குடாநாட்டுப் படைக்கான விநியோகம் என்ன நிலையில் இருக்கும்?

கடற்புலிகளின் அடுத்த கட்டச் செயற்பாடுகள், படையினர்க்கான கடல்வழி விநியோகத்தை முழுமையாகத் தடுக்கும் வகையிலானதாக இருக்கும் என்றே நம்பப்படுகின்றது. தேவையான வளங்களையும் பலத்தையும் சேர்த்துக் கொண்டு, கடற்புலிகள், நடவடிக்கையில் இறங்கும்போது ஆழ்கடல் விநியோக வழியும் அடைக்கப்படும் சாத்தியம் உண்டு. அப்படி நடந்தால், மொஸ்க்கோவில் நெப்போலியன் படையும், கிட்லரின் படையும் சந்தித்த பேரழிவைக் குடாநாட்டில் ரத்வத்தவின் படை சந்திக்கும்.

இதேவேளை, குடாநாட்டிலுள்ள படையினர்க்கான விநியோகம் முழுமையாகத் தடைப்படும்போது வடமராட்சி–தென்மராட்சி மீது, படையினர் பழிவாங்கும் தாக்குதல்களை மேற்கொள்ளலாம். அத்துடன், வடமராட்சியைக் கடற்புலிகளின் தளம் என்றே சிங்கள அரசு எண்ணுகின்றது. இதனால், வடமராட்சி மீது பாரிய தாக்குதல் ஒன்றைத் தொடுப்பதன் மூலம் கடற்புலிகளின் நகர்திறனைச் சிதைக்க முடியும் என்று சிங்கள அரசு சிந்திக்கக்கூடும். இதனாற்தான் வடமராட்சியிலும், தென்மராட்சியிலும் மக்கள் செறிவாக வாழ்வதைத் தவிர்த்து– இயலக்கூடிய அளவுக்குப் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்று, தற்காலிகமாக வாழும்படி புலிகள் ஆலோசனை கூறுகின்றனர்.

## வன்னிப் போர்முனை

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்து சென்று வன்னியில் மக்கள் குடியேறினால் அங்கேயும் இராணுவம் படைஎடுத்து வரமாட்டாதா? என்ற ஒரு கேள்வியைப் பலர் எழுப்புகின்றனர்.

குடாநாட்டைப் போலல்லாது வன்னி ஒரு பரந்த நிலப்பரப்பைக் கொண்டது. ஏறக்குறைய 8000 ச.கி. மீற்றர் விஸ்த்தீரணத்தை உடையது. யாழ்ப்பாணம் ஏறக்குறைய 900 ச.கி.மீ ஆகும். (இதில் வலிகாமத்தின் பரப்பளவு காற்பங்கு என்பது குறிப்பிடத்தக்கது.)

குடாநாட்டைப் போலல்லாது வன்னி ஒரு பரந்த நிலப்பரப்பைக் கொண்டது. ஏறக்குறைய 8000 ச.கி. மீற்றர் விஸ்த்தீரணத்தை உடையது. யாழ்ப்பாணம் ஏறக்குறைய 900 ச.கி.மீ ஆகும். இதில் வலிகாமத்தின் பரப்பளவு காற்பங்கு என்பது குறிப்பிடத்தக்கது. 900 ச.கி. மீற்றரைக் கைப்பற்றவே 40 ஆயிரம் படையினர் போதாதிருக்கும்போது. வன்னியில் ஒரு படை எடுப்பைப் பற்றிச் சிங்களப்படை சிந்தித்துப் பார்க்கவே முடியாது.

900 ச.கி. மீற்றரைக் கைப்பற்றவே 40 ஆயிரம் படையினர் போதாது இருக்கும்போது, வன்னியில் ஒரு படை எடுப்பைப் பற்றிச் சிங்களப்படை சிந்தித்துப் பார்க்கவே முடியாது. ஒரு பிரதான படைத் தளத்திலிருந்து படையினர் நகர்ந்து, குறித்த இலக்கை அடையும்போது பிரதான தளத்திற்கும், முன்னிலையில் நகரும் துருப்பினருக்குமிடையே ஒரு நிலத்தொடர்பு இருக்க வேண்டும். அந்த நிலத்தொடர்பு வழியாகத்தான் நகரும் படைக்கான விநியோகம் சென்றுவரும். அந்த நிலத் தொடர்பை அறுத்தெறியும் வலு புலிகளுக்கு வந்து சேருமானால் படையினர் பாரிய உயிரிழப்பைச் சந்திக்க வேண்டிவரும்.

பலாலித் தளத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி நகர்ந்த படையினர், குறைந்தது 10 கிலோ மீற்றர் நீளச் சங்கிலி போன்ற ஒரு தரைத் தொடர்பைப் பேணியபடியே நகர்ந்தனர். தரைத் தொடர்பின் தூரம் அதி–கரிக்குமானால் அந்தத் தூர இடைவெளிக்குள் நிறுத்தக்கூடிய அளவு ஆட்பலம் சிங்களப் படையிடம் இல்லை. வன்னி நிலப்பரப்பிலுள்ள எந்த ஒரு படைத்தளத்தில் இருந்தும் 10 கி.மீ. தூரம் என்பது ஒரு பயனற்ற நகர்வு இடமாகவே இருக்கும். அதைவிடத் தூரம் அதிகரிக்க அதிகரிக்கப் படையினரின்பலம் குறைந்து கொண்டே போகும். அது தமிழர்படைக்கு வாய்ப்பாகிவிடும். இந்த இராணுவச் சிக்கலைச் சிங்களத் தளபதிகள் நன்கு அறிவர். எனவே வன்னி நிலப்பரப்பிற் பாரிய ஒரு படை எடுப்பு என்பது மூன்று காரணங்களாற் சாத்தியமற்றது.

முதலாவது, பெருந்தொகைத் துருப்புக்கள் குடாநாட்டிற்குள் முடக்கப்பட்டுள்ளதால் படையினருக்கு இருக்கும் ஆட்பற்றாக் குறை. இரண்டாவது, பாதுகாப்பான ஒரு நகர்வு பற்றிச் சிங்களத் தளபதிகளால் எண்ணிப் பார்க்க முடியாத அளவிலான பெரிய நிலப்பரப்பு.

மூன்றாவது, குடாநாட்டிற்குள் முன்னர் நிலைகொண்டிருந்த புலிவீரர்கள் இப்போது வன்னிப் பெருநிலப்பரப்பில் இருப்பதால் புலிகளின் ஆட்பலம் அங்கே அதி–கரித்து விட்டது.

ஒரு இலட்சம் துருப்பினரைக் கொண்டிருந்த இந்திய ஆக்கிரமிப்புப் படையாலேயே வன்னியின் பெருநிலப்பரப்பிற்கு ஈடுகொடுக்க முடியவில்லை.

அத்துடன், சிங்களப் படையிடம் தற்போது உள்ள 'கெவிச்சர்' வகை ஆட்டிலறி ஏவுகருவி ஆகக் கூடியது 13 கி.மீ தூரத்திற்கு மட்டுமே எறிகணைகளை செலுத்த வல்லது. வன்னிப் பெருநிலப்பரப்பிலுள்ள ஒவ்வொரு படைத்தளத்திற்கும் இடையேயான தூரம் 50 இலிருந்து சுமார் 100 கி.மீ வரையானது என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே குடாநாட்டைவிட எறி–கணை அபாயங்கள் படை எடுப்பு அபாயங்கள் இன்றி மக்கள் வன்னியில் வாழமுடியும் என்பது உண்மையாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறீலங்கா வடக்கின் புனரமைப்புக்கென சர்வதேச நிதியுதவி பெறமுயற்சி

## –நிலையை விளக்கி யாழ். பிரசைகள் குழு பிரித்தானியப் பிரதமருக்கு விளக்கமான கடிதம்

சிறீலங்கா அரசு, வடக்கில் அமைதி திரும்பிவிட்டதாகக் கூறி, வடக்கின் புனரமைப்புக்கெனச் சர்வதேச நிதி மீட்டங்களைப் பெறமுனைகின்றது.

இதன் முதற்படியாக, சிறீலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகள், வடக்கு–கிழக்கில் அமைதி திரும்பும் நேரத்திற் புனரமைப்புக்கும், புனர்வாழ்வுக்கும் உதவவென முன்னர் அமைதிப் பேச்சுவார்த்தை நடந்த காலகட்டத்தில் ஒதுக்கிய நிதி உதவிகளைப் பெறுவதற்கான முன்மொழிதலைச் சிறீலங்கா விடுத்துள்ளதாகச் சிறீலங்கா அரச செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் அங்குள்ள உண்மைநிலைகளை விளக்கி யாழ்ப்பாணம் 115, 4ஆம் குறுக்குத் தெருவில் இயங்கி, தற்பொழுது தென்மராட்சி மிருசுவிலில் திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் இடம்பெயர்ந்து செயற்படும் யாழ். பிரசைகள் குழு, 28.12.95 இல் பிரித்தானியப் பிரதமர் மாண்புமிகு யோன் மேயர் அவர்களுக்கு ஒரு கடிதத்தை அனுப்பியுள்ளது. இக்கடிதத்தினைச் சர்வதேசத் தமிழர் சம்மேளனம் வெளியிட்டுள்ளது. அதனை இங்கு முழுமையாகப் பிரசுரிக்கின்றோம்.

மாண்புமிகு திரு. யோன் மேயர்

கௌரவம்மிகு பிரித்தானியப் பிரதமர்

10 டௌனிங் வீதி

இலண்டன்.

அன்புடையீர்!

வடபிரதேசத்திற்கு அமைதி திரும்புமாயின், அதன் புனரமைப்பிற்கும் மக்களின் புனர்வாழ்வுக்குமெனச் சிறீலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகள் குழு, முன்னர் ஒதுக்கி வைத்த நிதிகளில் இருந்து உதவிகளைப் பெறுவதற்கான முன்னறிவிப்பு ஒன்றைச் சிறீலங்கா அரசு முன்மொழிந்துள்ளதாகச் சிறீலங்காவின் அரச தொடர்பு சாதனங்களூடாக நாம் அறிகின்றோம். முன்னெப்பொழுதுமே இல்லாதவகையில், அமைதி இப்பகுதிகளிற் சீர்குலைந்துள்ள இந்நேரத்தில், உண்மை மில்லாத காரணங்களைக் கூறி இவ் உதவிகளுக்கு வேண்டுகோள் விடுப்பதன் நோக்கம், வலிகாமப் பிரதேசத்திற்கும் யாழ்ப்பாண நகரப் பகுதிக்கும் புனரமைப்பு வேலைகளைச் செய்து, இராணுவ ஆக்கிரமிப்புக்குள் உள்ள இப்பகுதிகளில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கேயாகும். இம்முன்னறிவித்தல் வேண்டுகோள் குறித்த செய்தியானது தமிழ் மக்களினால் தமது எதிர்காலத்திற்கு, இது விளைவிக்கக்கூடிய அச்சம், அபாயங்கள் குறித்து எடுத்து நோக்கப்படுவதற்குப் பின்வரும் காரணங்கள் உள:

01. புனரமைப்புக்கு என முன்மொழியப்பட்டுள்ள இப்பிரதேசங்களில் வசித்த மக்கள் 500,000 பேர், (சில நூறு பேர் தவிர), சூரியப்பிரகாசம் எனும் குறியீட்டுப் பெயருடன் சிறீலங்கா இராணுவம் ஆட்டிலறி, மோட்டார் எறிகணை வீச்சுக்களுடன் ஈவிரக்கமற்ற முறையில் மரணங்களையும், அழிவுகளையும் பெரியளவில் ஏற்படுத்திக் குடிமக்கள் பிரதேசங்கள் நோக்கி முன்னேறி வந்தபொழுது, பாதுகாப்பான பிரதேசமாக உள்ள வடமராட்சி, தென்மராட்சி, வன்னிப் பகுதிகளை நோக்கி வீடுகளை விட்டு வெளியேறி இடம் பெயர்ந்துள்ளனர். இந்த மக்கள், புனரமைக்கப்பட எனக் கூறப்பட்டுள்ள பிரதேசத்திற்கு வெளியே போதிய உணவு, இருப்பிடம், சுகாதார வசதிகள் அற்ற நிலையில் மிக மோசமான நிலையில் வசித்து வருவதுடன், இதிலிருந்து விடுபடுவதற்குப் பெரியளவில் உதவிகள் தேவையான சூழ்நிலையில் உள்ளனர்.

02. புனரமைக்கப்படப் போவதாகக் கூறப்பட்டுள்ள இப்பகுதி, சிறீலங்கா இராணுவ நடவடிக்கைகளினால் முற்று முழுதாக நாசமாக்கப்பட்டு மக்கள் அற்ற பிரதேசமாக மாற்றப்பட்டுள்ளது. இப்பகுதி பெரும்பாலும் முழுமையாக இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டு எந்தத் தொலைக்காட்சி ஒளிபரப்பிலும் இராணுவ நகரமாக இராணுவத்தினரால் நிரம்பி வழிவதைக் காணக் கூடியதாக உள்ளது. சிறீலங்கா இராணுவத்தினரால் பல வந்தமாக வெளியேற்றப்பட்ட இம்மக்கள் இப்பிரதேசத்தில் இருந்து இராணுவம் வெளியேறினால் அல்லாது இப்பிர தேசத்திற்குத் திரும்பி வந்து குடியமர மாட்டார்கள். சிறீலங்கா பாதுகாப்புப் படையினரின் மனித உரிமை மீறல்களும், வன்முறைகளும், ஏற்படுத்திய சாதனைகளும், கிழக்கில் இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்களின் பயங்கர அனுபவங்களும் இலகுவில் தமிழ் மக்களுடைய மனதுகளில் இருந்து நீங்கா.

03. புனரமைப்பும் புனர்வாழ்வும் முழு வடக்கு – கிழக்குப் பிரதேசத்திற்கும் அமைதி ஏற்பட்டு அதன் பின்னரும் மக்களுடைய ஒத்துழைப்புடனும், பங்குபற்றலுடனும் மட்டுமே செய்யப்பட வேண்டிய ஒன்று. சமாதானத்தை ஏற்படுத்துவேன் என மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளினால் ஆட்சிக்கு வந்த சிறீலங்கா அரசு, அதனுடைய இராணுவ நடவடிக்கைகளினாலும் ஒடுக்கு முறை நிர்வாகத்தினாலும் நீண்டகாலப் போரொன்றுக்கான அடிக்கல்லையே நாட்டியுள்ளது. இத்தகைய விதத்தில் மேலும் இராணுவ மோதல்களுக்குரிய இலக்காக உள்ள பிரதேசமாக இப்பகுதி சிறீலங்காவால் அழுத்தப்பட்டுள்ள இந்நிலையில், இப்பிரதேசத்தின் புனரமைப்புத் திட்டம் ஒன்றை செயற்படுத்தல் என்பது அறிவற்றதும் நடைமுறைச் சாத்தியமற்றதுமான செயலாகும்.

04. சிறீலங்கா அரசு, பாதிப்புற்ற தமிழர் மேல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் பொருண்மியத் தடைகள், உணவு, மருந்து, உரம், கட்டடப்பொருட்கள் போன்ற இராணுவப் பொருட்கள் அல்லாத பொருட்களின் சுதந்திரமான வழங்கலுக்கு வடக்கில் ஏற்படுத்தப்பட்டுள்ள தடைகள், வடக்கில் உள்ள மக்களுக்கு என அனுப்பப்பட்ட கடிதங்களைக் கொழும்பிற் பல மாதங்களாகத் தடுத்து வைப்பதும் அல்லாமல் அதிகாரபூர்வமற்ற வகையில் அவற்றை உடைத்தல் போன்ற இத்தகைய எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து இங்குள்ள மக்களுக்குச் சொல்லொணாப் பாதிப்புக்களையும் கடும் துன்பங்களையும் ஏற்படுத்தி வருகின்றது. இவைகள் போதாது என்று இப்பகுதிக்கான பணப் புழக்கத்தை உத்தியோகபூர்வமற்ற முறையில் தடை செய்து, முழு மக்களுக்கும் பணத்தின் திரவத்தன்மைச் சிக்கல்களை உருவாக்குவதன் மூலம் பொருண்மிய முயற்சிகளின் கழுத்தை நெரித்துத் திணற வைக்கும் செயற்பாடுகளையும் திட்டமிட்டுச் செய்து வருகின்றது சிறீலங்கா அரசு. இதனால் வடக்கிலுள்ள சிறீலங்கா அரச வைப்பகங்கள் கூட, தமது வாடிக்கையாளர்கள் அவர்களின் சொந்த வைப்புக்களிலிருந்து பணத்தை எடுப்பதற்கான கேள்விகளுக்குக் கூட மதிப்பளிக்க முடியாது உள்ளன.

வடக்கிலுள்ள பல நிறுவனங்களினதும் சம்பளங்களைக் காசோலையாகவே ஊழியர்களுக்கு வழங்க வேண்டுமெனக் கட்டாயப்படுத்திவிட்டு, அவற்றைப் பணமாக்குவதற்குக் தேவையான பணத்தை வைப்பகங்கள் எடுத்து வருவதற்கு இராணுவ அதிகாரிகள் தடை செய்தினால் வைப்பகங்கள் தமது வழமையான சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்க முடியாது உள்ளன. இவை மட்டுமல்லாது கொழும்பில் உள்ள தமிழர்களைப் பாகுபாடான முறையிற் கைதாக்குவது, கொழும்புக்குப் பயணம் செய்பவர்களை, வவுனியாப் பயணிகள் இடைமாற்ற முகாம்களிற் தடுத்து வைப்பது ஆகியவை சிறீலங்கா அரசின் நல்நோக்குக் குறித்துத் தமிழர்களிடையே நம்பிக்கை மீனத்தைத் தோற்றுவிக்கையில், முழுமையான இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ள பகுதிகளிற் புனரமைப்புத் திட்டத்தை முன்மொழிவது உண்மையிற் பாதிக்கப்பட்ட தமிழரில் உள்ள அக்கறையினாற் தானா? என்ற பலத்த சந்தேகத்தைத் தமிழரிடையில் எழவைத்துள்ளது.

05. புனரமைப்பு வேலைகளைச் செயற்படுத்த முன்மொழிகையில், உதவிவழங்கும் நாடுகள் அதற்கான சூழ்நிலைகளின் இயல்புத் தன்மையையும் ஏற்படுத்தப்பட்ட சொத்தழிவுகளின் மதிப்பீடுகளையும் மதிப்பிட்டு அந்தப் புனரமைப்பு வேலைகளை மேற்பார்வை செய்யவும் வேண்டும். இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசத்திற் சிறீலங்கா அரசின் செயற்பாடுகளும் கட்டடங்களினதும் மற்றும் சேதங்களினதும் உண்மையான மதிப்பீடுகளும் புதைகுழிக்குள் மறைக்கப்பட்டு, சிறீலங்கா அரசும், இராணுவமும் இப்பிரதேசங்களுக்கு உள்ளூர், வெளியூர் அவதானிகள் ஒருவரையாவது சுதந்திரமாகச் செல்ல முடியாது, இதுவரை மாற்றமற்ற உறுதியுடன், தடுத்து வருகின்றன.

முடிவாக வடக்கிலுள்ளவர்களின் உடனடித் தேவை, சிறீலங்காவின் இவ்வொடுக்குமுறைச் செயற்பாடுகள் அனைத்தும் அகற்றப்பட்டு, பெருமளவில் இடம்பெயர்ந்துள்ள மக்களின் துன்பங்களை– பாதிப்புக்களை மாற்றக்கூடிய வகையிற் பெருமளவில் உதவிகள் வழங்கப்படுதலே என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம். தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகளைக் கொடுக்கக்கூடிய தெளிவான அமைதித் தீர்வு ஒன்று ஏற்பட்டு, இடம்பெயர்ந்த மக்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பி அச்சமின்றி, மரியாதையுடனும் மதிப்புடனும் வாழக்கூடிய சூழ்நிலை ஒன்று உருவாகும் வரை புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகள் தள்ளி வைக்கப்பட வேண்டும். அத்தகைய ஒரு சமாதானத் தீர்வு, சிறீலங்கா அரசும் தனது தற்போதைய இராணுவ ரீதியான தீர்வுக்கான அணுகுமுறைகளைக் கைவிட்டு, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பதற்கு அரசியற் தீர்வுக்கான வழிமுறைகளுக்குத் திரும்புவதன் மூலம் மட்டுமே ஏற்படும் என்பது எமது திடமான நம்பிக்கை.

இந்நேரத்தில் உங்களுக்கும் மற்றும் உதவி வழங்கும் நாடுகளுக்கும், இடம்பெயர்ந்த வடக்கின் மக்களுக்கு இன்று வழங்கும் உதவிகளுக்காகவும், அமைதி ஏற்படும்பொழுது புனர்வாழ்வுக்கும் புனரமைப்புக்கும் உதவிகள் வழங்குவதாக வாக்குறுதி வழங்கியுள்ளமைக்காகவும் எமது இதய நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

உங்கள் உண்மையுள்ள

கே. குணரட்னம்

தலைவர்

ஆர். மகேந்திரன்

செயலாளர்

## பாதிக் கிணறு தாண்டிவிட்டோம்

உலகில் எங்கு என்ன நடந்தாலும் தனது மூக்கை நுழைப்பதை வழக்கமாகக் கொண்டுள்ள அமெரிக்கக் கிளின்ரன் நிர்வாகம் வழமைபோல எமது சிக்கல் குறித்தும் தனது கருத்தினை வெளியிட்டுள்ளது. இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சில கருத்துக்கள் 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கைக்கு முன்னரே அமெரிக்காவாற் சொல்லப்பட்ட போதும், சூரியக்கதிர் நடவடிக்கை முதற் கட்டம் முடிந்துவிட்டதாகச் சிங்கள அரசு அறிவித்த பின்னர் இவ்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளதால் முக்கியம் பெறுகின்றது.

யாழ். நகர் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்க வெற்றி என்று கூறும் அமெரிக்கா மறு வரியில் இவ்வெற்றி ஒரு வெற்றியல்ல எனக்காட்ட முற்படும் அரசியல் வித்தையைக் காண்பிக்க முயல்கிறது. அரசியற் தீர்வின் அவசியம், புலிகளை அழிக்க முடியாமை, இராணுவ நடவடிக்கைகள் பயனளிக்காது போன்ற கருத்துக்கள் சில காலமாக அமெரிக்காவால் மட்டுமல்ல மேற்குலக நாடுகளாற் குறிப்பாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளாலும் முன்வைக்கப்பட்டு வருவதும் நாமறிந்ததே.

இப்போது எம் மக்கள் மத்தியிலே எழும் கேள்வி என்னவென்றால் இத்தனை அழிவுகளையும் செய்யவும், 5 இலட்சம் மக்கள் இடம்பெயரவும் காரணமான சிறீலங்காவின் கொடிய இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட காலத்திலே இவர்கள் எல்லாம் எங்கே போனார்கள் என்பதுதான். வாய்கூசாது இப்போது வாசிங்டனிலிருந்து அறிக்கை விடும் அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சு, கடந்த இரு மாதங்களாகக் கண்களைப் பொத்திக் காதுகளைமூடி எம்மக்கள்பட்ட அவலங்களை வெளிநாடுகளில் வாழும் எம்மவர் பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள் மூலம் எடுத்துரைத்த போதும் வாய்மூடி மௌனியாக இருந்தது ஏன்? தனது இராணுவ நடவடிக்கையை அமெரிக்கா, இந்தியா ஏனைய மேற்குலக நாடுகள் அங்கீகரித்திருப்பதாகச் சந்திரிகா அம்மையார் தாண்டவம் ஆடியபோது அமெரிக்கா மறுப்புத் தெரிவிக்காதது ஏன்? இப்போது ஏனிந்த இரட்டை வேடம்? கனவான் நாடகம்? யாரை ஏமாற்ற அல்லது யாருடைய நன்மைக்காக இப்பூடகமான, மறைபொருள், உள்ளர்த்தம் கொண்ட அரசியல் மொழியில் இவ்வறிக்கை வெளியடப்படுகின்றது? இவையெல்லாம் இன்று எம்மக்கள் மத்தியிலே எழும் கேள்விகள்.

இக்கேள்விக்கான விடைகள் கூறும் செய்திகள் மிக முக்கியமானவை, சந்திரிகா அம்மையார் கூறியதில் எவ்விதத் தவறுமில்லை. இராணுவ நடவடிக்கை மூலம் புலிகளையும் மக்களையும் பிரிக்க முடியும் என்ற அபத்தமான கருத்தை ஆதரித்ததில் அமெரிக்கா முன்னணியில் நின்றது. அதற்காக யாழ்ப்பாணம் கைப்பற்றப்படுவதற்கான போரை அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகம் ஆசீர்வதித்து ஆதரித்தது, எதிர்பார்த்த விளைவை எண்ணி இதுவரையும் காத்திருந்தது. ஆனால் நடந்தது என்ன? 5 இலட்சம் மக்கள் கட்டிய துணியோடு கைதடி தாண்டியபோது சிங்களம் மட்டும் ஏமாறவில்லை. இந்தியா உள்ளிட்ட முழுமேற்குலகமே முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கப் பார்த்தவன் முழித்தது போல் முழித்தன, திருடப்போன இடத்தில் தேள்கொட்டிய கள்வன் திருதிருவென முழித்ததுபோல் அவமானத்தை, வலியை வாய்க்குள்ளே மறைத்துக் கொண்டன. நாலுவரி அறிக்கை தன்னும் விடமுடியாமல் தவித்தன, தடுமாறின.

எனவே இக்கட்டத்திலேதான் சிங்கள அரசு வீசும் எலும்புத்துண்டுகளை இதுவரை பொறுக்குவதிலே உலகசாதனை நிகழ்த்திக்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

www.tamilarangam.net

*அன்புசால் தமிழ்க்குடிமக்களே!*

**தமிழீழத்தில் காலாகாலமாகச் சிங்களத்தின் அட்டூழியங்கள் தனது கோரவடுக்களைப் பதிக்கும்போது, தமிழ்இலக்கியம் தனது முகத்தை வேறுபக்கம் திருப்பிக்கொள்ள முடியாது. இது காலத்தின் தவிர்க்கமுடியாத தேவை. அந்த வகையிலே ஈழத்து இலக்கியங்களும் போராட்டத்தின் வடுக்களைச் சுமந்து, தன்னையும் இந்த மக்களின் துயரங்களில் இணைத்து, தானும் போராடி, தன்னை நிலைநிறுத்திக் கொள் ள வேண்டும். ஈழத்தின் இலக்கிய கர்த்தாக்கள் இன்று புலிகளின்பின்னால் திரண்டுநின்று, தமது படைப்புக்களை விடுதலையின்பால் ஈடுபடுத்திப் படைப்பது, இன்று மக்களிடையே விடுதலையின் தேவை எந்தளவுக்கு வேரோடிப் போயுள்ளதென்பதை விளக்கும்.**

**ஈழத்தின் பிரபல எழுத்தாளர் நாவண்ணன் அவர்கள் ", சிறி லங்கா அரசு முன்னோக்கிப்பாய்தலென்று முறையற்ற விதத்தில் பெயர் கொடுத்து அப்பாவிப் பொதுமக்களின்மேல் காட்டுமிராண்டித்தனமாகப் பாய்ந்த வேளையிலே வீழ்ந்துபோன எமதரிய தமிழ்முத்துக்களை நினைவு கூர்ந்து எத்தனை எத்தனை வித்துக்கள் வீழ்ந்தன என்ற தலைப்பில் நூாலுருவாக்கியுள்ளார்; நவாலிப் படுகொலையின்போது புலம்பெயர் வாழ் மக்கள் எந்தளவுக்குக் கொதித்தெழுந்து தம்மினத்துக்கு நடை- பெற்ற அட்டூழியத்தை உலகக் காதுகளில் ஓங்கியறைந்தார்கள் என்பதை நாமறிவோம். ஆனால் அந்த மக்கள் எந்தளவு தூரம் பதறினார்கள் எந்தளவுதூரம் குண்டுபட்டுச் சிதைந்துபோனார்கள். அந்த வேளையிலே அந்த மாந்தரெல்லாம் எந்தளவுக்கு நொந்து, தம் உறவுகள் சுற்றங்கள் கண்முன்னியிலேயே துடிதுடிக்க, தாம் காயப்பட்டவேளையிலும் அவர்களைக் காக்க முனைந்த பேராண்மைகளையும், நாமறிய இவ் வெழுத்தாக்கம் உதவுகிறது.**

**இப் பதிவானது; சிறிலங்காவின் இருட்டடிப்புகளினூடாக முன் னோக்கிப் பாய்தலின் போது சிறிலங்கா எவ்வாறு அராஜகத்தனமாக நடந்து கொண்டது என்பதையும்; எமது மக்கள் எத்துணை இன்னல்களுக்குட்பட்டார்கள் என்பதையும் புலம் பெயர்ந்து வாழ் தமிழ் மக்கள அறிய உதவும். அதற்காக, இது 'களத்தில் ' செய்தி த்தாளில் முழுதாக மறுபிரசுரம் செய்யப்படுகிறது. இது தொடர்ந்தும் தொடராக 'களத்திலில்' வெளிவரும்.**

**இனிய தமிழ்மக்களே! இது உங்கள் மனதில் தடம் பதித்து உண்மைநிலையை உணரவைத்து இன்னமும் சமாதானத்தில் நம்பி க்கை வைத்துள்ளதாக உலகை ஏமாற்ற நினைக்கும் சந்திரிகாவை யும் உங்களுக்குப் புரியவைத்து, விடுதலையின்பால் இன்னமும் அதிகப்படியான வேகத்தில் உங்களை இணைத்தால், இதன் பயன் குறித்து நூலாசிரியரும், வெளியீட்டாளரும், மறுபிரசுரம் செய்யும் நாங்களும், மிக மகிழ்வோம் என்பதில் ஐயமில்லை.**

- ஆசிரியர்





# எத்தனை வித்துக்கள்

## அத்தியாயம் - 1

வெண்தாமரை இயக்கம் என்று வெளிநாடு களுக்கு மயக்கிக்காட்டி, வெறித்தனமாடிய வேடதாரிகளின் வெளிப்பாடு–

புத்தபகவானுக்கு ரத்தாபிஷேகம் செய்து கொண்டு சித்தாந்தம் பேசும் சித்தம் கலங்கியோரின் பித்தலாட்டம்–

யாரென்ன சொன்னாலும் பேரினவாதப் பிச்சையிற் பிழைப்பு நடாத்துகின்ற சிறுமதிச் சிங்கள அரசுத்தனம் அல்ல அசுரத்தனம்–

சொந்த இனம், கொண்ட மதம் இவற்றின் புனிதத்தையும், மனிதத்தையும் மறந்து தம்மைக் கீழ்மைப்படுத்தி, ஆதிக்க எஜமானர்களின் அடிநக்கி, பௌத்த சிங்கள எஜமானர்கள் போடும் வெள்ளிகளுக்காகக் காட்டிக் கொடுக்கத் துணிந்த லக்ஷ்மன் கதிர்காமர் போன்றோரின் யூதாசிசம்–

காந்தியம் பேசிக் கழுத்தறுப்புச் செய்கின்ற பாரத அரசின் பச்சைப் பரத்தைத் தனம்–

அமைதி– சமாதானம்– போர்நிறுத்தம்– பேச்சுவார்த்தை என்று வாய் கிழியப் பேசும் அதேவேளை, ஆயுத விற்பனையால் ஆதாயம் தேடுகின்ற உலக நாடுகளின் ஊத்தைத்தனம் அனைத்தும் ஒன்றிணைந்து, அக்கினியை உமிழ்ந்து அப்பாவிகளை அழித்த அக்கிரமம்தான்.........

'ஒப்பறேஷன் லீப் போவேர்ட்' எனப்படும், சிறீலங்கா இராணுவத்தின் 'முன்னேறிப் பாய்தல்' மூர்க்க நடவடிக்கை.

*1995 ஆடி 9ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை பேரினவாதிகள் தொடங்கிய இராட்சத இன அழிப்பு.*

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

"உஸ்......" என்ற ஊளையுடன் உச்சிக்கு மேலாகச் சென்று வெடிக்கும் ஷெல் வெடிகள்–

விட்டு விட்டு வெடிக்கும் ஆட்லறி ஷெல்களின் அதிர்வுகள்– துப்பாக்கித் துப்பல்களின் சடசடப்புகள்–

கொஞ்சக்காலமாகக் கண்ணுக்கு எட்டாத உயரத்திற் பறந்துகொண்டு குண்டு முட்டை மிடும் இயந்திரக் கோழிகள்–

எங்கள் பிள்ளைகளுக்குப் புகைவண்டியைத் தெரியாது. ஆனால், 'புக்காரா' வைத் தெரியும்.

பட்டாசு வெடிகளும், வாண வேடிக்கைகளும் பழக்கமில்லை. ஆனால் குண்டுகளை, அக்கி னித் துண்டுகளாய் ஆகாயத்தில் அணிவகு த்துச் செல்லும் எறிகணைப் பந்தங்களைக் கண்டிருக்கின்றார்கள்.

இவையெல்லாம் இந்த மண்ணுக்குப் பழகிப்போன பழைய விடயங்கள்.

அன்றும் அப்படித்தான். அதிகாலை உறக்கத்தை விரட்டிக் கொண்டு வீழ் ந்து வெடித்தன எறி- கணைகள். பழகிப்போன விடயங்கள் என்றாலும் பக் கத்தில் விழும்போது பய ங்கரம், பதற்றம், சற்று நேரத்தில் புரிந்தது. இது வழக்கம்போல் அல்ல வழ மைக்கு மாறானது. இது வரை வேலிக்குள் நின்று வீரம் காட்டி நின்றவர்கள், இன்று வீதிக்கு வந்து விரட்டத் தொடங்குகின்றார்கள் என்று–

"இஞ்சேர்..... இந்தாப்பா.....! என்னப்பா.....! பிள்ளை.....! மோனை.....! தம்பி.....! அண்ணா.....! அண்ணி.....! மச்சான்.....! மச்சாள்.....! மாமா.....! மாமி.....! எணை அப்பு.....! அம்மா.....! எழும்புங்கோ.....! ஷெல் அடிக்கிறான். உங்கால குழறிச் சத்தம் கேட்குது. ஆமி வாறான் போல..... இனியும் இருந்தால் ஆபத்து..... பெட்டியைத் தூக்கு..... சைக்கிளை எடு..... ஓடுங்கோ.....!"

வீட்டுக்கு வீடு விழிப்புகள், விளிப்புகள்..... விறுவிறுப்புகள்.....பரபரப்புகள்.....வீதிகள் எங்கும் 'தட தட' காலடி ஓசைகள்.

"ஷெல் விழுகுது எங்க போறது?"

"ஷெல் சத்தம் கேட்ட உடனே விழுந்து படுங்கோ!"

இப்படியே போய்க்கொண்டிருந்தால் எங்க போறது?"

"எங்க போறது, கோயிலுக்கு இல்லாட்டிப் பள்ளிக்கூடப் பக்கம்தான். நிண்டு கதைக்காமல் நடவுங்கோ?"

படுத்த பாயில் இருந்து எழுந்த கோலம்: பல் விளக்கவில்லை. பறட்டைத் தலைகள், பயந்த விழிகள், பச்சைக் குழந்தைகள், பழங்கிழடுகள், பிரசவத்துக்காகக் காத்து நிற்கும் பிள்ளைத்தாச்சிகள், நோயாளிகள்..... ஓடும் நிலை.....

இப்படித்தான் அன்றைய நாள் விடிந்தது.

எங்கள் பிள்ளைகளுக்குப் புகைவண்டியைத் தெரியாது. ஆனால் 'புக்காரா'வைத் தெரியும்.

பட்டாசு வெடிகளும், வாண வேடிக்கைகளும் பழக்கமில்லை. ஆனால் குண்டுகளை அக்கினித் துண்டுகளாய் ஆகாயத்தில் அணிவகுத்துச் செல்லும் எறிகணைப் பந்தங்களைக் கண்டிருக்கின்றார்கள்.

இவையெல்லாம் இந்த மண்ணுக்குப் பழகிப்போன பழைய விடயங்கள்.

அன்றும் அப்படித்தான். அதிகாலை உறக்கத்தை விரட்டிக் கொண்டு வீழ்ந்து வெடித்தன எறிகணைகள். பழகிப்போன விடயங்கள் என்றாலும் பக்கத்தில் விழும்போது பயங்கரம், பதற்றம், சற்று நேரத்தில் புரிந்தது. இது வழக்கம் போல் அல்ல வழமைக்கு மாறானது. இதுவரை வேலிக்குள் நின்று வீரம் காட்டி நின்றவர்கள், இன்று வீதிக்கு வந்து விரட்டத் தொடங்குகின்றார்கள்

www.tamilarangam.net



# எத்தனை வீழ்ந்தன

'இஞ்சேர்....இந்தாப்பா...! என்னப்பா.....! பிள்ளை.....! மோனை...! தம்பி....! அண்ணா....! அண்ணி...! மச்சான்...! மச்சாள்....! மாமா...! மாமி....! எணை அப்பு....! அம்மா...! எழும்புங்கோ....! ஷெல் அடிக்கிறான். உங்கால குழறிச் சத்தம் கேட்குது. ஆமி வாறான் போல... இனியும் இருந்தால் ஆபத்து.... பெட்டியைத் தூக்கு.... சைக்கிளை எடு...ஓடுங்கோ...!'

மாலை மணி 5.30

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவப்பீடப் பிரிவில், மருத்துவ மாணவர்கள் கொண்டாடும் மருத்துவ வாரத்தின் இறுதி நாள் நிகழ்வு.

சரியாக 5.30 மணிக்கு ஆரம்பிக்க வேண்டிய விழா, தாமதமாகிக் கொண்டிருந்தது. அன்றைய விழாவின் பிரதம விருந்தினர், யாழ். போதனா வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிபுணர் டொக்டர் எம். கணேசரட்ணம். அவர் நேரத்துக்கு வந்து சேரவில்லை. அவரை எதிர்பார்த்து விழா ஆரம்பிக்கத் தாமதமாகிக் கொண்டிருந்தது.

மருத்துவப்பீட மாணவர்களிடையே கூட, வழக்கமான கலகலப்புக் குறைவு. விழாவை நடாத்தி முடிக்க முடியுமா என்ற வினாக்குறி விழாவின் அமைப்பாளர்களின் முகங்களில்– பிரதம விருந்தினரின் தாமதத்துக்குக் காரணம்..... அவர்களுக்குத் தெரியும்.

7.00 மணிக்குப் பின்னர் டொக்ரர் எம். கணேசரட்ணம் தமது துணைவியாருடன் வருகின்றார். உடனே விழா ஆரம்பமாயிற்று.

மாணவர்களிடையே நடந்த நாடகப் போட்டியில் முதற்பரிசு பெற்ற அந்த நாடகம் அரங்கேற்றப்பட்டது. நாடகத்தின் பெயர் 'பொய் வேலி' – நாடகத்தின் ஆரம்பப் பாடல்.....

"எத்தனை எத்தனை வித்துக்கள் வீழ்ந்தன?

எத்தனை எத்தனை மொட்டுக்கள் காய்ந்தன?

எத்தனை எத்தனை இளசுகள் மாய்ந்தன?

எத்தனை? எத்தனை? எதுவரை....."

இந்தப் பாடல் அன்றைய நாளின் யதார்த்தத்தை உரைப்பது போலிருந்தது. உண்மைதான். அன்று எத்தனையோ வித்துக்கள், வீழ்த்தி அழிக்கப்பட்டு விட்டிருந்தன. அதன் கொடுமையை அங்கிருந்தவர்கள் அப்பொழுது உணர்ந்திருக்கவில்லை. ஆனால், டொக்ரர் கணேசரட்ணம் நிச்சயமாக உணர்ந்திருந்தார்.

நாடகத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற பிரதம விருந்தினர் உரையில், முதலிற் தனது தாமதமான வருகைக்காக மன்னிப்புக் கோரினார். பின்னர் "இன்றைய சூழ்நிலையில் எம்போன்றவர்கள் இதுபோன்ற நிகழ்வுகளில் குறித்த நேரத்தில் கலந்துகொள்ள முடியாமற்போவது தவிர்க்க முடியாதது. எமது கடமை இதற்கு அனுமதிக்காது....."

தொடர்ந்து உணர்ச்சி பற்றி, இன்றைய போர்க்கால சூழல்களில் அந்த உணர்வுக்கு அளிக்கவேண்டிய முக்கியத்துவம் பற்றி, அவர் பேச்சுத் தொடர்ந்து கொண்டிருந்தது.....

உருவத்தால் உயர்ந்த மனிதன் டொக்ரர் கணேசரட்ணம். மேடையில் நின்று பேசும்போது இன்னும் உயர்ந்தவராக மட்டுமல்ல, உள்ளத்தால் பன்மடங்கு உயர்ந்தவராக என் கண்களுக்குத் தோன்றினார்.

சிறிலங்கா அரசு செய்யும் இனவழிப்புகளுக்கிடையே..... பெருக்கெடுத்து ஓடும் இரத்த ஆறுகளிடையே..... வடக்கு வாழ் தமிழர்களுக்கு என்று விட்டு வைத்திருக்கும் ஒரே ஒரு சஞ்சீவி மூலிகை, சத்திர சிகிச்சை நிபுணர்தான் அந்த மனிதன். அன்று காலை முதல் மாலை, அந்த நிகழ்வுக்கு என்று தாமதமாகவேனும் புறப்படும் வரையில், மனித மரண ஓலத்திடையே பம்பரமாய்ச் சுழன்று பணியாற்றிவிட்டு, கொடுத்த வாக்கைக் காப்பாற்ற ஓடோடி வந்திருக்கின்றார் என்பது புரிந்தது.....

உரை முடிந்த கையோடு விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டார்.



உயிர்மீட்புப் பணிக்காக ஓடுகின்ற கடமை வீரனின் கம்பீரம் அவர் நடையிற் தெரிந்தது. வைத்தியசாலைக்கு எல்லாப் பிரிவு இரத்தமும் தேவைப்படுவதாகவும் மருத்துவப்பீட மாணவர்கள் முடிந்தளவு உடனடியாகச் சென்று இரத்ததானம் செய்யும்படியும், விழா நிகழ்ச்சிகளுக்கிடையே அடிக்கடி அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

மறுநாள் பத்திரிகைச் செய்திகள் இதயங்களை உலுக்கின. இரத்தத்தை உறையச் செய்தன. இத்தனை கொடூரமா? இத்தனை கொலைகளா? இத்தனை வெறியாட்டமா?

வைத்தியசாலையின் பிண அறை, இடமின்றி நிறைந்து வழிந்தது. கால் வைக்க இடமில்லாத அளவு பிணங்கள். பல அங்கங்கள் சிதைந்து அரைகுறையானவை. தலையில்லாத முண்டங்கள். முகமில்லாத தலைகள். இது யார்? எவர்? என்று இனங்காண முடியாத அளவுக்குக் கோரங்கள். இரத்தக் குழம்பிடையே எடுத்தடி வைக்க முடியாத அருவருப்பு.

ஆண், பெண், முதியவர், குழந்தை, குமரன், குமரி என்ற வேறுபாடற்று வெட்டுண்ட நிலையில், கிழங்குகள் போல் ஒட்ட ஒட்ட அடுக்கி வைத்திருந்தனர்.

உறவினர்கள் எடுத்துச் சென்றவை போக உரிமை கோரப்படாத பிணங்கள் புழுத்து நாறின. இறுதியில் அவை வைத்தியசாலைச் செலவில்..... நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் துணையுடன் அடக்கம் செய்யப்பட்டன.

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

இவை நிகழ்ந்து மூன்று வாரங்களின் பின்னர் எங்கள் மோட்டார் சைக்கிள், நவாலி நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது. பின் இருக்கையில் எனது எழுத்தாள நண்பன் கே. ஆர். டேவிட்.

ஆதிக்கப்பேய் செய்த அனர்த்தங்களாற் பாதிக்கப்பட்ட மக்களைக் காண்பதற்காகச் சென்றுகொண்டிருந்தோம். நாமிருவரும் ஒன்றாக நவாலிக்குப் போவது இது இரண்டாவது தடவை. இரண்டு வருடங்களுக்கு முன்னர் நவாலி வை. எம். சி. ஏ. மண்டபத்தில் டொக்ரர் சிவனடியானின் நூல் வெளியீட்டிற்காகப் போயிருக்கின்றோம்.

அவருடைய சிறுகதை நூலான 'என் கையெல்லாம் இரத்தம்' எனும் நூலுக்கு ஆய்வுரை நிகழ்த்துவதற்காகப் போன நாம், இன்று "நவாலி எல்லாம் இரத்தம்" ஆகிவிட்டதை ஆய்வு செய்வதற்காகச் சென்றுகொண்டிருந்தோம். அன்று அந்த நூல் வெளியீட்டு விழாவில் ஏகப்பட்ட கூட்டம். மண்டபம் நிறைந்த மக்கள். எங்கள் ஆய்வுரைகளைக் கேட்டு ஆர்ப்பரித்தும், சிரித்தும், கரகோசமும் செய்த அந்தக் கூட்டம் என் மனக் கண்முன் நிழலிடுகின்றது. அந்தப் புன்னகை பூத்த முகங்களை நினைவுக்குக் கொண்டுவர முயலுகின்றேன். மனத்திரையில் எந்தப் பிம்பமும் விழமறுக்கின்றது.

அந்தச் சிரித்த முகங்களில் இன்று எத்தனை, சிதைந்த முகங்களாகினவோ! அப்படி விடிந்த பொழுது மடிவதற்குள் எத்தனைபேர் தலையிழந்து முண்டங்களாய், தசைப் பிண்டங்களாய் உடல் குதறுண்டு, உருக்குலைந்து துகள்களாய், தூணிலும் சுவர்களிலும் மரக்கிளைகளிலும் தொங்கிக் கொண்டும், இடிபாடுகளுக்குக் கீழே உருத் தெரியாமல் நசுங்குண்டும் உறவினர்களாற் தேடப்படப் போகின்றார்கள் என்று கற்பனை செய்து பார்க்கவுமில்லை. ஆலயங்கள், பாடசாலைகள் அகதி முகாம்களாகிக் கொண்டிருந்தன.

எண்ணும்போதே இதயம் வலிக்கின்றது.

நவாலி சன அடர்த்தி மிகுந்த கிராமம். இன்று அங்கொன்றும், இங்கொன்றுமாக நின்று சிலர் எம்மை வியப்போடு பார்ப்பது போன்ற உணர்வு எமக்கு. எமக்கு எதிரத் திசையிலிருந்து இளைஞர்களும், யுவதிகளும் வந்து கொண்டிருந்தனர். அவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் போலும். ஒருவேளை வரலாற்றுத்துறை மாணவர்களாகவும் இருக்கலாம். இடிந்து பாழடைந்துபோன இடங்களை, இல்லங்களைப் பார்வையிட்டுக்கொண்டு வந்தனர். இந்தப் புத்தி ஜீவிகள் –இந்த வரலாறுகளைப் பதிவுசெய்து வைத்து, இலங்கைக்குச் சும்மா கிடைத்த சுதந்திரத்தைத் தமிழன் அனுபவிக்கக் கூடாது என்பதற்காக, சிங்களப் பேரினவாதம் செய்த கொடுமைகளை வருங் காலச் சந்ததிக்கு வரலாறாக்கிக் கொடுக்க வேண்டியவர்கள் அவர்கள்தானே!

நவாலிப் புனித பேதுருவானவரின் தேவாலயத்தை நெருங்கும்போது, வீதியின் இரு பக்கங்களிலும் தகர்ந்து விழுந்து இடிந்து கிடக்கும் இடிபாடுகளின் குவியல்கள் தெரிகின்றன. அவ்விடத்தை நெருங்கும்போது, ஒரு மெல்லிய துர்வாடை..... மூக்கை அடைத்துப் பிடிக்கத் தூண்டுகின்றது. பாழடைந்த வீட்டைச் சமீபித்ததும் டேவிட் சொல்லுகிறார்: "இதுதான் நான் சொன்ன இடம்." ஒருகணம் அந்த இடிபாடுகளைப் பார்ப்பதற்காகப் பார்வையைத் திருப்பிய நான், மறுகணம் மோட்டார்ச் சைக்கிளை நிதானமாக ஓட்டுவதிற் கவனத்தைச் செலுத்துகின்றேன். அந்த இடிந்த வீட்டின் ஒரு பகுதியிற் கற்குவியல்களின் மீது, 'புலிப்பாய்ச்சல்' நடவடிக்கையின் போது சுட்டு வீழ்த்தப்பட்ட 'புக்காரா' விமானத்தின் சிதைவுகள் குவித்து வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைப் பார்வையிடுவதற்காக அவ்விடத்தில் மட்டும் மக்கள் திரண்டு நிற்கின்றார்கள். எட்டாத உயரத்தில் நின்று பொதுமக்கள் மீது குண்டு பொழிந்து கொலை வெறியாடிய 'புக்காரா' விமானம் பொடியாகிக் கிடக்கிறது. விமானம் மட்டுமா? சிங்களப் படைகளின் மானமும் பொடியாகிக் கிடப்பதாக எனக்குத் தோன்றியது. காடைத்தனம் புரிந்த சிங்களப் படைகளின் கையாலாகாத்தனம், சந்தி சிரிக்கச் சாட்சி கூறிக்கொண்டு கிடந்தது.

புதினம் பார்த்துக் கொண்டு நிற்பவர்கள் மீது, இடித்து விடாதபடி வாகனத்தைச் செலுத்திக் கொண்டிருந்த என் மனதில், டேவிட் சுட்டிக்காட்டிய அந்த இடத்தின் சம்பவம் நிழலிடுகின்றது. டேவிட் கண்ணாரக் கண்டு கதையாகச் சொன்ன அந்த நிகழ்வு.....

'புக்காரா' விமானம் அனர்த்தம் நிகழ்த்திய நான்காம் நாள், டேவிட் அந்த இடத்தைப் பார்வையிடுவதற்காக வந்திருக்கிறார். அந்த வேளையிற்தான் டேவிட் அந்தக் காட்சிகளைக் கண்டிருக்கிறார்.

அவ்விடிபாட்டின் சுவர்களை இடித்துத் தகர்த்துக் கிளறி, சிலர் எதையோ வெளியே எடுக்க முயற்சிப்பது தெரிந்தது. சகிக்க முடியாத அளவுக்கு வீசிய துர்வாடையிலிருந்து, அவர்கள் விடுவிக்க முயல்வது மனிதப் பிணம்தான் என்று தெரிந்தது. சகிக்க முடியாத நிலையிலும் அவர் அங்கு எட்டிப் பார்த்த பொழுது.....

அங்கு நசிந்து, சிதைந்து..... தசைக்கூழாகி..... புழுக்கள் மொய்க்க அழுகிக் கிடப்பது மானுட

– தொடர்ச்சி 06 ஆம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பல ஆயிரம் மக்களை.........

எண்ணிக்கையை நினைத்து சந்திரிகா அம்மையார் பதற்றப்படவில்லை.

ஆனால், 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கை தீவிரம் அடைந்து கொண்டு வந்த நேரத்தில் மக்கள் இழப்பை நினைத்து தமிழர் தலைமை பதற்றமடைந்தது. இடம்பெயர்ந்த மக்களால் ஏற்கனவே நிரம்பி வழிந்த வலிகாமத்தின் நகர்ப்பகுதிகள் மீது சிங்களப்படைகள் நடாத்திய கண்மூடித்தனமான குண்டுத் தாக்குதல்கள், ஒரு இனப் படுகொலையின் அபாயக்கட்டத்தைத் தமிழர் தலைமைக்குச் சுட்டிக் காட்டியிருக்கும். இந்த நிலையிலேயே வலிகாமத்தின் வரலாற்று இடப்பெயர்வு நடந்தது.

இருபதாயிரம் மக்களைப் பலிகொள்ள இருந்த யாழ்ப்பாணப் படையெடுப்பு 100ற்கும் உட்பட்ட மக்களையே பலிகொண்டிருந்தது. இதனால் வலிகாமம் மக்கள் சந்திக்கவிருந்த ஒரு மாபெரும் அவலம் திடீர் இடம்பெயர்வால் தவிர்க்கப்பட்டு, ஒரு வாழ்வியல் சிரமம் என்ற சிறிய பரிமாணத்துடன் முடிந்துள்ளது.

இது சிங்கள அரசுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்துவிட்டது.

பல்லாயிரம் தமிழர்களை அழித்து – எஞ்சியோரை அடிமை கொண்டு – அதன் பின்னர் போராட்ட ஆதரவாளர்கள், தேசபக்த அறிவாளர்கள் என்போரைக் 'களை' எடுப்புச் செய்வதன்மூலம் மேலும் பல ஆயிரம் தமிழர்களைக் கொன்று – சிறையில் அடைத்து– தமிழினத் தைக் பணியச்செய்வித்து, போராட்ட த்தை நசுக்கக் கனவு கண்ட சந்திரிகா – ரத்வத்த அரசுக்கு வலிகாமம் மக்களின் ஒட்டுமொத்த இடப்பெயர்வு ஏமாற்றத்தையும் – ஆத்திரத்தையும் கொடுத்துவிட்டது.

அதனால்தான், இன்னொரு முயற்சியை மேற்கொண்டு இன அழிப்பிற்கான ஒரு சந்தர்ப்பத்தைக் பெற்றுவிட அரசு முனைகின்றது.

இந்த ஆபத்தான முயற்சிபற்றி மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். எத்தனை தரம் இந்த இடம்பெயர்வு என்ற உணர்ச்சி பூர்வமான கேள்வியைக் கேட்பதற்கு முன்னர், மேற்குறித்த இனஅழிவு பரிமாணத்தைப் பற்றி எமது மக்கள் தூர நோக்குடன் சிந்திக்க வேண்டும்.

## பாதிக்கிணறு....

கொண்டிருக்கும் மானிப்பாய் கதிர்காமர் மூலம் 5 இலட்சம் மக்களையும் புலிகள் சிறைப்பிடித்து வைத்திருப்பதாகவும் அதனைக் கண்டித்து மக்களைப் புலிகளின் பிடியிலிருந்து விடுபட்டு வருமாறு கோருமாறும் அறிக்கைவிட வலியுறுத்தியபோது உலகம் விழித்துக் கொண்டது. இம்முறை எடுத்த எடுப்பில் எவரும் அறிக்கைவிடத் தயாராகவில்லை. சிங்களத்தின் பாசாங்கை ஏற்கும் மனநிலை இருக்கவில்லை. எமது மக்களின் விடுதலைப் பற்றுணர்வால், சிங்களத்தின் கொடுங்கரத்தின் பிடியிலிருந்து தப்ப அவர்கள் நிகழ்த்திக் காட்டிய பாரிய இடப்பெயர்வால் அதிர்ச்சியும், அளவிடமுடியா வியப்புமடைந்த உலகநாடுகள், தாம் இனிமேல் அவதானமாகச் செயற்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து கொண்டன. தாம் ஆதரித்த – தாம் ஆயுதம் வழங்கிய – தாமே மூலதனமிட்ட இப்போரால் தமக்கு விளைந்தது, இனி விளையப் போவது பெருநட்டமே என்பதைப் புரிந்தன. இதன் பலனே 'சட்டி சுட்டதடா கைவிட்டதடா' பாணியிலான அமெரிக்காவின் இவ்வறிக்கையாகும்.

இப்போது எம்மக்கட்கு இரு விடயங்கள் தெளிவாகும் என நம்புகிறோம். உலகநாடுகளின் அபிப்பிராயங்கள் ஆதரவு என்பனவெல்லாம் அவரவர் சொந்த அடிப்படை நலன்களைப் பொறுத்தது என்பது ஒன்று. எவர் என்ன சொன்னாலும், என்னதான் செய்தாலும் இறுதியில் வெற்றியடையப் போவது எம்மக்களின் விடுதலைப்பற்றுணர்வே. மக்களின் முடிவே இறுதியில் வரலாற்றின் முடிவாகின்றது. எனவே சிங்களத்தினுள் மட்டுமல்ல முழு உலகினதுமே எண்ணத்தில் மண்ணைப் போட்டு விடுதலைப் பயணத்தில் பாதிக்கிணறு தாண்டிய எம்மக்கள் மீதிக்கிணறையும் தாண்ட முற்படும்போது, அமெரிக்கா உள்ளிட்ட அகிலமே தம் பின்னால் ஆதரவு தெரிவித்து அணிவகுத்து நிற்பதைக் காணலாம்.

## உலங்கு வானூர்தியுடன்....

கொள்வனவு செய்யப்பட்ட எம்.ஐ 17 ரக இராணுவ போக்குவரத்து உலங்குவானூர்தியே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

இதிற் பயணம் செய்தவர்களில், சிறிலங்காப் படையைச் சேர்ந்த பொறியியற் துறைசார்ந்தவர்கள் முப்பது பேர், மூன்று இராணுவ அதிகாரிகள், இரு கடற்படை அதிகாரிகள், இரு விமானப்படை அதிகாரிகள் கொல்லப்பட்டிருப்பதாகச் சிறிலங்காத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தாக்குதலிற் கொல்லப்பட்ட ஏனைய இருவரின் விபரங்களையும் சிறி லங்கா அரசு வெளியிடவில்லை. இதனால் இது குறித்து மக்கள் மத்தியிற் பலவிதமான ஊகங்கள் உலாவி வருகின்றன.

## வாகரையில் எறிகணைத்தாக்குதல்கள்

மட்டக்களப்பு வாகரைப் பகுதியில், மக்கள் குடியிருப்புக்கள் மீதான எறி–கணைத் தாக்குதலிலும், மிகை–யொலித்தாரை விமானத் தாக்குதலிலும் மக்கள் பலர் படுகாயமடைந்துள்ளனர். வைத்தியசாலையும் குடியிருப்புக்கள் பலவும் பலத்த சேதமடைந்துள்ளன.

வாகரைப் பகுதியில் 16–01–1996 அன்று அதிகாலை 4 மணியளவிற் சிறிலங்காப் படையினரால் நடாத்தப்பட்ட கண்மூடித்தனமான எறி–கணைத் தாக்குதலில் 5 அப்பாவிப் பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர். இவர்கள் விபரம்: பொன்னையா செல்லையா வயது 28, சின்னத்துரை மாரியம்மா வயது 25, கந்தன் சந்திரகுமார் 18, கந்தன் ஜெயராணி வயது 7, தம்பிப்பிள்ளை சரஸ்வதி வயது 35.

## மன்னாரில்...

மரணமானார்.

இறந்தவர்கள் பெயர் விபரம் பின்வருமாறு:
செல்வராசா ஜெயராணி வயது 23 (காக்கைதீவு, இரணைதீவு)
செல்வராசா கௌசல்யா வயது 10 (காக்கைதீவு, இரணைதீவு)
தங்கவேலு தனுசா வயது 12 (நாவற்கட்டு, இரணைதீவு)
யேசுதாசன் பிளசில்டா வயது 28 (குருநகர், யாழ்.நகர்)
யேசுதாசன் பலின் வயது 10 (குருநகர், யாழ். நகர்)
யேசுதாசன் பலின் எனும் 10 வயதுச் சிறுவனே வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு அங்கு மரணமானார்.

காயமடைந்தவர்களின் விபரம் பின்வருமாறு:
யேசுதாசன் நீகன் வயது 8,
கிறிஸ்ரியன் பிராங்கிளின் வயது 8,
தங்கவேலு குணபாலன் வயது 15,
காணிக்கை லூர்து வயது 70,
தங்கவேலு வசந்தி (வயது தெரியவரவில்லை),
ஆம்ரோன் சந்திரா வயது 20,
பாலசிங்கம் டிகோஸ்சா (வயது தெரியவரவில்லை),
யோகதாசன் ரூபன் வயது 7,
மனுவேற்பிள்ளை மருஸ்லா வயது 19,
மரியநாயகம் செல்வமலர் வயது 19,
தங்கவேலு குமணம்மா வயது 20,
வஸ்தியாம்பிள்ளை சீலன் வயது 20,
எட்வேட் ரஞ்சிதமலர் வயது 36,
சந்திரிகா வேதநாயகம் வயது 35,
எட்மன் கொன்சி வயது 36,
மேற்குறிப்பிட்ட அனைவரும் யாழ். நகரைச் சேர்ந்தவர்கள்.
பாலசிங்கம் ரதி வயது 8 (காக்கைதீவுச் சேர்ந்தவர்),
திருஞானம் மனோகரசீலன் வயது 17,
டொன் பொஸ்கோ கீதபூனிலாலன் வயது 20,
சபின் லூயிஸ்வாஸ் வயது 19,
இவர்கள் இரணைமாதா நகரைச் சேர்ந்தவர்கள்.

இரணைமாதா நகர் அண்மையில் இடம்பெயர்ந்த அகதிகளை மீளக் குடியேற்றலுக்காகச் சிறந்த முறையில் அமைக்கப்பட்டு, திறக்கப்பட்ட குடியிருப்பாகும். இங்கு வாழ்பவர்களிற் கூடுதலானவர்கள் யாழ்ப்பாணம் வலிகாமத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## சூரியக்கிரகணம்...

# கடும் மோதல்

சூரியக்கிரகணம் இராணுவ நடவடிக்கையைத் தொடங்கிய சிறிலங்காப் படையினரின் ஓர் அணி மீது, 'பூமாஞ்சோலை' எனும் இடத்தில் வைத்து விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர். செங்கலடி இராணுவ முகாமிலிருந்தும், கொம்மாந்துறை இராணுவ முகாமிலிருந்தும் கரடியனாற்றுப் பகுதியை நோக்கி வந்து கொண்டிருந்த இராணுவ அணி மீதே, 20–01–1996 அன்று காலை 8 மணியளவில் விடுதலைப் புலிகள் இவ் எதிர்த் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதேவேளை, ஏனைய பகுதிகளில் முன்னேற்ற முயற்சிகளில் ஈடுபட்ட சிறிலங்காப் படையினர் மீதும் வெவ்வேறு இடங்களில் வைத்து விடுதலைப் புலிகள் தாக்குதல்களைத் தொடுத்தனர். இந்த வகையில் மதுறு ஓயாப் பகுதியிலும், தரவைக்குளம் பகுதியிலும் உலங்குவானூர்திகளிற் கொண்டு வந்து இறக்கப்பட்ட இராணுவத்தினர் மீது, விடுதலைப் புலிகள் ஆங்காங்கே தாக்குதல்களை நடாத்தியுள்ளனர். விடுதலைப் புலிகளை ஒடுக்குதலே இதன் நோக்கம் எனக்கூறிக்கொண்டு நடாத்தப்படும் இவ்விராணுவ நடவடிக்கையில், சிறிலங்காப் படையினர் தரப்பில் ஏற்பட்ட சேதவிபரங்கள் இன்னமும் அறியப்படவில்லை. நடைபெறும் மோதல்களில் இதுவரை, விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித சேதங்களும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இராணுவத்தினரின் கண்மூடித்தனமான எறிகண்ண வீச்சினால் இதுவரை 5 அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் படு காயமடைந்துள்ளனர். தற்போதைய இராணுவ நடவடிக்கை இடம்பெறுகின்ற பகுதிக்குள் வாழும் மக்கள் விடுதலைப் புலிகளுடன் வாழ்வதே, தமக்குப் பாதுகாப்பாகும் எனக் கருதுவதாக மட்டக்களப்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிப்பதாக ஏ.எப்.பி செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது. இதனால், இராணுவத்தினர் தமது பகுதிக்குள் வரமுன்னரே, மக்கள் தப்பி ஓடுவதாகவும் அத்தகவல் மேலும் கூறுகின்றன.

இராணுவ நடவடிக்கையாற் பாதிக்கப்படும் மக்களுக்குச் சிகிச்சை வழங்கக்கூடிய நிலையில், மட்டக்களப்புப் போதனா வைத்தியசாலையில் வசதிகள் இல்லையெனச் தாயகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அங்கு போதியளவு அவசர சிகிச்சைக்குத் தேவையான மருத்துவர்களும் இல்லை. சத்திர சிகிச்சை மருத்துவர் ஒருவர் மட்டுமே உள்ளார். இதற்கான உதவி அரச சார்பற்ற நிறுவனங்களிடமே எதிர்பார்க்கப்படுகிறது.

இராணுவத்தினரின் தொடர்ச்சியான பீரங்கி, மற்றும் 'ஆட்டிலறி' எறி–கணை, விமானத் தாக்குதல்களினாற் காட்டுப் பகுதியின் பெரும் பகுதி மரங்கள் அழிக்கப்படுகின்றன. மக்கள் குடியிருப்புக்களை நோக்கிக் கடும் தாக்குதல்கள் நடத்தப்படுவதால், இப்பகுதியிலிருந்து மக்கள் தொடர்ந்து வெளியேறியவண்ணமே உள்ளனர். கடந்த 5 நாட்களாக இராணுவ நடவடிக்கை தொடர்வதாகச் சிறிலங்காவின் பாதுகாப்பமைச்சு அறிவித்த போதும், இது குறித்து எவ்வித தகவல்களையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, 'சூரியக்கிரகணம்' நடவடிக்கையை எதிர்த்துத் தாயக மண்ணைக் காக்கத் தீரமுடன் போராடி விழுப்புண் அடைந்திருந்த வீரவேங்கை ரஞ்சிதன் (கந்தசாமி சத்தியநாதன்– மட்டக்களப்பு) என்ற போராளி 22–01–1996 அன்று வீரச்சாவடைந்துள்ளார். இவ் வீரவேங்கைக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

மோதல்கள் தொடர்ந்தவண்ணம் உள்ளன. மேலதிக விபரங்கள் இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கப்பெறவில்லை.

## வாகரைக்குச் செல்லும் உணவுப் பொருட்கள் சிறீலங்காப் படையினரால் தடுக்கப்படுகின்றது

வாழைச்சேனையில் இருந்து வாகரைப் பகுதியிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு 'லொறி'கள் மூலம் எடுத்துவரப்பட்ட உணவுப்பொருட்கள், வாழைச்சேனையில் வைத்து சிறிலங்காப் படையினராற் தடுத்து நிறுத்தப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. வாகரை வட்டத்தில் பெரும்பான்மையாக வாழும் தமிழ் மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்களே இவ்வாறு தடுக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பின் பெரும்பகுதிகளுக்கு, அமுல்ப்படுத்தப்படாத பொருண்மியத் தடை சுமார் ஓராண்டுகளாக சிறிலங்காவின் ஆயுதப் படையினரால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ் மக்களைப் பட்டினி போட்டாவது, தமது திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்ற உத்தியைச் சிறிலங்கா தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றது.

## யாழ்ப்பாணத்தில் குடியேற்ற...

உட்படுத்தப்படுகிறோம்" என்றார். "எங்கள் விருப்பத்திற்கு மாறான முறையிற் தடுத்து வைத்திருக்கிறார்கள். மேலும் எங்கள் குடும்ப உறுப்பினர்களை வேறாக்கித் தனித் தனியான முகாம்களில் விட்டு விசாரிக்கிறார்கள்" என்று அங்கு தங்கிய இன்னோர் பயணி மிகவும் மனவேதனையுடன் தெரிவித்தார். இதேவேளை, கொழும்பு செல்லவென வடபகுதியிலிருந்து சென்ற இளைஞர்கள், யுவதிகள் எனப் பலரும் 4, 5 நாட்களாகத் தடுத்து வைக்கப்பட்ட பின்னரும் கொழும்பு போகமுடியாதெனக் கூறப்பட்டு மீண்டும் வடபகுதிக்குத் திருப்பியனுப்பப்படுகின்றனர். இவ்வாறு சென்ற வலிகாமத்தைத் சேர்ந்த இளைஞர்கள் சிலர், இராணுவத்தினராற் தாக்கப்பட்டதாகவும் வவுனியாவில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவங்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அரசியல் அவதானியொருவர், "இவ்வாறான முயற்சிகள் சிறிலங்கா அரசிற்குப் பாரிய எதிர்விளைவையே கொடுக்கும்: தம்மாற் கைப்பற்றப்பட்ட பகுதிகளுக்குள் இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் பயமின்றி வந்து வாழ்கின்றார்கள் என்று உலக நாடுகளுக்குக் காண்பித்து, நிதி உதவியினைப் பெறுவதற்காகவே சிறிலங்கா அரசு மக்களைப் பலவந்தமாக யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு செல்கின்றது. வலிகாமத்தில் இருந்து தமது உயிரைப் பாதுகாப்பதற்காக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் சென்ற 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு எதுவித உதவியும் கிடைக்கவிடாமல், மேலும் மேலும் தடைகளைப் போட்டு மக்களை மிகவும் சொல்லொணாத் துன்பங்களுக்குள்ளாக்கி வரும் சிறிலங்கா, இவ்வாறு அடிப்படைத் தேவைகளை நிறுத்தி மக்களின் மனதில் பெரும் விரக்தியை ஏற்படுத்த முனைகின்றது. இடம்பெயர்ந்தவர்களை மீண்டும் வலிகாமத்திற்குத் திரும்ப வரும்படியும் அவர்களுக்குத் தேவையான சகல வசதிகளையும் செய்து தருவதாகவும் ஆசைவார்த்தை கூறுகின்றது. ஆனாலும் மக்கள் இவ்வாறான போலிப் பித்தலாட்டத்திற்கு அசையவில்லை. அதனாற்தான், கையறு நிலையில் இருக்கும் சந்திரிகா அரசு, இவ்வாறான மக்களைப் பலவந்தப்படுத்தியாவது குடியேற்ற வேண்டும் என்று கங்கணம் கட்டி நிற்கிறது" எனத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பச்சைநிறத்துப் பாசங்கள்

**போராளிகளுக்கிடையிலான உறவுகளில் முரண்பாடுகளும், மோதல்களும் சர்வசாதாரணமானது. ஆளுக்காள் நேரடியான கைகலப்பில் ஈடுபட்டாலும் கூட அடிமனதின் ஆழத்தில் பாசமும், நேசமும் தேங்கிப் போயிருக்கும். ஒவ்வொருவரது நலனிலும் மற்றொவ்வொருவரும் அக்கறை காட்டும் அதீத அன்பு, முகம் காட்டும்.**

**இங்கு விபரிக்கப்படும் உண்மைச் சம்பவம் அதற்கொரு உதாரணம் மட்டுமே!**

அந்த அதிகாலை, 'கொதி' காலையாக விடியத் தொடங்கியது. அதிகாலை, நேரம் 4.30. இறுதிக் காவற்கடமையில் இருந்த செந்தாமரை உறக்கத்தின் மீது உலாவந்தவர்களை எழுப்பத் தயாரானான். 'திருப்பள்ளியெழுச்சி' தொடங்கியது. உடம்பை வளைத்து– நெளித்து பலகோணங்களிற் புரண்டு ஒருவாறு உறக்கத்திலிருந்து விழித்தனர். சிந்தாமணி மட்டும் உறக்கத்தை இறுக்கிப் பிடித்திருந்தான்.

"மச்சான் சிந்தா! எழும்படாப்பா, நேரம் அஞ்சாகுது."

செந்தாமரை தட்டிப்பார்த்தான். அவனோ தள்ளிப்படுத்தான்.

"டேய் சிந்தா எழும்படா"

அவன் அதட்டிப் பார்த்தான். சிந்தாமணி அரக்கிப் படுத்தான். பூகம்பத்தின் ஆரம்பப்பொறி துளிர்க்கத் தொடங்கியது. செந்தாமரை நிறுத்தினான். 'டோச்'சைக் கையிலெடுத்தான்.

சிந்தாமணியின் கண்ணுக்குள் 'டோச்'ச்சின் ஒளியை விட்டு விட்டுப் பாய்ச்சினான். கண்களை 'டோச்'சின் ஒளிப்பாய்ச்சல் ஊடுருவித் தாக்கியது. கண்ணுக்குள் தோட்டாக்கள் 'ஓட்டோ'வில் பாய்வது போலிருந்தது. சிந்தாமணியால் தாங்கமுடியவில்லை.

'டோச்'சுக்கு கனமான அதிரடி.

கீழே விழுந்த 'டோச்'சின் மூச்சு நின்றது. பூகம்பத்தின் அடுத்தபொறி அதுதான்.

செந்தாமரையின் முகம் சிவந்து செந்தாமரையானது. செந்தாமரை சிந்தாமணி மீது பாய்ந்தான். அடுத்தகணம் அங்கே சண்டைக்காட்சி ஒன்று அரங்கேறியது. படுக்கையறை, போர்க்களமானது.

கட்டிப் புரண்டனர். முட்டி உருண்டனர், உறக்கம் கலைந்தவர்களுக்கு உற்சாகம் முளைத்தது. சண்டை முன்னேறியது.

"விடியல்' கையை மடித்து 'வீடியோ' எடுத்தான். காலை மடக்கி, இருந்து, எழும்பி, குனிந்து பலகோணங்களிற் சண்டைக்காட்சி படமாகிக் கொண்டிருந்தது.

முகிலன் நேர்முக வர்ணனையில் இறங்கினான். "செந்தா எதிர் சிந்தா! உக்கிரமான தாக்குதல், தற்போது 'களமுனை'யிற் கிடைக்கும் தகவல்களின் அடிப்படையிற் செந்தா மீது, முன்னேறிய சிந்தா அதிகப்படியாக மூன்று குத்துக்களை வழங்கிய நிலையிற் செந்தா நான்கு அடிகளை வழங்கிச் சிந்தாவின் முன்னேற்றத்தைத் தடுக்க......"

விமர்சனமும் நின்றது. 'வீடியோ'வும் நின்றது. சண்டை அகோர நிலையை அடைந்திருந்தது. கைகள், கால்கள் என்ற சிறுரக ஆயுதங்களிற் தொடங்கிய தாக்குதல் கதிரை, கட்டில் என்ற கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துமளவிற்கு முன்னேறத் தொடங்கியிருந்தது.

தூண்டிவிட்டுப் பார்த்துக் கொண்டிருக்கும், 'ஐ.நா.வின் பார்வையாளர்கள்' போல இருந்துவிட்டு அகோரமடையும் தறுவாயில் நுழையும் 'அமைதிகாக்கும் படையினர்' போல பார்வையாளர்கள் களத்தில் இறங்கினர். அதிகாலை அப்போதுதான் அமைதியானது.

****

மதியம் 11.00 மணி. வேட்டைக்கென நேற்றைய இரவு வெளியே போயிருந்த பொறுப்பாளர் உதயன், அப்போதுதான் முகாம் திரும்பியிருந்தார்.

வந்தவருக்கு ஆச்சரியம். முகாம் காட்டியது அமைதி முகம். "என்னடாப்பா, 'பேஸ்' அமைதியாயிருக்கு" என்றவாறு அவரது பார்வை முகாமின் மூலைமுடுக்கெல்லாம் முற்றுகையிட்டது. பார்வையின் பாய்ச்சல் இரு மூலைகளில் இடறி நின்றது.

"அதுதானே பார்த்தன் ரண்டு 'பக்குட்'சும் பேயறைஞ்ச மாதிரி இருக்குதுகள்" என்றவாறு அணுகினார். மூலைக்கொருவராய் முழங்காலுக்குள் முகத்தைப் புதைத்தபடிக் கிடந்தனர் 'அமைதியின் நாயகர்கள்'.

"கிட்ட வாங்கடாப்பா இரண்டுபேரும்...."

திருகிவிடப்பட்ட பொம்மைகள் போல் உதயனுக்கு அருகே வந்தனர் சண்டையின் நாயகர்கள். பக்கத்தில் நின்ற பல்லவனிடம்,

"என்னடாப்பா இடிவிழுந்த மாதிரி நிக்கிறாங்கள்?"

சிந்தாமணி எனக்கு அடிச்சவன் அதுதான்...." இது செந்தாமரை.

"செந்தாமரைதான், 'டோச்'சடிச்சவன். அதுக்குப் பிறகு தான்...." இது சிந்தாமணி. உதயனது முகம் இறுகியது.

"டேய் உங்களையா கேட்டனான்" பல்லவன் நடந்த ஒவ்வொன்றையும் அபிநயத்துடன் விளக்கினான்.

உறுமிய முகம் இறுகியது.

"இப்ப நேரம் பதினொண்டரை சரியா பன்னிரண்டு மணிக்கு அந்தப் பாலைமரத்தில ஏறுறியள், இரவு பன்னிரண்டு மணிக்கு நீங்களா இறங்குறியள். அதுக்கிடையில் கால் நிலத்தில பட்டா நடக்கிறது வேற...."

> **சுகந்தன் சீண்டினான்.**
>
> **''மச்சான் இண்டைக்கு மான்கறி அந்த மாதிரி. நாய்க்கும் வைச்சாச்சு. மிச்சம் இருக்கு. மேல அனுப்பட்டே"**
>
> **சீண்டல் 'மினி" யுத்தமொன்றுக்கு தூண்டில் போட்டது.**

இறுகிய முகம் முன்னோக்கிச் சென்று பின் இளகியது. இளகிய முகம் விளக்கம் வழங்கியது. பன்னிரண்டு மணி பாலையைப் பார்த்துப் பார்வையை அசைத்தது.

பாலையை நோக்கி இருவரும் மனமின்றிப் படையெடுத்தனர்.

✏ ✏ ✏

மாலை 6.30 மணி நிலாவைக் காவற்கடமைக்கு அழைக்கச் சூரியன் போய்க் கொண்டிருந்தான். சுகந்தன் மெல்ல மெல்ல அந்தப் பாலையில் ஏறினான். இருவரையும் பார்த்துக் கதைக்க வசதியாகக் கிளையொன்றில் அமர்ந்தான். 'உறங்காத கண்மணிகள்' பாணியில் நடந்ததைக் கேட்டான்.

"சிந்தா......செந்தா.....என்ன நடந்தது?"

அதேபாணியில் இருவரிடமிருந்தும் ஒரே நேரத்திற் பதில் பாய்ந்தது. காலாலையும், கையாலையும் நடந்தது.

சுகந்தன் தொடர்ந்தான். "சாப்பாடு மேலதானே. இல்லாட்டி... கீழ வந்தோ?"

"சாப்பாடு எல்லாம் மேல தான்" பக்கத்திலிருந்த நாவலைப் பார்த்துச் சிந்தாமணி பதில் போடச் செந்தாமரை தொடர்ந்தான்.

"உதயன் அண்ணா விடியத்தான் சாப்பாடு குடுக்கோணும் எண்டு 'சப்ளை'காரரிட்டைச்



சொல்லிற்றார். ஆளுக்கு, பாலைக்குப் பக்கத்தில நாவல் நிக்கிறது தெரியாது. நாவல் தான் 'சப்ளை'க்காரன்."

சுகந்தன் சீண்டினான்.

"மச்சான் இண்டைக்கு மான்கறி அந்த மாதிரி. நாய்க்கும் வைச்சாச்சு. மிச்சம் இருக்கு. மேல அனுப்பட்டே"

சீண்டல் 'மினி' யுத்தமொன்றுக்கு தூண்டில் போட்டது.

"குரங்கு இப்ப நீ கீழே இறங்கு"

கொப்புகள் முறிபட்டது. அடுத்த கணம் சுகந்தன் கீழே இருந்தான்.

"மச்சான் காட்டுக்கு வந்ததுக்கு ஒரு குரங்கைக்கூட காணேல்ல எண்டு நினைச்சனான். இண்டைக்கு ஒண்டில்ல ரண்டு குரங்கைப் பார்த்தாச்சு. வரட்டே மச்சான். 'குட்நைற்.'"

✏ ✏ ✏

அந்தக் காட்டுமுகாம் நள்ளிரவு பன்னிரண்டை நோக்கி மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது. காடுமுழுக்க அடர்ந்த இருள் முகாமிட்டிருந்தது. நிலவு 'சென்ரியில்' நித்திரையோ.

சுகந்தன்தான் அப்போது காவற்கடமை. மணியைப் பார்த்துவிட்டு நிமிர்ந்தான். மனிதஉருவம் வந்து கொண்டிருந்தது.

சிந்தாமணிதான் வந்து கொண்டிருந்தான்.

"மச்சான் செந்தாமரை மரத்தில நித்திரைபோல இருக்கு. ஆளை எழுப்பாதை, கீழ விழுந்தாப்பிறகுதான் நேரம் தெரியும்"

சிந்தாமணி படுக்கப்போன பத்தாவது நிமிசம் செந்தாமரை இறங்கி வந்தான். சிந்தாமணி இறங்கியது செந்தாமரைக்குத் தெரியாது.

"மச்சான் சிந்தாமணி மரத்தில நித்திரை போல இருக்கு. ஆளை எழுப்பாதை. கீழ விழுந்தாப் பிறகுதான் நேரம் தெரியும்."

வார்த்தைகளிலும் மாற்றமில்லை. வந்தவர்களிலும் மாற்றமில்லை.

பத்து நிமிடம் கழிந்தது.

சுகந்தனின் பின்பக்கம் சரசரத்தது. கைகள் 'ஆமி'யோ, ஆனையோ எனப்பரபரத்தன. திரும்பினான்.

சிந்தாமணிதான் வந்து கொண்டிருந்தான்.

"மச்சான் சுகந்தன் நித்திரை வருதில்லையடாப்பா. செந்தாமரை இறங்காட்டி, ஆளை எழுப்பி இறங்கச் சொல்லு. பாவம் மரத்தால விழுந்திடுவான்."

"அவன் இறங்கிப் படுத்தே பத்து நிமிசம் ஆகியிருக்கும். நீ போய்ப் படு மச்சான்" இது சுகந்தன்.

"நீ பஞ்சீல சொல்லுறா. 'சென்ரில' நான் நிக்கிறன். நீ போய்க் கூட்டியா"

"இல்லையடாப்பா வந்துட்டான்."

"பாலையடிக்குப் போகப் பயப்படுகிறாய். பிரச்சினையில்ல, அவன் விழுந்தா நீ துலைஞ்சா"

என்றவாறு படுக்கப் போனான்.

அடுத்த பத்தாவது நிமிடம் சருகுகள் சரசரத்தது. இப்போது கைகள் பரபரக்கவில்லை. அவனுக்குத் தெரியும் வருவது செந்தாமரை–தான். அவன் சொல்லப்போவதும் சிந்தாமணியை எழுப்பு எண்டுதான் சுகந்தனுக்குப் புரிந்தது.

செந்தாமரை கிட்ட வந்தான். அதே வார்த்தைகள்.

இப்போது வார்த்தைகளில் மாற்றமில்லை. வந்தவர்களில் மாற்றம் இருந்தது.

பாசங்கள் என்றால் இப்படித்தான்.

பச்சை நிறத்துப் பாசங்கள் அல்லவா....

இனிமலரும் அதிகாலை அதிராது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இன்றைய நாட்களில்.....

## எதற்கும் தயார்

"வானம் நல்லா கறுத்துக் கிடக்கு. இண்டைக்கு நல்ல மழை பொழியும் போல" அதிகாலை நேரத்தில் குச்சொழுங்கை ஒன்றுக்குள்ளிருந்து தார் வீதிக்குத் தலை நீட்டிய ஒருவர் உரத்த குரலில் கூறினார். "ஓமோம் கடவுளுக்கும் கண்ணில்லை. சனமெல்லாம் தாவாரத்திலையும், ஒட்டுக் குந்துகளிலையும் எப்பன் நிம்மதியாய் கிடக்குதுகள். இதுக்குள்ள மழையும் பெய்தா எப்படியிருக்கும்" வேப்பம் குச்சியால் பற்களைத் தீட்டிக் கொண்டிருந்த மற்றுமொருவர் சலித்துக் கொண்டார்.

"சனங்கள் எக்கச்சக்கமாய்.....ஒரு காலமும் இல்லாத மாதிரி வந்து குவிஞ்சு கிடக்கிறதால இட நெருக்கடிதான்......இருக்க-நிக்க இடமில்லத்தான்..... அதுக்குள்ள மழையும் பெய்தா பெரிய கரைச்சல் என்று எண்ணுறது மெய்தான். ஆனா அதுக்காக மழையும் பெய்யாட்டி கிடக்கிற பயிர் பச்சையுமெல்லே கருகிப் போகப் போகுது...."

அவரது வார்த்தைகளில் ஆதங்கம்.

"ஓமோம்......நானும் பார்க்கிறன்தான்......உங்க ஒரு வயலுக்கையும் தண்ணி ஒரு சொட்டுமில்ல. நெல்லு கம்பிக்கட்டுப் பருவத்தில நிற்கு. குடலையாகிக் கதிர் தள்ள தண்ணி என்ன மாதிரி நிக்க வேணும். இந்த நேரத்தில தண்ணியில்லாம எப்பிடி...." மற்றவரும் ஒத்திசைவாகக் கருத்துக் கூறினார்.

உரையாடல் செவிகளை ஈர்க்க, பிரேக் பிடித்த மாதிரி எனது பாதங்கள் அசைய மறுத்தன.

"கார்த்திகை மாதமெண்டா அடைமழை பெய்யிறது தான்வழமை. இப்ப பார் மழையில்லை......பனி பெய்யுது......பனி வெய்யில் என்ன மாதிரிச் சுளீர் எண்டு சுடுகுது"

"பனி வெய்யிலுக்கு நெல்லுப் பயிருகள் கருகுறதைக் கண்டியோ"......

"ஓமோம் இந்த மாதிரி வெய்யிலெறிச்சா கொஞ்ச நாளில கிடக்கிற வயலுகளும் சரியாப் போகும் போல"

"மெய்தான்...... அங்காலயும், வயலுகளையும், தோட்டங்களையும் சனம் விட்டிட்டு வந்திட்டுது. மழையில்லாம இங்கின கிடக்கிற வயலும் கருகினா......அடுத்த வரியத்தை நினைச்சுப் பார்க்கவே பயமாய் எல்லோ கிடக்கு"

"நிலவுக்கு அஞ்சிப் பரதேசம் போகேலாது" எண்டு சொல்லுறது தெரியாதே உனக்கு....சும்மா பயப்பிட நினைச்சா எல்லாத்துக்கும் தான் பயப்பிடலாம்".

"அதுகும் மெய்தான்....அடுத்த செல் எப்ப வருகுதோ தெரியாது......அதுக்கிடையில ஏன் அடுத்த வரியத்தைப் பற்றி இப்ப யோசிப்பான்" அவர் முத்தாய்ப்பாகக் கூறவும் இரண்டொரு மழைத்துளிகள் நிலம் நோக்கி விரைந்தன.

"பிள்ளையாரப்பா இந்த மழையாவது நல்லாய் பொழிய வேணும்" என்றபடி பெரியவர் நகர்ந்தார்.

எதிர்காலத்தின் நிச்சயமான இன்பங்களுக்காக நிகழ்காலத்தின் துன்ப அனுபவங்களுக்கும், சோக நிகழ்வுகளுக்கும், துயர்தரும் சம்பவங்களுக்கும் முகம் கொடுத்தல் அவசியமானதே என்றொரு சிந்தனை மேலெழுந்தது. வீதியில் சென்றுகொண்டிருந்த அனைவரது கைகளிலும் திடீரெனக் குடைகள் புகுந்தது எப்படி?

"ஓ....இப்போது எங்கடை சனங்கள் எதையும் எதிர்கொள்ள எப்பொழுதும் தயார் நிலையிலேயே இருக்கின்றார்கள்......இது ஓர் அவசியமான - ஆரோக்கிய மான நிலைமாற்றம் தானே.....!"

–மயூரா

# போர்க் கோலங்கள்

## வரலாற்றுக் கடமை

இன்று சிங்கள அரசு திட்டமிட்ட முறையில் எமது இனத்தைப் பூண்டோடு அழிக்கவும் எம் தாயக பூமியை அபகரிக்கவும் ஒரு யுத்தவெறி யூட்டப்பட்ட இராணுவத்தை ஏவி, ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் முழு முனைப்புடன் ஈடுபட்டுள்ளது. நாம் விரும்பா விட்டாலுங்கூட, எம் மீது திணிக்கப்பட்ட இந்த அடக்கு முறையும் ஆதிக்க வெறியும் கொண்ட எதிராளியின் போர்ப் பிரகடனத்துக்கு அஞ்சி அடிபணியாது முகங் கொடுத்து எதிர்த்துப் போராடி, சிங்கள இராணுவத்திற்கும் சிறீலங்கா அரசுக்கும் தகுந்த பதிலடி கொடுத்து எம்மண்ணை மீட்பதும் எம் மக்களின் சுதந்திரத்தை வென்றெடுப்பதும் எம்முன்னே எமக்கான வரலாற்றுக் கடமையாகி நிற்கிறது. இவ்வேளையிற் தேசப்பற்றும் இன உணர்வுங் கொண்டு, தாயகத் தாகத்துடன் போராடும் புலி வீரர்களுடன் தம்மையும் இணைத்துக் கொண்டு வரும் இளைஞர், யுவதிகள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தமிழின விடுதலைக்காகவும் தமிழீழ விடியலுக்காகவும் தம்மை அர்ப்பணிக்க முன்வந்துள்ள..... சில இளைஞர், யுவதிகளின் உணர்வின் குரல்கள் இவை.... போர்க்கோலங் கொண்டவர்களின் மனக்கோலங்கள் இவை.....

**தேசப்பற்றும், இன உணர்வும் கொண்டு தாயக தாகத்துடன் போராடும் புலி வீரர்களுடன் தம்மையும் இணைத்துக் கொண்டுவரும் இளைஞர், யுவதிகள் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு வருகின்றது.**
**தமிழின விடுதலைக்காகவும் தமிழீழ விடியலுக்காகவும் தம்மை அர்ப்பணிக்க முன்வந்துள்ள..... சில இளைஞர், யுவதிகளின் உணர்வின் குரல்கள் இவை..... போர்க்கோலங் கொண்டவர்களின் மனக்கோலங்கள் இவை.....**

"வலிகாமத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்களின் அவலம், துயரம் என்பவையே நான் போராட்டத்தில் இணைந்து கொள்ளக் காரணமாகும். இத்தகைய அவலங்களுக்கு ஒரு முடிவு கட்ட வேண்டுமாயின், சிங்கள அரசின் இனவாத நடவடிக்கைகளை முழுமையாக ஒழித்து நமது விடுதலையை நாம் வென்றெடுக்க வேண்டும். எதிரி நம் மண்ணில் நுழையும் போது நாம் எங்கே போவது.....? எத்தனை தரம் இடம் பெயர்வது....? எனவேதான் போராட்டத்தில் இணைவதன் மூலம் என் மண்ணினதும், மக்களினதும் சுதந்திரத்தை வென்றெடுக்க, என் பங்கை ஆற்ற முனைந்தேன்."

இவ்வாறு முறிகண்டி 154-ம் கட்டையைச் சேர்ந்தவரான நவலக்சுமி என்பவர் கூறினார்.

❖❖❖❖

"எம்மக்களின் அடிப்படைச் சொத்துக் கல்வியே ஆகும். மாணவர்களுக்குக் கல்வி போதிப்பதே எமது பணி. ஆனால் இன்று பாடசாலைகள் மற்றும் பரீட்சைகள் நடை பெறுவதற்கும் கூட, சிங்கள அரசு தடை விதித்துள்ளது. இந்த நிலையில், நம் எதிர்காலத் தலைமுறையினரை அறிவு சார்ந்த ஒடுக்கு முறையில் இருந்து பாதுகாக்கவும், தேசப்பற்றும் இன உணர்வும் கொண்ட மக்களாக வளர்த்தெடுக்கவும் வழி காட்டவும் ஆசிரிய உலகத்தவராகிய நாம் முன் வர வேண்டும். அவர்களுக்கு ஒரு முன்னோடியாகவே போராட்டத்தில் என்னை இணைத்துக் கொண்டேன்"

என, போராட்டத்திற் புலிகளுடன் தன்னை இணைத்துக் கொண்ட வன்னேரிக் குளம், குருக்கள் குளம் பாடசாலை ஆசிரியரான சிறீதேவி என்பவர் தெரிவிக்கிறார்.

**எம்மக்களின் அடிப்படைச் சொத்து, கல்வியே ஆகும். ஆனால் இன்று பாடசாலைகள் மற்றும் பரீட்சைகள் நடை பெறுவதற்கும் கூட, சிங்கள அரசு தடை விதித்துள்ளது. இந்த நிலையில், நம் எதிர்காலத் தலைமுறையினரை அறிவு சார்ந்த ஒடுக்குமுறையில் இருந்து பாதுகாக்கவும், தேசப்பற்றும் இன உணர்வும் கொண்ட மக்களாக வளர்த்தெடுக்கவும் வழிகாட்டவும் நாம் முன்வரவேண்டும்.**

❖❖❖❖

கிளிநொச்சி செல்வா நகரைச் சேர்ந்த அருணாதேவி அண்மையிற் தன்னைப் புலிகள் இயக்கத்துடன் இணைத்துக்கொண்டார். அதுபற்றிக் கேட்ட போது அவர் கூறியதாவது, "முன்பள்ளிச் சிறுவர்கள் சுப்பர் சொனிக் விமானம் மூலம் குண்டு வீசப்பட்டுச் சிதறடிக்கப்பட்டதை நேரிற் பார்த்த போதுதான், சிங்கள இனவெறியரசின் கொடூர முகத்தை அறிந்து கொண்டேன். எங்கள் இளைய தலைமுறை யினருக்கான பாதுகாப்பும், இயல்புவாழ்வும் சுதந்திரத் தமிழீழத்திற்தான் கிடைக்குமென நம்புகிறேன். ஆகவே எமது மண்ணின் சுதந்திரத்தினை வென்றெடுக்கும் போரிற் பின் நிற்பது பிழை மட்டுமல்ல, வரலாற்றுத்தவறுங்கூட என்பதைப் பரிபூரண மாக உணர்ந்த பின்பே போராட்டத்தில் என்னை இணைத்துக் கொண்டேன்."

❖❖❖❖

"அனைத்துத் தமிழ் மக்களும் இந்தப் போராட்டத்திற் தம்மை இணைத்துக் கொண்டு தமக்கு முன்னேயுள்ள வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற வேண்டும். அப்போதுதான் நாம் இழந்த சுதந்திரத்தையும் எம் மண்ணையும் மீட்க முடியும்....." எனத் தமிழீழ நீதி மன்றில் முறை நிறைவேற்றுநராகப் பணி புரிந்து வரும் முருங்கன் பரியாரி கண்டலைச் சேர்ந்தவரான ச. தயாளசேகர் என்பவர் தம்மைப் போராட்டத்தில் இணைத்துக் கொண்ட போது கூறினார்.

❖❖❖❖

"அந்நியர் கையில் நாடு இருக்கும் போது கல்விகூட அர்த்தமற்றதே......" எனக்கூறும் மயில்வாகனம் மகேந்திரன் என்பவர் தன்னைப் போராட்டத்தில் இணைத்துக்கொண்ட போது......

"வலிகாமத்தில் இன்று பாடசாலைகள் வெறுமையாகவே இருக்கின்றன. தென்மராட்சி, வடமராட்சி, வன்னிப்பகுதிகளில் பாடசாலைகள் யாவும் அகதி முகாம்களாகியுள்ளன. பட்டப் படிப்பை முடித்தவர்கள் கூட போராட்டத்தில் இணைகின்றனர். எதிரியை எம் மண்ணிலிருந்து முற்றாக விரட்டும் வரை நாம் போராட்டத்தை நிறுத்தக் கூடாது" என்றார்.

❖❖❖❖

"எமது நாட்டைப் பாதுகாத்தால் மட்டுமே, எம் வீட்டையும் எம் உடைமைகளையும் இனிமேற் பாதுகாக்க முடியும்" என்பதை இந்தப் பாரிய இடம்பெயர்வின் மூலமும், இழப்புக்களின் மூலமும் அனுபவ பூர்வமாக உணர்ந்து கொண்டேன். "நான் வசாவிளானைப் பிறப்பிட மாகக் கொண்டவன். அங்கிருந்து பலாலி இராணுவத்தினரின் செல் வீச்சுத் தாங்கமுடியாமல் இடம் பெயர்ந்து அளவெட்டிக்கு வந்தேன்..... பின்னர் அங்கிருந்து கோப்பாய்க்கும் அண்மையிற் கிளிநொச்சிக்குமாக இடம்பெயர்ந்துள்ளேன்..... ஒவ்வொரு இடப்பெயர்வின் போதும் நாம் இழந்த எமது தோட்டங்கள், வீடுகள், உடைமைகள் அனைத்தும் ஏராளம்..... இவை ஏன் ஏற்பட்டது?...... சிங்கள அரசின் இன அழிப்பு நடவடிக்கையால் மீளவும் சேகரிக்க முடியாத நிலை. இதுவெல்லாம் எதனால் ஏட்டது....?" என்றார், அண்மையிற் புதிய போராளியாகத் தன்னை இணைத்துக்கொண்ட வரும் சுண்ணாகம் பகுதியிற் செயற்பட்டு வந்த நீதிமன்றில் பணிபுரிந்தவருமான கோணேஸ் என்பவர்.

❖❖❖❖

"நான் பிறந்த நாள் தொட்டு இன்று வரை, சிறீலங்காப் படைகளின் அநியாயங்களைப் பல வகைளிலும் சந்தித்துள்ளேன். இராணுவ நடவடிக்கைகளின் நெருக்கடிகளாற் கல்வியைக் கூடப் பூர்த்தி செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டது. எமக்கென ஒரு சுதந்திர அரசு இருந்தால் மட்டுமே, எதிர்காலச் சந்ததி தடையின்றிக் கல்வியைத் தொடர முடியும்"இவ்வாறு கூறுகிறார், திரு. இ. சண்முகராஜ். இரத்தினபுரம், கிளிநொச்சியைச் சேர்ந்தவரான இவர் 22 வயதுடையவர். இவர் மேலும் கூறுகையில்,

"நாம் டொலர் பண்ணைப் பகுதியிற் குடியிருந்தவர்கள். இராணுவத்தினரும் சிங்களக் காடையினரும் இணைந்து 35 பேரைப் படுகொலை செய்த பின்னர், எமது குடும்பத்தினருடன் இடம் பெயர்ந்து நெடுங்கேணிப் பட்டிக்குடியிருப்பில் வசித்தேன். மீண்டும் முன்பு இருந்த இடத்திற்குப் போகும் வரை, போராட வேண்டிய தேவை எமக்குள்ளது" எனவும் குறிப்பிட்டார்

# ஒரு வினாடி கூட...

எனக்குத் தேவை
வந்து கிடக்கின்ற
உணவுப் பார்சலை எடுத்து
இரண்டு வாய் அள்ளிப் போட
ஒரு நிமிட அவகாசம்........

வலது காலைத் துழைத்துச் சென்ற
ரவைக்காயத்துக்கு கட்டுப் போட
இரண்டே நிமிட இடைவெளி........

உயிர்க்கயிறு அறுந்து
உடல் சரிந்து கிடக்கின்ற நண்பனுக்காய்
ஒரு ஓரமாய் ஒதுங்கி நின்று
வீரவணக்கம் செலுத்திட
மூன்று நிமிட அமைதி.......

உறக்கம் மறந்து
இரு வாரமானதால்
ஒரு முறை தூங்கி எழ
அதிகப்படி ஐந்து நிமிட ஓய்வு.......

ஆனால்......அந்த
ஒரு நிமிட அவகாசம்
இரண்டு நிமிட இடைவெளி
மூன்று நிமிட அமைதி
ஐந்து நிமிட ஓய்வு
இவ்வளவும் போதும்
எதிரி இன்னும் சில தூரம்
முன்னேறிக் கொள்வதற்கு....
எனவேதான் அறுதியிட்டுக் கூறுகிறேன்
உன் உயிர்ப்பூ சொரிந்து
உடலங்கு மடியும் வரை
எனக்கோ என் "எயிற்றிவண்" ணுக்கோ
ஓய்வு என்பது ஒரு வினாடி கூடத்
தேவையில்லை.

தே. தமிழரசன்

www.tamilarangam.net





# இணைந்த கரங்கள்

**எதிரியின் பாதச் சுவடுகளை எம்மண்ணிலிருந்து அகற்ற வேண்டும் என்ற நோக்கில் அடிமை வாழ்வை அகற்றி சுதந்திரமாக வாழவேண்டும் என்ற எண்ணத்தில் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொண்ட சிலரின் உணர்வலைகளை இங்கு பதிவு செய்திருக்கின்றோம்.**

**ம.போகேஸ்வரன்**
**வயது 22, அம்பாறை**
சொந்த இடத்திலிருந்து மிகுந்த வறுமை காரணமாக வேலை தேடி யாழ் வந்தேன். இங்கு மக்கள் படும் அவலத்தைப் பார்த்து, போராட்டத்தில் இணைந்து தமிழ்மக்களின் அவலத்தையாவது நீக்குவோம் என்பதால் இணைந்துகொண்டேன்.

**தே.திவாகர்**
**வயது 19, மட்டக்களப்பு**
மட்டக்களப்பில் மக்கள் சிங்களப் படையால் பட்ட, படும் துன்பம் கொஞ்சநஞ்சமல்ல. அவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது என்ற உணர்வும் அதேசமயம் வலிகாமத்தில் மக்கள் அடைந்த துயரமும் என் மனதைத் தொட்டுவிட்டதால் இப் புனிதப் போராட்டத்தில் இணைந்து கொண்டேன். எனது சகோதரரும் தாயக மீட்புப் போரில் வீரச்சாவடைந்துவிட்டார்.

**சு.கிருபாகரன்**
**வயது 23, திருகோணமலை**
திரியாய்ப் பகுதியில் ஆக்கிரமிப்பு இராணுவத்தின் இனப்படுகொலை நிகழ்வுகள் பலவற்றை நேரடியாகப் பார்த்துள்ளேன். எனது அண்ணனும் அதற்குப் பலியாகிவிட்டார். உறவினர்கள் பலரை இழந்துவிட்டோம். வன்னியில் இயக்கத்தின் உதவியாளனாக நீண்ட காலம் செயற்பட்டேன். யாழ் மண்ணில் நிகழ்ந்த கொடுமையையும் தமிழர்களுக்குப் படிப்படியாக நிகழ்ந்துவரும் இன்னல்களையும் தடுத்தாக வேண்டுமென்ற உணர்வு இக்காலகட்டத்தில் தவிர்க்க முடியாமல் ஏற்பட்டுவிட்டதால் இயக்கத்தில் இணைந்துகொண்டேன்.

**ஆ.கேதீஸ்வரன்**
**வயது 21, மணலாறு**
பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தில் பணி புரிந்தேன். யாழ்ப்பாணச் செய்திகள், மக்களின் துன்பநிலை என் மனச் சாட்சிக்கு இடம்கொடுத்ததால் இயக்கத்தில் இணைந்துகொண்டேன். சிங்களத்தின் எல்லை மீறிய கொடுமைகளை, கொட்டத்தை அடக்கி ஒடுக்க வேண்டும். அதுவே என் ஆவல்.

**இ.விஜயகுமார்**
**வயது 19, முல்லைத்தீவு**
இவ்வளவு காலமும் பார்வையாளனாக இருந்த நான் இனிமேலும் இயக்கத்தில் இணையாவிட்டால் சுயகௌரவத்துக்கே இழுக்காகிவிடும் என்பதும் வலிகாம மக்களுக்கு நடந்த கதி எமது மக்களுக்கு நடைபெறக்கூடாது என்பதால் இயக்கத்தில் இணைந்துகொண்டேன். எனது வீட்டில் இன்னுமொரு போராளியுமுள்ளார்.

**ச.புவனேந்திரன்**
**வயது 26, வவுனியா**
எல்லைக்கிராமத்தில் நீண்டகாலமாக நாம் பல தொல்லைகளை சிங்களக் காடையர்களாலும், படைமினராலும் அனுபவித்துள்ளோம். தமிழ்மக்களுக்கு எங்கு நிம்மதியுண்டு? மிகவும் கேவலமாக கொன்றொழிக்கப்படுவதைவிட போராடிச் சாவதே மேல் என்பதும், தலைவரின் வழிகாட்டலில் எனது அண்ணன் வீரச்சாவடைந்து விட்டார். அவனின் பணி தொடரவேண்டும் என்ற நோக்கில் இயக்கத்தில் இணைந்து கொண்டேன்.

**மு.நாகராசா**
**வயது 16, கிளிநொச்சி**
சிறிலங்கா ராணுவம் யாழ்ப்பாண மக்களுக்குச் செய்த அட்டூழியங்களால் வீடுவாசல்களை இழந்து மரங்களுக்குக் கீழும் மழையிலும் வெய்யிலிலும் இருந்து வாடினார்கள். இவ்வளவு கொடுமைகளை என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. நாளை எங்களுக்கும் வரலாம். அதனால் அதைத் தடுக்கப் போராடவந்தேன்.

**பா.பிறின்சி**
**வயது 23, மன்னார்**
1989-ம் ஆண்டு எனது மூத்த சகோதரனை சிறிலங்கா இராணுவம் சுட்டுக் கொன்றுவிட்டது. இப்படியான கொடுமைகள் பல இடங்களிலும் தொடர்ந்து நடைபெறுவதால் நாங்கள் பார்த்துக்கொண்டிருந்தால் பாசவுணர்வுக்கு அர்த்தமில்லாமல் போய்விடும். அகதியாக அலைந்து திரிவதிலும் எத்தனை நாளைக் கழிப்பது? எமது முகாமுக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து ஏராளமானவர்கள் இடம்பெயர்ந்து வந்தார்கள். அவர்களின் சோகக் கதைகள்தான் என்னைப் போராடத் தூண்டிவிட்டது.

**ந.ஜெயசங்கர்**
**வயது 24, யாழ்ப்பாணம்**
எனது சகோதரி போராளியாகவுள்ளார். அவர், நானும் போராட்டத்தில் இணையவேண்டும் என்ற கருத்துடன் கதைப்பதுண்டு. ஆனாலும் அவற்றைப் பொருட்படுத்தவில்லை. இவ்வளவு கொடுமைகளைச் சந்திப்போமென்றும் நாம் கருதவில்லை. மக்கள் படும் துன்பத்தைப் பார்க்கும்பொழுது போராடுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதையுணர்ந்து இயக்கத்தில் இணைந்து எனது கடமையைச் செய்யவுள்ளேன்.

# மாவீரர் கடிதங்கள்

**மாவீரர்கள் அவ்வப்போது தம் பெற்றோர், சகோதரர்கள், நண்பர்கள் ஆகியோருக்கு எழுதிய கடிதங்கள் - நாட் குறிப்பு - மற்றும் 'ஓட்டோ கிராப்'பில் இருந்து சில பகுதிகளை கீழே தருகிறோம்.**

கரும்புலி லெப்.கண்ணன் தனது 'ஓட்டோ கிராப்'பில் எழுதிய இறுதி வரிகள்....

தலைவர் அவர்களுக்கு
நான் என்னை இயக்கத்தில் இணைக்கும் போது உங்களை நம்பி வந்தேன். போகும் போதும் - உங்களை நம்பியே போகிறேன். எம் மக்களுக்கு - விடுதலை பெற்றுக் கொடுங்கள்.
"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்."
உங்கள் விசுவாசம் உள்ள
-கண்ணன்

தன் தாய் - தந்தைக்கு எழுதிய இறுதி மடல்
என்னை பெற்றெடுத்த
தாய் தந்தையரே!
தோள்களில் சுமந்த
அக்காமார்களே!
என் தம்பியே!
மருமக்களே!!
நான் என்னை இயக்கத்தில் இணைத்துக் கொள்ளக் காரணம், அடுத்தவர்களுக்கு அடிமையாக இருக்கக் கூடாது என்பதே.
தாயே!
உன் மகன் சாவதற்கு என்று செல்லவில்லை.
அடிமை விலங்கை உடைக்கச் சென்றவன்.
என்னுடைய கவலையை விடு.
தாய் தந்தையரே!
நான் கூறுவதைக் கேளுங்கள்.
உங்கள் இரண்டு பிள்ளைகளின் முடிவுக்கு காரணம் சிறீலங்கா அரசு தான், அது மட்டுமல்ல, ஏன் எங்கள் சந்திரண்ணை எங்கே? இதை எல்லாம் செய்த பாதகர்களை மண்ணிலே நீ மிதிக்க விடப் போகிறாயா?
இல்லை. உன்னிடம் இன்னொரு வீரப்புதல்வன் இருக்கிறான். அவனை அனுப்பு. அவன் வெற்றியுடன் திரும்புவான்.
-கண்ணன்

# மண் வாசனை

"யாழ்ப்பாணத்திலை சிங்கக்கொடி ஏத்திற்றானாம். ரேடியோவிலை தொடர்ந்து சொல்லுறான்"
-அப்பா சொன்னார்.
அம்மா கவலையுடன் அப்பாவைப் பார்த்தாள்.
"ஏனப்பா சிங்கக்கொடி ஏத்திறான்?"
தந்தை மௌனமாகப் பார்த்தார்.
"சிங்கள தேசம் எண்டிறதை கொடி ஏத்திக் காட்டப் பார்க்கிறான். இதன்மூலம் தான் தமிழ் மண்ணை ஆக்கிரமித்துவிட்டதையும் சொல்லிப் போட்டான்."
தந்தை தலை நிமிர்ந்து-
"அதுக்குத்தானே வந்தவன்" என்றார்.
"இல்லையப்பா...
இதன்மூலம்-கொடி ஏற்றிக் காட்டியதன்மூலம் இது எங்கட தமிழ் மண் எண்டதை அவனே சொல்லிப்போட்டான்..."
தந்தையும் தாயும் ஆச்சரியத்துடன் மகனைப் பார்த்தனர்.
(2)
இடம்பெயர்வின் இடையில் யாழ். நகரப் பகுதி ஒன்றில் அவளுக்குப் பிரசவ வலி வயிற்று வேதனையில் அழுது புரண்டாள்.
வைத்தியர் வந்தார், பிரசவம் நிகழ்ந்தது. ஈரப் பிசுபிசுப்புடன் அழகிய ஆண் செல்வம்.
அவள் எழுந்தாள், குழந்தையைத் தூக்கி அணைத்தாள். புறப்பட ஆயத்தமானாள்.
"நில்லம்மா... சுகமான பின் போகலாம்..."
"முடியாது டொக்டர்...ஆமி வாறான்...என்ரை பிள்ளை வளர வேணும். இந்த மண்ணில் வாழ வேணும். நான் போயிற்றுவாறன்."
வைத்தியர் அதிர்ந்துபோய் நின்றார்.
(3)
"தென்மராட்சிக்கு அனுப்பிச்சினம். இப்ப வன்னிக்கு போகச் சொல்லினம்...இப்படி அலைய எங்களால முடியுமே பேசாமல் ஊரில் இருந்திருக்கலாம்."
-ஒருவர் சந்திக்கடை வாங்கிலிருந்து சுருட்டு புகையை ஊதியபடி சொன்னார்.
"ஐயா... நீங்கள் யாழ்ப்பாண 'ரவுண்' பக்கம் இருந்தபடியால் அனுப்பித்தான் வந்ததெண்டிறியள்...நான் நீர்வேலிக் காரன்...அளவெட்டி...தெல்லிப்பழை, அச்சுவேலி, உரும்பிராய்...உந்தப்பகுதி ஆக்களையெல்லாம் ஆர் அனுப்பியது? ஆமிதான் அனுப்பினது. ஆயிரம் செல் அடிச்சான், எத்தனையோ பேர் செத்தோம்...நீங்கள் காயப்படாமல்...சாகாமல் வந்திட்டியள்..இதுக்கு நன்றி சொல்லுங்கோ.."
முதல் பேசியவர் தலை குனிந்து கொண்டார்.
-வவுனியா திலீபன்

மண்டைதீவில் 28-06-95 அன்று நேரடிமோதலில் வீரச்சாவடைந்த லெப்.உதயா தனது தாயாருக்கு எழுதிய இறுதி மடல்

01-04-95.
யாழ்ப்பாணம்

அன்பும் பாசமும் நிறைந்த அம்மா, அப்பா, அண்ணா அறிவது
நான் நலம் அதுபோல் நீங்களும் சுகமாக இருக்க இறைவன் அருள்புரிவார்.

எனது பிறந்தநாள் 06-04-95-ல் வருகிறது. அம்மா உங்கள் பிள்ளை முதலில் உங்களுக்கு நன்றி கூறுகிறேன். அம்மா, என்னை இந்தத் தாயக விடுதலைக்காகப் பெற்றெடுத்தாயே அதற்கு உனக்கு நன்றி கூறுகிறேன். அம்மா, நான் இப்புனிதமான இயக்கத்தில் சேர்ந்து 5 வருடங்கள் ஆகிவிட்டன. அம்மா இனி என்னை நினைத்து கவலைப்படவேண்டாம். நான் ஒரு சண்டைக்குச் சென்று, வெற்றிபெற்று லீவில் உங்களிடம் வருவேன். அப்போது வெற்றி பொட்டிட்டு, திரும்பவும் என்னை வாழ்த்தி வழியனுப்பிவைப்பீர்கள் . . . விடுதலைப் போருக்கு!

இவ்வண்ணம்
அன்புள்ள மகள்
உதயா

www.tamilarangam.net






# உணர்வின் அலைகள்

ஒரு போராளி இளைஞன் தன் வெளிநாட்டு அண்ணனுக்கு எழுதிய உணர்ச்சி பூர்வமான கடிதம்...

யாழ்ப்பாணம்

17–11–1995

அன்புள்ள அண்ணாவுக்குக் களத்தில் நின்று நான் எழுதும் இக்கடிதம்,

நான் மிகுந்த நலம். என்னோடு கூட நின்று அருள் புரியும் பத்திரகா–ளித்தாய் நிச்சயம் உங்களுக்கு நல்லறிவைப்புகட்டி நீங்கள் என்றும் சுகமாக வாழ அருள் புரிவாள்.

நேற்று இரவுதான் அம்மாவைச்

**தமிழீழம் கிடைத்த பிறகு நான் உயிரோடு இருந்தால் நிச்சயம் உங்கள் ஆசைப் படி நடப்பேன். அதற்கு முன் நான் இறந்தால் நீங்கள் பெருமைப்படுங்கள். என் தம்பி அவலச்சாவு அடையவில்லை. போராடி வீரனாக வீரச்சாவடைந் தான் என்று பெருமைப்படுங்கள். கவலைப்படாதீர்கள்.**

சந்தித்தேன். வந்து ஒப்பாரி வைச்சிட்டுப்போனா. உங்கள் கடிதங்களையும் சிவபரன் அண்ணாவின் கடிதத்தையும் தந்தா. வாசித்து மிகவும் கவலை அடைந்தேன். சிந்திக்கத் தெரியாதவர்கள். 'அம்மாவை' இப்ப உடுப்பிட்டியில் இருக்கினம். பலாலியில் இருந்து ஆமி 'மூவ்' பண்ணி யாழ்ப்பாணத்தைப் பிடிச்சிட்டான். யாழ்ப்பாணத்தில் இப்பொழுது ஒரு சனமும் இல்லை. எல்லாச் சனமும் இப்பொழுது சகல சாமான்களையும் விட்டுட்டு வந்து தென்மராட்சியிலும், வடமராட்சியிலும் கோயில்கள், பள்ளிக்கூடங்கள், 'றோட்டு'க்கரையள், தோட்டங்களுக்கை, மரங்களுக்குக் கீழ் எல்லாம் இருக்கினம். ஒவ்வொரு வீட்டிலும் ஏழு அல்லது எட்டுக் குடும்பங்கள். தொற்று நோய்களும் பரவுது. மருந்துகளும் இல்லை. சாப்பாடும் இல்லை. இந்த நிலை ஏன் வந்தது? ஏன் வந்தது? எமது இளைஞர்கள் சுயநலத்துடன், சிந்திக்காமல் பொறுப்பற்றுத் திரிந்தமைதான், 'ஆமி' வெளிக்கிட்டவுடன் மக்கள் 'ஆமி'யின்ர பகுதிக்குள் ஓடாமல் உடுத்த உடுப்புடன் ஏன் இடம் பெயர்ந்தார்கள்? 'ஆமிட்ட அம்பிட்டால் அவ்வளவுதான். பெண்களைக் கற்பழிப்பான், இளைஞர்களைச் சுடுவான். துன்புறுத்துவான். இதனால் யாழ்ப்பாணச் சனமெல்லாம் உடுத்த உடுப்புகளோட ஒரு இரவுக்குள்ளேயே தென்மராட்சிக்குப் போனார்கள். மழைக்குள் நனைந்து, நனைந்து ஆக்களையும் மாற விட்டுப் போனார்கள். போயும், இருக்க இடமில்லாமல் மழைக்கில களைப்பில் 'றோட்டு'க் கரையளில படுத்துக் கிடந்தார்கள். தமிழனுக்கு இந்த அவலநிலை ஏன் ஏற்பட்டது? அரசாங்கம் திட்டமிட்ட இனப்படு கொலை செய்கின்றது. 'ஆமி' வெளிக்கிடைக்கில குடி மனையள் மீதுதான் 'செல்லடிப்பான். சண்டை எங்கோயோ நடக்க வேறு எங்கோயோ வந்து, 'பிளேன்' சனநெ–ரிசலைப் பார்த்து 7, 8 குண்டை ஒன்றாகத் தள்ளி விட்டுப் போனான். இதனாற் சனம் 100க்கு கிட்ட உடல்சிதறிச் செத்தது. சனமெல்லாம் யாழ்ப்பாணத்தை விட்டுப் போனவுடன் 2, 3 நாள் சண்டையை நிற்பாட்டி யோசிச்சான். பிறகு இப்ப சனம் வடமராட்சியிலும், தென் மராட்சியிலும் தான் குவிந்திருக்குது என்று அறிந்து, இப்ப அந்தப்பக்கம் 'செல்' மழை பொழிகிறான். யாழ்ப்பாணத்தில் ஒரு மாதத்துக்குத் தேவையான உணவும் மருந்தும் இருக்குது என்று வெளிநாடுகளுக்குச் சொல்லி விட்டு இங்கு ஒன்றும் அனுப்புவதில்லை. இங்கு மருந்தும் இல்லை. சாப்பாடும் இல்லை. இங்கு இயக்கம் தான் வன்னிபக்கம் நெல் செய்து மக்களுக்குச் சாப் பாடு குடுக்கிறது. கொழும்பில சந்தேகம் என்று சொல்லி இளைஞர், யுவதிகளை நூற்றுக் கணக்கிற் கைது செய்யீனம். அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாது. பிறகு கொழும்பில் வெள்ளைவான் ஒன்று திரியும். தமிழர்களைக் கண்டால் கடத்திக் கொண்டு போகும். 2, 3 நாளில் ஆறுகளில் சடலங்கள் மிதக்கும். இப்படித் தமிழனை அழிச்சுக் கொண்டு போறான். இதைப் பாத்துக் கொண்டு நாம் சும்மாயிருப்பதா? நாளைக்கு இதே நிலை எங்கட சகோதரங்களுக்கு, எங்களுக்கு வராது என்று என்ன நிச்சயம்? இப்பிடி 'ஆமி' வெளிக்கிட ஓடிக்கொண்டு திரிஞ்சால் கடை–சியில் இருக்க நிலமில்லாமற் கடலிற்தான் குதிக்கணும். இப்படி இங்கே உள்ள பிரச்சனைகள் உங்களுக்குத் தெரியுமா? போன 7ஆம் மாசம் 'முன்னோக்கிப் பாய்தல்' நடவடிக்கையில் சனத்தைக் கோயில், பள்ளிக்கூடங்களில் இருக்கச் சொல்லிப் போட்டு நவாலி சென் பீட்டர்ஸ் தேவாலயத்துக்கு 'புக்காரா' வந்து ஒரே நேரத்தில் 9 குண்டுகளைக் கவிட்டு விட்டுப் போனது. அதில் 250 பேருக்கு மேல் அடையாளம் தெரியாமல் தசைச் துண்டுகளாகப் போனது உங்களுக்குத் தெரியுமா? அந்த அக்கிரமங்களை நீங்கள் பார்த்திருக்கிறீங்களா? இவ்வளத்தையும் பார்த்துக் கொண்டு சும்மாயிருந்தால் மொத்தத் தமிழினமே அழிந்துவிடும். அதை விடப் போராளிகள் போர் முனையில் ரத்தம் சிந்திப் போராடி எம்மண்ணைக் காக்க, நாங்கள் இங்கிருந்து கஸ்ரப்படாமற் குளிர் காய்வது எவ்விதத்தில் நியாயம்? இது மனிதாபிமானம் அற்ற செயல். சில பேர் சுயநலத்தோடு வெளிநாடு போனால் தாங்கள் தப்பலாம் என்று போவார்கள். வெளிநாட்டில் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு திருப்பி விடுவார்கள். திரும்பவும் இஞ்ச வந்து சிங்களவனிட்டச் சித்திரவதைப்பட்டுச் சாகத்தான் போறார்கள். இப்பொழுது யாழ்ப்பாணத்துக்கு 'ஆமி' வந்தாப் பிறகுதான் எமது மக்கள் உணரத் தொடங்கியிருக்கிறார்கள். பெரும்பாலானவர்கள் இப்போது இயக்கத்திற் சேர்ந்து கொண்டிருக்கிறார்கள். பெரும்பாலும் தாய் தகப்பனே தங்கள் பிள்ளைகளைக் கொண்டு வந்து சேர்க்கிறார்கள். குடும்பத்தர்கள் கூட இயக்கத்திற் சேருகிறார்கள். 3 பிள்ளை, 4 பிள்ளைகளின் தகப்பன்மார் கூட இயக்கத்தில சேருகிறார்கள். சில தினங்களுக்கு முன் யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட மாணவர்கள் அதாவது அடுத்த வருட 'டாக்டர்கள்' 45 பேர் உட்பட 'கம்பசில்' இருந்து 125 பேர் 2 'லெக்சரர்மார்', பள்ளிக்கூட 'மாஸ்டர்மார்' எல்லாரும் இயக்கத்தில சேர்ந்தார்கள் தெரியுமா? தங்கள் குடும்பத்துக்காகத் தங்கள் குடும்பம் சந்தோசமாகச் சொந்த மண்ணில் வாழ வேண்டும் என்றால் 'ஆமி'யை அடிச்சுத் துரத்தணும். தன்ர குடும்பத்தில அதிக அன்பு, பாசம் உள்ளவன்தான் இயக்கத்திற் சேருகிறான். இதெல்லாம் உங்களுக்கு விளங்குமா? இப்ப யாழ்ப்பாணத்தில படிப்பும் இல்லை. மற்றது 'ஆமி' பிடிச்ச இடமெல்லாம் 'புல்டோசர்'ால வீடுகள், கட்டடங்கள் எல்லாம் இடித்து வெட்டை வெளியாக்கிறான். இப்பிடி நிலைமை மோசமாகிக் கொண்டு போகுது. ஆனால் விரைவில் ஒரு முடிவு காண்போம்.




உங்களுக்கு நாம் மட்டும் தான் சகோதரமா? சந்திரிசாமி சகோதரமில்லையா? பயமில்லாமற் சந்தோசமாக அவர்களும் அவர்கள் சந்ததியும் வாழ நான் போராடுகிறேன். நீங்கள் அவர்களுக்கு வேண்டிய காசு உதவியைச் செய்யுங்கோ. உங்களுக்காக நீங்கள் வாழாட்டியும், அவர்களுக்காக வாழுங்கள். வீட்டுக்கொரு வீரனாவது போராட வேண்டும். இது வரலாற்றுக் கடமை. இக்கடமையை நான் பொறுப்பேற்றுச் செல்கிறேன். தாய் நாட்டுக்குப் பிறகுதான் மற்றதெல்லாம். நீங்கள் வீட்டுக்கடமையைப் பொறுப்பேற்றுச் செய்யுங்கோ.

தமிழீழம் கிடைத்த பிறகு, நான் உயிரோடு இருந்தால் நிச்சயம் உங்கள் ஆசைப்படி நடப்பேன். அதற்கு முன் நான் இறந்தால் நீங்கள் பெருமைப்படுங்கள். என் தம்பி அவலச் சாவு அடையவில்லை. போராடி வீரனாக வீரச்சாவடைந்தான் என்று பெருமைப் படுங்கள். கவலைப் படாதீர்கள்.சிவ–பரன் அண்ணா எனக்கு ஏதோ அன்பளிப்புச் செய்யிறதெண்டு எழுதியிருந்தார். அன்பளிப்புச் செய்ய நினைத்ததுக்கு நன்றி என்று சொல்லுங்கள். அந்த அன்பளிப்பை இயக்கத்துக்குச் செய்தால் இந்த நாட்டுக்குப் பிரயோசனமாக இருக்கும். தனிப்பட்டோருக்குச் செய்யும் அன்பளிப்பை விடத் தாய்நாட்டுக்குச் செய்யும் அன்பளிப்பு எவ்வளவோ மேலானது என்று சொல்லுங்கோ. வேறு விசயமில்லை. தயவுசெய்து குடிக்காதீர்கள். உடம்பைக் கெடுக்காதீர்கள். கவலைப்படாதீர்கள். என்னை நினைக்காதீர்கள். நினைத்தாற் பெருமைப் படுங்கள்.

உங்கள் தம்பி

ம. பிரதீபன்

# மண்பற்று

வவுனியா திலீபன்

அந்தக் குடிசையின் ஒரு மூலையில் கந்தப்பு அப்பு முனகிக் கொண்டிருந்தார். இடையிடையே இருமல் சத்தமும் கேட்டது.
இடம்பெயர்ந்து வரும்போது கைவிட்டுத் தப்பி ஓடாமல் கடைசி மகன் அருள் அவரை மாட்டு வண்டியில் ஏற்றியிருந்தான்.
வலிகாமத்தில் வசதியாக இருந்த குடும்பத் தலைவன் கந்தப்பு அப்புவிற்கு வயது முதிர்வினால் நோய் கண்டுவிட்டது.
தேகம் இளைத்துப் போய்க்கிடக்கிறது. அவர் சுவாசிக்கும் சத்தம்

**''எங்கையிருந்தாலும் மனிசன் நெருக்கடிக் குள்ள இருக்க முடி யாது.... சுதந்திரமாக வாழ வேண்டும்'' என்ற அவர், இறந்த கால வன்னி ஞாபகங் களில் திளைக்கத் தொடங்கி விட்டார்.**


சுவரைத் தாண்டி வெளியேறிக் கொண்டிருந்தது.
கந்தப்பு அப்புவின் மனைவி செல்லாச்சி, மூத்தமகள் பார்வதி குடும்பம், அருள் குடும்பம் எனப் பெரும் எண்ணிக்கையானோர் இக் குடிசையில் திரண்டிருந்தனர்.
சொந்தவீட்டில் உலாவ முற்றம், விளையாட இடம், இளைப்பாற நிழல் மரம், எங்கேயும் எந்தப் பொழுதிலும் போகலாம். வாழ்வியலுக் குரிய வசதிகள் அத்தனையும் இழந்து வெறுமையுடன் அத்தனை பேரும்......வளவுக்குள்ளே சிரிப்பது......கதைப்பது......குதூகலிப்பது...
...எல்லாமே திடீர் என வற்றி......
வீட்டுச் சிந்தனையில் சொந்த இருப்பிடத்தின் ஞாபகத்தில் முகட்டு வளையை வெறித்தபடி......
"திரும்பவும் சொல்லிப் போட்டினம். வன்னிக்குப் போய்ப் பாதுகாப்பைத் தேடட்டாம்...."
–பார்வதியின் பருவமகள் சொன்னாள்.
"எந்தப் பகுதியாலும் குடாநாட்டிற் பெரும் தாக்குதலை 'ஆமி' செய்யலாமாம்...."
அவளே திரும்பவும் சொன்னாள்.
"சனங்கள் எல்லாம் கிளாலியாலை போய்க் கொண்டிருக்கு. நாங்கள் தான் யோசிச்சுக் கொண்டிருக்கிறம்."
–தம்பியார் சத்தியன் சொன்னான்.
கந்தப்பு அப்பு படுக்கையில் கிடந்தபடி பெரிதாக இருமிவிட்டுச் சம்பாசணையை செவிமடுக்கத் தொடங்கினார்.
"அக்கா....நீங்களும் பிள்ளைகளும் போறதெண்டால் போங்கோ.....நானோ என்ர குடும்பமோ அப்புவை விட்டுப்போட்டு வரத்தயாராக இல்லை....." "மாமா இப்படித்தான் வலிகாமத்திலும் பிடிவாதம் பிடிச்சியள்......கோயிலில அப்புவையும் வைச்சுக் கொண்டு இருந்தியள்.....நீங்கள் வராவிட்டால் – கடைசி நேரம் வராவிட்டால் குடும்பத்தையே அழிச்சிருப்பியள்....ஆனால் வந்திட்டியள் வன்னிக்குப் போறதைப் பற்றித்தான் யோசிக்க வேணும்....என்ன செய்யலாம் எண்டு சொல்லுங்கோ......"
"அப்புவைக் கொண்டு உந்தக் கடலால போகமுடியாது – அப்படியெண்டால் அக்கா அப்புவைக் கூட்டிக்கொண்டு போறதெண்டால் போங்கோ...."
என்றான் அருள்.
அக்கா பார்வதி அப்புவையும் பிள்ளைகளையும் மாறி மாறிப் பார்த்தாள். அவள் சம்மதிக்கிக்கூடும். ஆனால் பிள்ளைகளின் மனமறியாமல் முடிவு சொல்ல முடியாத சங்கட நிலைக்கு உள்ளானாள்.
"வன்னிக்குப் போய் எங்கையிருக்கிறது...அங்கை ஒரே காடு.....நுளம்பும், பாம்பும் கடிச்சுச் செத்துப் போய்விடுவம்.....அதைவிட இஞ்சையிருந்து சாகலாம்..."
என்றாள் அருளின் மனைவி.
"சரியாகச் சொன்னியள் மாமி....அந்தத் தண்ணியைக் குடிச்சால் நோய் தான் வரும்.....பேசாமல் இஞ்சை யிருந்திடலாம்..."என்றாள் பார்வதியின் கடைசி மகள்.
"அப்புவைக் கொண்டு போறதுதான் முக்கிய பிரச்சினை....அல்லாட்டி ஒரு மாதிரிச் சமாளிக்கலாம்..."
என்றான் அருள்.
படுக்கையில் முனகியபடி உரையாடல்களை அவதானித்துக் கொண்டிருந்த கந்தப்பு அப்பு பாயை விட்டு எழுந்தார். தன் மூட்டை முடிச்சுகளைத் தூக்கிப் புதிய உத்வேகத்துடன் தோளில் வைத்தார்.
"நான் வன்னிக்குப் போறன்...நீங்கள் இருங்கோ...., அங்கை நான் வெட்டித் துப்பரவு செய்து, தோட்டஞ் செய்த காணி கிடக்கு. அங்கை உழைத்துச் சேர்த்த சொத்துக்களைத்தான் நீங்கள் ஊரிலை அனுபவிச்சுக் கொண்டிருந்தியள் ..... வன்னியைப் பற்றி எனக்குச் சொல்லாதைங்கோ.....நீங்கள் வாறியளோ, வரேலையோ, நான் அங்கு போறதெண்டு முடிவெடுத்து விட்டன்...." என்றார் கந்தப்பு.
அப்புவின் பேச்சைக் கேட்ட அனைவரும் வியப்புடன் அவரைப் பார்த்தனர்.
"எங்கையிருந்தாலும் மனிசன் நெருக்கடிக்குள்ள இருக்க முடியாது.... சுதந்திரமாக வாழ வேண்டும்" என்ற அவர், இறந்த கால வன்னி ஞாபகங்களில் திளைக்கத் தொடங்கி விட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நிமிர்ந்து வா களம் நோக்கி!



கீரிமலைக் கோர் வரலாறுண்டு, கொடுத்துவிட்டோம்!
மாவிட்ட புரத்தை மாற்றானிடம் இழந்துவிட்டோம்!
நாரிநோக நாம்கொத்திப் பாடுபட்ட நமதள வெட்டிமினை
நரிகளிடம் பறிகொடுத்து நடந்து வந்தோம்!
தேரிழுத்து நாம்மகிழ்ந்த தெல்லிப்பழைத் துர்க்கையினை
தீயவரின் கையில் விட்டுத் தெருவிலின்று நிற்கிறோம்!
ஓரிரவில் உரும்பிராய் அச்செழுவை விட்டுவந்து
உறங்க இடமும் படுக்கப் பாயுமின்றி உருகுகின்றோம்!

சுண்ணாகம், மானிப்பாய், கட்டுடையின் சுகமிழந்தோம்!
சொர்க்கமென எமக்கிருந்த கோண்டாவில் சுடுகாடாய் மாறியது
பண்ணாகம் சுழிபுரம் பண்டத் தரிப்பினையும்
பறிகொடுத்துக் கால்நடையாய் பறந்துவந்தோம்!
வண்ணார் பண்ணையும் வடலி யடைப்புங் கூட
மண்ணோடு மண்ணாகிப் போகுமென்றா எண்ணினோம்!
வண்டு வந்து பனங்கள்ளுப் பானையிலே வாய்வைத்து
வண்ணக் கவிபாடும் வலந்தனையை அராலியை விட்டு வந்தோம்!

கொக்குவில்லில் குடியிருக்கக் கொடுத்துவைக்க வேண்டுமென்ற
எண்ணமதை எப்படித்தான் இழந்துவிட்டோம் இன்று?
தக்கதென நமக்கிருந்த தாவடியை இணுவிலை மல்லாகத்தை
தீயவரின் கைகளிலே தவிக்க விட்டோம்!
கொக்கும் தாராவும் கும்மாளம் போடுகின்ற
கல்லுண்டாய் வெளியை இனிமேலும் காண்போமா?
பக்கமெல்லாம் பார்க்கையிலே பசுமையது பூத்தவெங்கள்
கோப்பாய் வெளியையும் செம்மணி உப்பையும் காண்போமா இனி?

திருநெல்வேலிப் பலாப்பழமும் தேன்கதலி வாழையும்
தருகின்ற சுகத்தைவிட்டுத் தெருவினிலே அலைகின்றோம்!
குருநகர்மீனும் பாசையூர்ஆமையும் நாவாந்துறை நண்டும்
கொழும்புத்துறை இறாலும் கொடுத்த சுகம் இழந்துவிட்டோம்!
பெருநகர் என்றெண்ணிப் பெருமையுடன் நாமிருந்த
திருநகராம் யாழ்நகரைத் திருடரிடம் பறிகொடுத்தோம்!
அருமையாய் எமக்கிருந்த அழகிய கந்தரோடையை
எருமைகளின் கையில்விட்டு எப்படி நாமிருப்போம்?

நல்லூரிற் புதைந்துள்ள நம்பெருமை மீள்வதென்று?
நாங்களினிக் கந்தன் நல்லெழிலைக் காண்பதென்று?
வல்லூறின் வாயில் சிக்கிவிட்ட ஊரெழுவும்
வற்றாமல் நீர்சொரியும் நிலாவரையும் இனிவருமோ?
எல்லாமே வருமென்று சும்மாநாம் இருந்துவிட்டால்
இருப்பதும் இனிப்போகும், ஆகையினால் இன்தமிழா!
நில்லாதே இனியும், நெஞ்சமதைக் கல்லாக்கிவிட்டு
நம்மினிய மண்காக்க நிமிர்ந்துவா, களம் நோக்கி!

-மு.வே.யோ. வாஞ்சிநாதன்

## போதனை

குச்சுத் தடிகளையும், தும்புகளையும் சொண்டுகளுக்கு இடையில் சொருகியபடி பறந்து வந்தது அண்டங்காக்கை.

பப்பாமரத்தின் உச்சியில் கூவிக் களித்துக் கொண்டிருந்த குயில் கேட்டது...

"உதெல்லாம் என்னத்துக்கு"

"கூடு கட்டப் போறேன்" காக்கை பதிலளித்தது.

"பாவம் சரியாய் கஸ்டப்படுகிறாய்... நான் எண்டா உதுகளுக்காக மினக்கெடுகிறதில்லை" குயிலின் குரலில் ஏளனம் கொப்பளித்தது.

"உன்னைப்போல ஆக்கள் சும்மாயிருக்கிறதால, உங்களைப்போல ஆக்களுக்காகவும் சேர்த்துத்தான் நாங்கள் கஸ்டப்பட வேண்டிக்கிடக்கிறது"

காக்கை கூறிவிட்டுப் பதிலுக்குக் காத்திராமற் பறந்தது.

ஆனால், காகத்தால் கொத்தித் துரத்தப்பட்ட குயிலின் குஞ்சுகள் பரிதாபமாகக் கூ...கூ... என்று அலறும் ஓசை காதில் தெளிவாகக் கேட்டது.

செய்யவேண்டிய வேலையைச் செய்யவேண்டிய நேரத்தில் செய்யாது விட்டால், சந்ததி துன்பப்படுவதைத் தவிர்க்க முடியாது என்பதைக் குயில்க் குஞ்சின் கதறல் எனக்குள் உணர்த்துவதாக....

# சிந்தனைக்கு

## வீர சுதந்திரம் வேண்டி நின்றோர்..

விதந்தரு கோடி இன்னல்
விளைந்தெமை அழித்திட்டாலும்
சுதந்திர தேவி - நின்னைத்
தொழுதிடல் மறக்கிலேனே!

-பாரதி

தமிழ் மக்களை அடிமை கொள்வதற்காகச் சந்திரிகா அரசு மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை, அரசியல் ரீதியாகப் படுதோல்வி கண்டதை அடுத்து, இரண்டாங் கட்ட நடவடிக்கையில் சிறீலங்கா அரசாங்கம் இன்று தீவிரமாக இறங்கியுள்ளது. சிங்கள இராணுவத்தின் கையில் சிக்கி இன அழிப்புக்கு உட்படாது தப்பி வலிகாமத்தி லிருந்து வெளியேறி வந்த மக்களை மீண்டும் அங்கு "குடியமர்த்துவதே" தனது இரண்டாங் கட்ட நடவடிக்கை என சிறீலங்கா அரசாங்கம் வெளிப்படையாகவே அறிவித்து ள்ளது.

தமிழ் மக்களின் உயிர், உடைமையழிவு குறித்துச் சிறிதும் அக்கறைப்படாது பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொண்ட சிங்கள அரசு, புனர்வாழ்வு, புனர் நிர்மாணம், மின்சாரம், உணவு என்ற பொறிகளை வைத்து விட்டு வலிகாமம் மக்கள் அந்தப் பொறிகளில் வந்து சிக்குவர் என்ற நப்பாசையுடன் காத்திருக்கிறது.

ஆனால், இந்த இரண்டாம் கட்ட நடவடிக்கையிலும் சந்திரிகா அரசாங்கம் தோல்வியையே தழுவிக் கொள்ளும் என்பது மட்டும் நிச்சயமானது.

தமிழீழ மக்கள் என்றும் தமது உழைப்பிலேயே நம்பிக்கை கொண்டவர்கள். அவர்கள் உண்ணும் உணவு, அவர்களின் இருப்பிடம், அவர்களின் உடைமைகள் அம்மக்களின் வியர்வைத் துளிகளால் விளைந்தவை. அவர்கள் இன்று கைவிட்டு வந்த வீடுகள் 'கம் உதாவ' வினால் கிடைத்தவை அல்ல. சிரமப்பட்டு சேமித்த பணத்தில் உருவாக்கப்பட்டவை.

அவர்களின் விளை நிலங்கள் மகாவலி நீரினால் வளம் பெற்றவை அல்ல. நிலத்தை ஆழத் தோண்டி அங்கு சிறிது சிறிதாக சுரக்கும் நீரை அள்ளி ஊற்றி வளம்பெறச் செய்யப்பட்டவை.

அவர்கள் இன்று தமது விளை நிலங்களையும், வீடுகளையும் இழந்திருக்கலாம். ஆனால் உழைப்பையும், உறுதியையும் இழக்கவில்லை. அவர்கள் வெட்ட, வெட்டத் தளைக்கும் வாழைகள் போன்றவர்கள். எரித்த சாம்பரிலிருந்து மீண்டும் பிறக்கும் பீனிக்ஸ் பறவை போன்றவர்கள் என்பதைச் சிறீலங்கா அரசு புரிந்துகொள்ள வேண்டும்.

கிளாலிக் கடல் நீரேரியைக் கடந்து கிடுகுகளுடன் சென்றுகொண்டிருக்கும் இவர்கள், விரைவில் வன்னி மண்ணின் வளத்தைப் பயன்படுத்தி புதிய வாழ்வு பெறப்

தொடர்ச்சி 19 ஆம் பக்கம்

# பச்சோந்திகளும் புல்லுருவிகளும்

யாழ்ப்பாணத்திற் படையினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்குத் தமிழர்களின் ஆதரவும் உண்டு.

இது சனாதிபதி சந்திரிகாவின் வாய் மொழி. டக்ளஸ் தேவானந்தாக்களும், லக்ஷ்மன் கதிர்காமர்களும், நீலன் திருச்செல்வன்களும் அருகாமையில் இருக்கின்றனர் என்ற தெம்பும், அவர்களது பெயர்களிலும் தமிழ் மணம் ஒட்டிக் கொண்டிருக்கிறது என்ற எண்ணமும், தனது கூற்றுக்களுக்குப் பெருமாள் கோயில் மாடுகள் மாதிரி அவர்கள் தலையசைப்பார்கள் என்ற நம்பிக்கையும் திருமதி சந்திரிகா இத்தகைய கூற்று க்களை அவிழ்த்துவிடுவதற்கு ஆதாரமாக இருக்கக் கூடும். ஆனாற் கொழும்பு அரசின் இத்தகைய அறிவிப்புக்கள் எவையும் தமிழ் மக்களுக்குப் புதியவையல்ல. 1948 முதல் இன்று வரையிலான அரசியல் வரலாற்றில் இத்தகைய பிரகிருதிகள் பலர் இருந்துள்ளனர்.

ஆரம்ப காலத்தின் பொன்னம்பலங்கள், சுந்தரலிங்கங்கள் முதல் இன்றைய கதிர்காமர்கள் வரை இந்தப் பட்டியல் நீளமானது. மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டபோது அதனை ஆதரித்த பொன்னம்பலத்தையே கொழும்பு அரசு தமிழர்களின் பிரதிநிதியாகக் காட்டியது. 1972ல் புதிய அரசியலமைப்புக்கு, தமிழ் மக்கள் ஏகோபித்த குரலில் எதிர்ப்புக் காட்டிய போது அதனை ஆதரித்த குமாரசூரியர்கள், அருளம்பலங்கள், மார்ட்டீன்கள் மற்றும் தியாகராசாக்களே தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகச் சித்திரிக்கப்பட்டனர்.

ஒரு காலத்தில் தேவநாயகங்களும், தேவராஜுக்களும் தான் தமிழர் பிரதிநிதிகளாகக் காணப்பட்டனர்.

செல்லையா இராசதுரைகளும், பொத்துவில் கனகரத்தினங்களும் மனம் மாறி வந்து விட்டதாகக் கொழும்பு குதூகலித்துக் கொண்டிருந்தது.

இவற்றைச் சிவசிதம்பரங்களும், பிறேமச்சந்திரன்களும் இன்று வசதிக்காக மறந்து போயிருக்கலாம்.

ஆனாலும் இந்தப் புல்லுருவிகளின் பசப்பு வார்த்தைகளால் தமிழ் மக்கள் எடுபட்டுவிடவில்லை.

தமிழ் மக்களின் அபிலாசைக்கான போராட்டம் பிசுபிசுத்து விடவும் இல்லை. நீர்த்துப் போய்விடவும் இல்லை. மாறாக, காலத்துக்குக் காலம் அவதார புருஷர்கள் போல தம்மை அடையாளம் காட்டிய இந்தப் பிரகிருதிகளே காலநதியில் கரைந்தது போயினர்.

கறைபடிந்த வரலாற்றின் சொந்தக்காரர்களாக ஒதுக்கப்பட்டனர். இது கடந்த கால அனுபவம். கறுவாக்காட்டின் மெத்தப் படித்த புத்திசீவிகளுக்கும், மானிப்பாய் மண்ணின் நிறமே தெரியாத கதிர்காமர்களுக்கும், திருமதி சந்திரிகா ஒரு அற்புத தேவதையாகச் சிலசமயம் தெரியக்கூடும். ஆனாற் கட்டிய சாறங்களோடு கைதடியைக் கடந்தவர்களுக்கும், படையினரின் நித்திய சேட்டைகளால் தொல்லைகளை அனுபவிக்கும் சாதாரண மக்களுக்கும் கொழும்பு அரசின் போக்கு உவப்பாக இருக்கப் போவதில்லை என்பது நிஜம்.

போர்க்களத்தில் புலிகளிடம் கற்கும் - கற்கப் போகும் பாடங்களுக்கு அப்பாலும், அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர்களாலேயே கொழும்பு அரசின் கொழுப்புக் கரைந்து விடும் என்பது திண்ணம்.

-மதுரா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அவலத்தைத் தந்தவருக்கே அதனைத் திருப்பிக் கொடு



அது 1987 ஒக்ரோபர் 10ஆம் திகதி.

ஈழத்தமிழரின் போராட்ட வரலாற்றில் அந்த நாள் மறக்கப்படவே முடியாதது. அன்று தான் 'கோலியாத்' (இந்தியா) என்ற அரக்கன் சிறுவனான 'டேவிற்'றை (புலிகள்) சண்டைக்கு இழுத்த நாள். அதாவது கிள்ளுக்கீரைகள் என நினைத்து தமிழீழ விடுதலைப் புலிகளைக் கிள்ளி எறிய இந்திய

> "நீங்கள் (இந்தியப்படை) தேவையற்ற முறையில் போரை ஆரம்பித்துள்ளீர்கள். நாங்களும் போருக்குத் தயார் என உங்களது தளபதிகளிடம் சொல்லுங்கள். இனிப் போர்க்களத்தில் சந்திப்போம்" என்று கூறிவிட்டு, 'வோக்கி"யின் இயக்கத்தை நிறுத்தினார்.

அரசு முடிவு எடுத்த நாள். ஆயினும் அந்தக் 'கிள்ளுக்கீரைகள்' 'காஞ்சோண்டி'களாக மாறி இந்திய ஆக்கிரமிப்பை அரிக்கத் தொடங்கிய நாளும் அதுதான். அந்த நாட்களில் யாழ். பல்கலைக்கழகத்திற்கு மேற்குப் புறமாக உள்ள பிரம்படி என்ற சிற்றூரில் தலைவர் பிரபாகரனின் பாசறை இருந்தது. அதேவேளை பல்கலைக்கழகத்திற்குத் தெற்குப் புறமாக அதனை அண்டி தலைவரின் இன்னொரு பிர–தான முகாம் இருந்தது. அன்று காலையே அந்த முகாமுக்குச் சென்ற தலைவர் அவர்கள் தளபதிகளை அழைத்துப் போருக்கு எவ்வாறு முகங்கொடுப்பது என்று அறிவுறுத்தல்களையும், ஆலோசனைகளையும் வழங்கிக் கொண்டிருந்தார்.

இதேவேளை யாழ். கோட்டையில் நிலை கொண்டிருந்த இந்தியப்படையினரை வெளியேற விடாது புலிகள் எதிர்த் தாக்குதல் தொடுத்தனர். யாழ். கோட்டைப் பகுதியில் சண்டை தொடங்கியது.

அப்போது பலாலி இந்தியப் படைத் தலைமையகத்தில் இருந்து மேஜர் பெரியசாமி என்ற பெயருடைய இராணுவ அதிகாரி புலிகளின் தலைமைப் பீடத்துடன் 'வோக்கி' மூலம் தொடர்பு கொள்ள முயன்றார். (இந்தியப் படையுடனான சமாதான காலத்தில் இந்த இராணுவ அதிகாரி புலிகளுக்கும், இந்திய உயர் இராணுவ அதிகாரிகளுக்கும் இடையேயான தொடர்பு அதிகாரியாகப் பணியாற்றி இருந்தார்). மேஜர் பெரியசாமியின் அழைப்புச் சத்தத்தைக் கேட்ட தலைவர் அவர்கள், தானே 'வோக்கி'யை எடுத்து பெரியசாமியுடன் தொடர்பு கொண்டார்.

"பெரியசாமி.....பெரியசாமி....இங்கே நான் பிரபாகரன் பேசுகின்றேன்" என்று பதில் கொடுத்தார். எதிர்முனையில் இருந்து கிடைத்த இந்த எதிர்பாராத அழைப்பால் திடுக்குற்ற மேஜர் பெரியசாமி, "யார் பிரபாகரனா! வணக்கம் சார்" என்று தனது ஆச்சரியத்தையும், மகிழ்ச்சியையும் வெளிப்படுத்திவிட்டு ஏதோ கதைக்க முயன்றவரைக் குறுக்கிட்ட தலைவர் அவர்கள், "நீங்கள் (இந்தியப்படை) தேவை யற்ற முறையில் போரை ஆரம்பித்துள்ளீர்கள். நாங்களும் போருக்குத் தயார் என உங்களது தளபதிகளிடம் சொல்லுங்கள். இனி போர்க்களத்தில் சந்திப்போம்" என்று கூறிவிட்டு, 'வோக்கி'யின் இயக்கத்தை நிறுத்தினார்.

மாரி மழையும் தீவிரமடைந்தது. போரும் தீவிரமடைந்தது. போரில் இந்தியப்படைகளை வெல்லமுடியாது என்ற கருத்தை எமது மக்களில் பலர் மிகவும் உறுதியாக வைத்திருந்தார்கள். அது போலவே தமிழ் மக்களை இந்தியப்படை கொலை செய்ய மாட்டாது என்ற கருத்தையும் எமது மக்கள் நம்பிக்கையுடன் வைத்திருந்தார்கள்.

இதனால் எறிகணை வீச்சில்லாத – வான்வழித் தாக்குதல்கள் இல்லாத – ஒரு சண்டையைப் பற்றி மக்களிற் பலர் கற்பனை செய்து கொண்டிருந்தனர்.

ஆனால் போர் தொடங்கிய அன்றே – பிரம்படியில் இந்தியப் படைகள் புரிந்த கொடூரமான படுகொலைகள், மக்களை அதிர்ச்சிக்கும் – அச்சத்திற்கும் உள்ளாக்கியது. அதைத் தொடர்ந்து யாழ். கோட்டை மற்றும் பலாலிப் படைத்தளங்களிலிருந்து ஏவப்பட்ட 'ஆட்டிலறி' எறிகணைகள் அகதி முகாம்களிலும், கோயில்களிலும், வீடுகளிலும், பாடசாலைகளிலும் விழுந்து மக்களைப் பலிகொள்ளத் தொடங்கின.

இந்தியாவின் அகிம்சை முகமூடியை அதன் 'ஆட்டிலறி'களும் – 'எஸ். எல். ஆர்.' துப்பாக்கிகளும் கிழித்துக் கொண்டிருந்தன.

இந்த இடத்தில் வேதனை நிறைந்த ஒரு சுவாரசிய சம்பவத்தைக் குறிப்பிட வேண்டிய தேவை உள்ளது. இந்திய – புலிகள் போர் கடுமையடைந்து கொண்டிருந்தபோது, இங்கிலாந்திற்கும், இந்தியாவிற்கும் இடையே துடுப்பாட்டப் போட்டி ஒன்று நடந்து கொண்டிருந்தது. அந்தப் போட்டியில் இந்தியா தோற்று விட்டது. இந்தத் தோல்விச் செய்தியை வானொலி வர்ணனையாளர் அறிவித்ததும், அதைப் பலாலியில் இருந்தபடி செவி மடுத்துக் கொண்டிருந்த பிரிகேடியர் பெர்னாண்டஸ் என்ற இந்தியப்படை அதிகாரி, தனது 'ஆட்டிலறிப் படைக்கு தொலைத் தொடர்புக் கருவி ஊடாக இவ்வாறு உத்தரவிட்டார்.

"இந்தியாவின் துடுப்பாட்டத் தோல்வியைப் புலிகள் கொண்டாடப் போகின்றார்கள். எனவே உடனடியாக 'ஆட்டிலறி'த் தாக்குதல்களை மேற்கொள்ளவும்".

இந்த உத்தரவைத் தொடர்ந்து கோண்டாவில், கொக்குவில், திருநெல்வேலி, நல்லூர் மற்றும் யாழ்ப்பாணப் பகுதிகளை நோக்கிச் சில நிமிட நேரங்கள் – பலத்த 'ஆட்டிலறி'த் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. இந்தியத் துடுப்பாட்டக் குழு ஒரு போட்டியில் தோற்றதால், ஓர் இராணுவ உயர் அதிகாரிக்கு ஏற்பட்ட பைத்தியக்காரத்தனமான கற்பனை காரணமாகப் பிறந்த கட்டளையால், எமது மக்களில் எத்தனை பேர் பலியானார்கள்.

****

இந்திய – புலிகள் போர் தொடங்கி ஒன்று–இரண்டு மாதங்களில் குடாநாடு இந்தியப்படைகளின் வசமாகிவிட்டது. அதேவேளை புலிகளின் படையணிகள் சிதைந்தும், சேதப்பட்டும், சிதறுண்டும் காணப்பட்ட ஓர் இக்கட்டான காலப்பகுதி அது. சுருக்கமாகச் சொன்னால், இராணுவ ரீதியாகப் புலிகள் இயக்கம் பலவீனப்பட்டுப் போய் நின்ற நெருக்கடியான வேளை அது. அதேவேளை தலைவரின் பாசறை அமைந்திருந்த மணலாற்றுக் காட்டுக்குள் ஒரு பாரிய படையெடுப்பைச் செய்ய, இந்தியப்படைகள் ஆயத்தம் செய்து கொண்டிருந்தன.

உணவு–மருந்து–படையணிகளுக்கிடையேயான தொடர்பு கொள்ளல் என்பவை பெரிதும் பாதிக்கப்பட்ட காலமது. இதனால் புலிகள் இயக்கமே முற்றுமுழுதாக அழிக்கப்பட்டு விடுமோ என்ற ஒரு அபாயம் நிலவிய வேளை அது! அந்தளவுக்கு இந்தியப் படைகள் ஒரு பாரிய இராணுவ – உளவியல் நெருக்கடியை எமது இயக்கத்திற்கும் எமது மக்களுக்கும் கொடுத்துக் கொண்டிருந்தன.

இந்த நிலையில், இந்தப் பாரிய நெருக்கடியைத் தீர்த்து இயகத்தைப் பாதுகாப்பதற்காக இந்திய அரசுடன் சமாதானப் பேச்சுக்குப் போவதே புத்திசாதுரியமான வழி–யென எமது மூத்த உறுப்பினர்கள் சிலர் தொலைத் தொடர்பு சாதனங்கள் மூலம் தலைவருக்குச் செய்தியனுப்பினர். இந்தச் செய்திக்குத் தலைவர் எந்தப் பதிலையும் அனுப்பவில்லை.

சமாதானப் பேச்சிற்கு எப்போது நாம் செல்ல வேண்டும் என்பதில் தலைவர் ஒரு கொள்கையை வைத்திருக்கின்றார். அதாவது இராணுவ ரீதியில் பலமான நிலையில் இருந்தபடிதான் நாம் சமாதானப் பேச்சிற்குச் செல்ல வேண்டும். அப்போது தான் எமது

> அவலத்தை - அபாயத்தைக் கண்டு பதறி அவநம்பிக்கை அடைவதைவிட அதற்கு எதிராக ஆவேசங்கொண்டு, அவற்றை எமது மக்கள் மீது ஏவிவிட்டோரே அவற்றை அனுபவிக்கும்படி செய்வது தான், ஈழத்தமிழினத்திற்குத் தலைவர் பிரபாகரன் கொடுத்துள்ள புதிய சித்தாந்தம் ஆகும்.

உரிமைகளை வலியுறுத்திப் பெற முடியும். பலவீனமான நிலையில் இருந்தபடி சமாதானப் பேச்சிற்குச் சென்றால் – அதுவும் வலியச் சென்றால் – சமாதான உடன்பாடு என்ற போர்வையில் எமது இனத்தின் அடிமைச்சாசனத்தையே எதிரி எம்மிடமிருந்து பெறமுனைவான் என்பதில் தலைவர் கவனமாக இருக்கின்றார்.

சமாதானப் பேச்சுக்குச் செல்வதே சிறந்தது என்று எமது மூத்த உறுப்பினர்கள் கோரிய அந்தக் காலத்தில், புலிகள் இயக்கம் உண்மையில் பலவீனமாகவே இருந்தது. எனவேதான் இந்தச் சமாதான ஆலோசனைக்குத் தலைவர் பதில் அனுப்பாது இருந்து விட்டார்.

ஆனால் மீண்டும், மீண்டும் பதில் வேண்டி அந்தச் செய்தி வந்தபோது, தொலைத் தொடர்பு சாதனம் ஊடாகத் தலைவர் இவ்வாறு பதில் அளித்தார்.

"அமெரிக்கப் படையுடன் போரிடத் தொடங்கும் போது தாம் 30 வருடங்களுக்கு மேலாகப் போர் புரிய வேண்டிவரும் என வியட்நாம் தலைமை நினைத்திருக்க மாட்டாது. ஆனால் அவர்களிடம் இருந்த தன்னம்பிக்கையும், துணிவும்தான் அவர்களை உறுதியுடன் வைத்திருந்தது. வெற்றியையும் பெற்றுக் கொடுத்தது. அந்தத் தன்னம்பிக்கையும், துணிவும் என்னிடம் இருக்கின்றது. இந்தச் செய்தியின் உட்பொருளை அந்த மூத்த உறுப்பினர்களும் புரிந்துகொண்டு தொடர்ந்தும் போர்ச் செயற்பாடுகளிலேயே ஈடுபட்டார்கள்.

அவலத்தையும், அபாயத்தையும் கண்டுவிட்டு மனம் இடிந்து போவது மனித சுபாவம். இந்த மனித குணத்தை ஆக்கிரமிப்பாளர்கள் தமது நோக்கங்களை நிறைவேற்றப் பயன்படுத்துவதை உலக வரலாற்றில் அன்றிலிருந்து இன்றுவரை காணலாம்

போராடும் மக்கள் மீது அவலங்களை விதைத்து, தேசத்தின் உறுதிப்பாட்டை உடைத்து, போரை வென்று மக்களை அடிமைகொள்வது ஒரு ஆக்கிரமிப்புச் சித்தாந்தம். அமெரிக்கச் சிவப்பிந்தியர்கள் மீதும், ஆபிரிக்க நீக்கிரோக்கள் மீதும் வெள்ளையின அரசுகள் இதை வெற்றிகரமாகச் செய்துள்ளன. இரண்டாம் உலகப் போரின் போது, பிரித்தானியாவை வெல்வதற்காக யேர்மனிய விமானப்படை இந்த அவலத்தை பிரித்தானிய நகரங்கள் மீது விதைத்தது. பின்னர் அதே நோக்கத்திற்காகப் பிரித்தானிய விமானப்படை யேர்மனிய நகரங்கள் மீது அந்த அவலத்தை வட்டியுடன் சேர்த்து விதைத்தது.

சிறீலங்கா, முன்னோக்கிப் பாய்தலின் போதும் இந்த உத்தியைத்தான் சிங்களப் படைகள் கையாண்டது. மக்களது போராட்ட உறுதியை உடைப்பதற்கு நீண்ட நாட்களாகவே – இதேவகைப் பயங்கரவாதத்தையே சிங்களப் படைகள் செய்து வருகின்றன. ஆனால், புலிகள் இயக்கத்திடம் இந்த ஆக்கிரமிப்புச் சித்தாந்தம் எடுபடுவதில்லை.

அவலத்தை – அபாயத்தைக் கண்டு பதறி அவநம்பிக்கை அடைவதைவிட அதற்கு எதிராக ஆவேசங்கொண்டு, அவற்றை எமது மக்கள் மீது ஏவிவிட்டோரே அவற்றை அனுபவிக்கும்படி செய்வதுதான், ஈழத் தமிழினத்திற்குத் தலைவர் பிரபாகரன் கொடுத்துள்ள புதிய சித்தாந்தம் ஆகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வீர சுதந்திரம்.....

பயன்படுத்தி, புதிய வாழ்வு பெறப் போவதை உலகம் பார்த்து வியக்கத்தான் போகிறது.

இவர்களைச் சோற்றுக்காகவும், மின் சாரத்துக்காகவும் இனமானத்தை விட்டு வருமாறு அழைப்பவர்கள் தமது முயற்சியிற் தோல்வியையே தழுவ உள்ளனர்.

அத்துடன், தமிழ் மக்கள் உரிமைக்கும் அபிவிருத்திக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை உணர்ந்தவர்கள்–எதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதை நன்கு அறிந்தவர்கள்–சோற்றுக்காகச் சுதந்திரத்தை விற்பவர்கள் அல்ல என்பதற்கு வரலாற்றில் சான்றுகள் பல உண்டு. தமிழர்களின் தலைவர்களாகப் பண்டாரவன்னியனும், சங்கிலியனும், தந்தை செல்வாவும், தலைவர் பிரபாகரனும் உள்ளனரே தவிர, காக்கை வன்னியனும், துரையப்பாவும், டக்ளஸ் தேவானந்தாவும் இருக்கவில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக, தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டமானது ஏழாயிரத்துக்கு மேற்பட்ட போராளிகளினதும், நாற்பதாயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்களினதும் உயிர்த் தியாகத்தாலும் – குருதியாலும்– வியர்வையாலும் இன்று ஓர் உன்னத நிலையை அடைந்துள்ளது. இதனைச் சோற்றுக்காகவும், மின்சாரத்திற்காகவும் கைவிட எவரும் தயாராக மாட்டார்கள் என்பதைச் சந்திரிகா அரசு புரிந்து கொள்ள வேண்டும்.


எனவே தனிப்பட்ட வாழ்க்கை நலனுக்கும், சுகபோகங்களுக்கும் அப்பால் எமது இனத்தின், தேசத்தின் நல்வாழ்வும் விடிவுமே உன்னதமானது என்பதை உணர்ந்து எமது மக்கள் சரியான முடிவை, துணிவான முடிவை எடுப்பார்கள்" என்ற விடுதலைப் புலிகளின் நம்பிக்கை வீண்போகாது.

# விடுவிக்கப்பட்ட மக்கள்...

மற்றவர்களின் விபரங்களையும் அறிய முனைவதோடு, அவர்களைத் தாம் பார்வையிட வேண்டுமென்றும் வற்புறுத்துவார்கள். அதனால் அவர்களிடம் ஒப்படைக்க முடியாது' என அவர்கள் கூறினார்கள் எனவும் தெரிவித்தார்.

இவர்களுடன் பிடிபட்ட கந்தசாமி என்பவர் தம்மைப் படையினர் விடுவித்த விபரத்தைப் பற்றிக் கூறும் போது,"14–01–96 அன்று காலை தேவாலயத்திற்கு வந்த இராணுவத்தினர் எம்மைத் தமது வாகனத்தில் ஏற்றிவிட்டுக் கண்ணைக் கட்டுமாறு துணிகளை நீட்டினர். என்ன நடக்கப்போகின்றதோ என்று பயந்தபடி, எங்கள் குலதெய்வத்தை வேண்டியவாறு கண்களைக் கட்டினோம். சில நிமிடம் கழித்து ஓரிடத்தில் வாகனத்தை நிறுத்தினர். கட்டியிருந்த துணிகளை அவிழ்த்துவிட்ட இராணுவத்தினர், 'அங்காலும் இங்காலும் செல்லாது நேராகச் செல்லவேண்டுமென்றும், பாதையை விட்டு விலகினால் கால்களை இழக்க வேண்டிவரும்' எனவும் கூறினர். அரைப்பனை உயரமளவிற்கு மண்திட்டி அரண்கள் அமைக்கப்பட்டிருந்தன. அதன் மேல் ஏறிக் கீழே இறங்கியபோது குறிப்பிட்ட ஒரு பாதையிற் போகுமாறு கூறினர். பாதையின் இருமருங்கிலும் முழத்திற்கு முழம் மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதை அவர்களின் பேச்சில் இருந்து உணரக்கூடியதாய் இருந்தது. அதனால், பயத்தில் அடிமேல் அடியெடுத்து வைத்து நடந்தோம். மண்திட்டியில் இருந்து 10 மீற்றர் தூரத்தில் முட்கம்பி வேலியடிக்கப்பட்டு இருந்தது. அதற்குள்ளாற் புகுந்து வெளியே வந்ததும் இன்னுமொரு முட்கம்பி வேலியைத் தாண்ட வேண்டி இருந்தது. அதையும், அவர்கள் காட்டிய இன்னொரு பாதையூடாகக் கடந்து வந்து சேர்ந்தோம்" என்றார்.

# இலண்டனில் கேணல் கிட்டுவினதும் தோழர்களினதும் மூன்றாம் ஆண்டு நினைவு விழா



இந்திய வல்லாதிக்கச் சதியினால், வங்கக்கடலிற் காவியமான எமது மூத்த தளபதி கேணல் கிட்டு அவர்களினதும், அவருடன் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட ஒன்பது தோழர்களினதும் மூன்றாமாண்டு வீரவணக்க நினைவு விழா 20–01–96 சனிக்கிழமை விம்பிள்டன் றட்லிஸ்(RUTLISH) பாடசாலையில் உணர்வு பூர்வமாகக் கொண்டாடப்பட்டது.

இரண்டு மணித்துளி அமைதி வணக்கம் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரித்தானியக் கிளைப் பொறுப்பாளர் திரு. சாந்தன் அவர்களால், முன்னரங்கத்தில் வைக்கப்பட்டிருந்த தளபதி கிட்டு அவர்களினதும் தோழர்களினதும் நினைவுருவப் படத்தின் முன் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து, விழாவிற் கலந்து கொண்ட சகல மக்களாலும் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. இந் நினைவுப்பீடம் கிட்டண்ணாவின் முழுவுருவப் படம் மையமாக விளங்க, தோழர்களின் படங்கள் இருபக்கங்களிலும் சூழ்ந்திருக்க, தமிழர் கலாச்சாரப் பிரதிபலிப்புகளுடன் மிகவும் அழகிய முறையில் வடிவமைக்கப்பட்டிருந்தது.



கிளைப் பொறுப்பாளர்
திரு சாந்தன் அவர்கள்

வீர வணக்க நிகழ்வைத் தொடர்ந்து, 'சித்திராலயா' இசைக்குழுவினரது விடுதலைக் கீதங்களுடன் கலை நிகழ்வுகள் தொடங்கின.

இசை நிகழ்ச்சிக்கு அடுத்ததாக, சிறுமி கிருஸ்ணி ரமேஸ் அவர்களின் 'மாவீரன் கிட்டு' என்ற தலைப்பில் அமைந்த பேச்சு சபையோரின், பாராட்டைப் பெற்றது.

இடைவேளையின் முன்நிகழ்ச்சியாக இடம் பெற்ற, 'அடலேறு' என்ற பொருள் கொண்ட கவியரங்கு மண்டபத்தை அதிரவைத்தது. கவிஞர் செ. சிறீஸ்கந்தராசா அவர்கள் தலைமை வகிக்க, கவிஞர்கள் திரு. பாலரவி, திரு. ந. சிவநாதன், நாயன்மார்கட்டு சிவகுமாரன் ஆகியோர், கிட்டண்ணா எவ்வாறு அடலேறாக வாழ்ந்து அடலேறாகவே மாவீரனானார் என்பதைப் பல்வேறு கோணங்களிற் தமது கவிகள் மூலமாக வெளிப்படுத்திக் கவியரங்கைச் சிறப்பித்தனர்.

இடைவேளையைத் தொடர்ந்து இடம்பெற்ற பிரித்தானியக் 'கம்பன் கழகம்' வழங்கிய, 'இன்று சந்திக்கும் இவர்கள்' என்ற தலைப்பிலான சிறுவர் நிகழ்ச்சி அனைவரது பாராட்டுதலையும் பெற்று, சிறப்பு நிகழ்ச்சியாகவும் அமைந்தது. இந்நிகழ்ச்சி புதிய கோணத்தில் நான்கு கட்டங்களாகக் கலைவடிவமாக்கப்பட்டிருந்தது.

முதற்கட்டமாக, பின்னணியில் சிறிமாவோ பண்டாரநாயக்கா இந்தியாவில் மருத்துவச் சிகிச்சை பெற்றபின் தள்ளுவண்டியில் அமர்ந்திருக்க, மகள் சந்திரிகாவுக்குப் புத்த பிக்கு ஒருவர் விசிறியால் வீசுவதும், இந்தியப்



கவியரங்கு



சிறப்பாய்ப் பேசிய சிறுமி



வில்லிசை

பிரதிநிதியொருவர் புத்தபிக்குவைத் தலை சாய்த்து வணங்குவதும் அண்மைக்கால அரசியல்நிலையினைப் பிரதிபலிப்பதாக இருந்தது.சூரியக்கதிர் இராணுவநடவடிக்கையைத் தொடர்ந்து தாய் சிறிமாவோவும் மகள் சந்திரிகாவும் சந்தித்து உரையாடும் காட்சி இடம் பெற்றது. இதில், "யாராலும் சாதிக்க முடியாத ஒன்றைச் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை மூலம் சாதித்தாலும், சொந்தத் தம்பியை நம்பாத நீ, மாமன் ரத்வத்தவை எப்படி நம்புவாய்? அவனை நம்பாதே" எனத் தாய் மகளுக்கு ஆலோசனை கூறுவது



'இன்று சந்திக்கும் இவர்களில்" அன்று சந்தித்த அவர்கள்

போன்று காட்சி இடம் பெற்றது, இரண்டாவதாக, அண்மையில் வன்னிக்கு இடம் பெயர்ந்த இரு குடும்பப் பெண்கள், போராட்டத்தின் இன்றைய யதார்த்த நிலைபற்றிப் பேசிக்கொள்ளும் காட்சி இடம் பெற்றது. "இராணுவத்தைப் பொடியள் விட்டுட்டாங்கள்" என ஒரு பெண்மணி கூறிக்கவலைப்பட மற்றவர், "எல்லோரும் சேர்ந்து பொடியளுக்கு உதவி செய்திருந்தால், இந்த நிலை ஏற்பட்டிருக்காது, இனியாவது தாமதிக்காது வெளிநாட்டிலுள்ள மகனுக்குக் கடிதம் எழுதிக் காசைப்பெற்றுப் போராட்டத்துக்குக் கொடுத்து உதவு" எனக் கூறுவது, புலம்பெயர்ந்த தமிழர்களின் வரலாற்றுக் கடமையையும் சுட்டிக் காட்டுவதாக அமைந்தது.

மூன்றாவதாக, விண்ணுலகத்தில் பிறேமதாசாவும் ராஜீவ்காந்தியும் சந்தித்துக் கதைக்கும் நகைச் சுவை ததும்பிய காட்சி இடம் பெற்றது. இக்காட்சியில், அண்மைக்கால இராணுவ நடவடிக்கை குறித்து, ராஜீவ் காந்தி சந்தோசப்பட பிறேமதாசா, "சிறிலங்காவில் பிடரியில் அடி வாங்கியதை மறந்து விட்டாயா?" என ராஜீவ் காந்தியைப் பார்த்துக் கூறுவதும், "என்ன இருந்தாலும் தமிழ் மக்கள் பிரபாகரன் பக்கமே நிற்கிறார்கள்" என்ற உண்மையை விளம்புவதும் கோடிட்டுக் காட்டக்கூடியன. சிறுவர் நிகழ்ச்சியின் இறுதிக்காட்சியில், கிட்டண்ணாவும் புலேந்தி அம்மானும் விண்ணுலகிற் சந்தித்து, போராட்டத்தின் இன்றைய நிலைபற்றிக் கலந்துரையாடுகின்றனர். இதில், "யாழ்ப்பாணத்தைப் பறிகொடுத்து விட்டோமே" எனப் புலேந்தியம்மான் ஆத்திரத்துடன் ஆதங்கப்படக் கிட்டண்ணா, "தலைவர் இருக்கின்றார்" எனக் கூறி அவரைச் சமாதானப்படுத்துவதும், இந்த நேரம் தலைவருடன் தாம் நிற்கவில்லையே என இருவரும் கவலையுடன் ஆதங்கப்படுவதும் உணர்வுபூர்வமாக இருந்தது.

தொடர்ந்து, புலம்பெயர்வாழ் தமிழ்மக்கள் யாவரும் இன்று மிக விரைவாகப் போராட்டத்துடன் இணையவேண்டிய அவசியத்தை வலியுறுத்துவதாய்ப் பிரித்தானியக் கிளையின் பொறுப்பாளர் திரு. சாந்தன் அவர்களின் உரை இடம்பெற்றது.

சிறுவர் நிகழ்ச்சியில் பங்கெடுத்துக் கொண்ட அத்தனை சிறார்களும் பெருங் கரகோசத்தின் மத்தியில் சபையோரின் பாராட்டுதலைப் பெற்றுக் கொண்டனர். குறிப்பாக, பிறேமதாசாவாகப் பங்கெடுத்துக் கொண்ட சிறுவனின் நடிப்பாற்றல் சகலரையும் வியக்க வைத்தது.

'ரூட்டிங்' முத்தமிழ் மன்றத்தார் வழங்கிய, "கடலில் காவியமாகிய நாயகன்" என்ற வில்லுப்பாட்டு இறுதி நிகழ்ச்சியாக இடம் பெற்றது. இதிற் பங்கெடுத்துக் கொண்ட உதவிக் கலைஞர் சிலரின் பாடல்கள் சுருதி சேராதிருந்ததுடன் அனுபவமின்மையையும் பிரதிபலித்தது. ஆனால், தலைமைக் கலைஞர் தனது அனுபவத்தாலும் ஆளுமை யாலும் மிகத் திறமையாக அதை மேவி வில்லுப்பாட்டைச் சிறப்புற நிறைவு செய்தார்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வரலாறு சொல்லும் வழி

இனவாதக் 'கும்பகர்ணன்' மீண்டும் எழுந்தான் காண்.
பிணமாக்கி எம்மண்ணைப் பிடித்தவுடன்
தமிழனொரு
கால் தூசென்று கைகொட்டி நின்றான் காண்.
கோலாகலத்தோடு வெடிகொளுத்தி ......'முழுப்பனைக்கும்'
பாடம் படிப்பிப்போம், என்றான் காண்.
நேற்றெமது பலங்கண்டு பாசமெனப் பாடியவன்.......
யாழ் குலைந்து,
ஒலியிழக்கும் முன், தீர்வா உனக்கென்றிழுத்தான் காண்
வாக்குக் கொடுத்தமுகம் மாறியதே!
இனிப் பேச்சைத் தூக்கி எறிவான்,
துரோகப் பதர்களையும்......
கைப்பொம்மை ஆக்கிக் கருவறுப்பான், நம்பியோரை
நப்பாசை காட்டி, நசித்து, மிதித்தடக்கி
நான் வைப்பேன் சட்டம் நடவென்று, தெற்கிலே
கூனும் தமிழ் முறியக் குட்டிடுவான். பழையபடி,
கலவரங்கள், கண்ணீர்,
'கடுக்கனுக்கும், பொட்டுக்கும்'
தலைகுனிவு, எல்லாம் தளைத்தெழும். மொழியுரிமை
படுகுழிக்குள் பாற, எம் பதிபணியும்.
மீண்டெழும்ப.....
முடியாத சரிதமெமை மூடிவிடும். நேற்றிருந்த
மரபு, மறம் சாயும்.
வார்த்த உயிர்த் தியாகமெல்லாம்
வீணாகும், இதுவே யதார்த்தம்.
இதை விளங்காத் தமிழ்க்குலம் ஓடு!
தருவான் நிவாரணங்கள்.....
அமிர்தமென உண்டு அயர்ந்து படு!
துயரெல்லாம் பொடியளினால் என்று புறுபுறுத்துத் திட்டு!
நாளை.......
சரித்திரமே தோற்கச் சந்திகளில் 'பிரித்' ஓது
என்ன இழிவில் இழிகின்றாய்? விழித்துப்பார் இம்
மண்ணில் நடந்து,
மனத்திரை விட்டகலாத
வரலாற்றுப் போரின் வடிசாறாம் உண்மையெல்லாம்
புரிகிறதா? எங்கள் புயபலத்தால் ஆணையிடும்
ஆற்றல் நமதடிமையினை அகற்றிடுமாம்.
கூற்றின் முன்.....
மார்தட்டின், மாற்றம் மலர்ந்திடுமாம். தவிர, வேறு
வழியில்லை?
துன்பம், மரணம், போர், இடப்பெயர்வும்
சலிப்பேற்றும்.....
மெய்தான்.
ஆனாலிச்சுமைகளையும்
வலிமையுடன் தாங்கி வளர்ந்தால்த்தான்
சுதந்திரத்தின் அருள்கிடைக்கும். அறிக!
துயரங்கள் ஆயுளெல்லாம்
வருவதில்லைப் புரிக?
ஆகையினால் எம்மடியைக்
காக்கக் கருகும்
கரும்புலிக்குப் பொட்டிடுக.
சாக்காட்டில் துணையாய்ச் சங்கெடுக்க.
பகையெரிக்க.....
அக்கினிக் குஞ்சள்ளி அளிக்க.
இது காலக்கட்டளையாம்.
வேற்றுமைகள் களைந்து சுயநலத்துச்
சேறு கழுவிச் செருவெல்ல நேர்த்திவைக்க,
வீடுவரும்,
அந்த வழியே.......
சுகநாடுவரும்.

ஜெ.கி. ஜெயசீலன்


T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palemo, Italy
T/F: 091- 611 3179

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss
T/F: 01- 273- 29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.O, 211 Katherine Rd
London E6 1Bu,U.K
Tel: 0181 503 4294
Fax:0181 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1 , Norway
Tel: 022- 191 260 Fax: 190114

W.T.C.C
170 - 10 Cadarcroft Road
Suite 1-L,Jamaica,
New York 11432 U.S.A.
T/ F: 718- 657- 9463

L.T.T.E
P.O.Box 47, 7400 Herning
Denmark
T/F: 97- 155299

T.C.C
Groot Hertoginneisaan
2517 BL Den Haag, Nederland
Tel:070 - 346 1963 Fax:384 0583

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F: 435 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia.
T: 03-470 6441 F: 560 8224